மாலை ஐந்து

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - ௯0 (1995)

மாலை ஐந்து

1. கயற்கண்ணி மாலை	1
2. களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டை மணிமாலை	59
3. திருக்காளத்தி இட்டகாமிய மாலை	68
4. பழனி இரட்டை மணிமாலை	83
5. மகர நெடுங்குழைக்காதர் பாமாலை	91

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர் - சென்னை-600 090

1995

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல்நிலையம் வெளியீடு எண் - 125

நூல்நிலைய முதற்பதிப்பு 1995 - 1200 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90

விலை ரூ.30/-

Typeset and Printed by: **SHRI VIGNESH PRINTS**
158, Lake view Road, West Mambalam, Madras-33.

இப்புத்தகத்தில் அடங்கியவை

1. கயற்கண்ணி மாலை 1

2. களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டை மணிமாலை 59

3. திருக்காளத்தி இட்டகாமிய மாலை 68

4. பழனி இரட்டை மணிமாலை 83

5. மகர நெடுங்குழைக்காதர் பாமாலை 91

பதிப்பாளர் குறிப்பு

தமிழ்நாட்டில் பல காலமாக மறைந்திருந்த சங்க நூல்களை வெளிப்படுத்திய பெருமை ஐயரவர்களுக்கே உண்டு. தம் இளமைக் காலத்தில் சிறிய பாடல்களையும், தனிப் பிரபந்தங்களையும் பாடியிருக்கிறார்கள். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் கல்வி பயின்றபோதும் பல பிரபந்தங்களைப் பாடியிருக்கிறார்கள். அவர்கள் இயற்றிய நூல்கள் வரிசையில் ''சுயற்கண்ணி மாலை''யும் ஒன்று. 1. இந்நூலில், கயற்கண்ணிமாலை, அங்கயற்கண்ணிமாலை செய்-58., கடம்பவனவல்லி பதிகம், ஸ்ரீசுந்தரேசுவரர் துதி என நான்கு நூல்கள் உள்ளன. தேவார பாராயணத்திலும், பிற நூல்கள் பாராயணத்திலும் இவருக்குள்ள ஆர்வத்தை இந்நூல்களின் மூலமாக அறியலாம். 1970-ஆம் ஆண்டு நூல்நிலையம் பதிப்பித்துள்ளது.

2. களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டைமணி மாலை

களக்காடு என்னும் தலம் நான்குநேரித் தாலுக்காவில் உள்ளது. சோராரண்யம் என்றும் புன்னைவனம் என்றும் வழங்கும். சுவாமி - சத்தியவாசகர். (பொய்யாமொழியார்) அம்பிகை - ஆவுடைநாயகி. 1932-ஆம் ஆண்டு கலைமகள் பத்திரிகையில் ஐயரவர்கள் குறிப்புரையுடன் வெளியிட்டுள்ளார்கள்.

3. திருக்காளத்தி இட்டகாமிய மாலை

திருக்காளத்தி ரேணிகுண்டா புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கில் 15 கல் தொலைவில் உள்ளது. சுவர்ணமுகி என்ற ஆறு வடக்கு நோக்கி ஓடுகிறது. அந்த ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். பஞ்சபூதத் தலங்களுள் இது வாயுத்தலம். மூலத்தானத்தில் உள்ள விளக்குகள் எப்போதும் சதா அசைந்துகொண்டே இருக்கும். சுயம்புலிங்கம். நீண்ட பல செங்குத்தான் உட்குழிந்த குடைவுகள் நிரம்பிய திருமேனி. பச்சைக்கற்பூரம் சேர்க்கப்பட்ட நீரே அபிஷேகம். தென்கயிலாயம் என்று கூறப்படும் நகரங்களுள் இத்தலமும் ஒன்று. விராட புருஷனுடைய விசுத்தி ஸ்தலம். மேற்கு நோக்கிய சந்நிதி. உருத்திரர் பூசித்த தலம். கோயிலுக்கு வடக்கில் துர்க்காம்பிகை மலை, தெற்கில் கண்ணப்பர் மலை, கிழக்கில் குமாரசுவாமி மலை. ஊர் நடுவில் பிரசந்ந வரதப் பெருமாள் கோயில் இருக்கிறது. மூவரும் பாடிய தலம். சிவராத்திரி அன்று சுவாமி கிரிப் பிரதிக்ஷிணம் வரும்போது அடியார்களுக்குத் தாகசாந்திக்காகத் தண்ணீர்ப் பந்தல் அமைத்து நீர்மோர் முதலியன ஐயரவர்கள் வழங்கினார்கள்.

1938-ஆம் ஆண்டு குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளார்கள்.

பழனி இரட்டைமணி மாலை

பழனி என்பது மலையின் பெயர். அதன் பழம்பெயர் பொதினி. பொதினியே மாறிப் பழனி என்று ஆகியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

முருகன் திருக்கோயில் பழங்கால முதலே இருக்கின்றதென்பதற்குத் திருமுருகாற்றுப்படை முதலிய நூல்கள் பகர்கின்றன.

பொதினி ஆண்டவனுக்குக் கோயிலும் அக்காலத்தில் இருந்தது. பொன் பொதிந்த திருக்கோயில் என்றுகூடத் தோன்றுகிறது.

''ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி'' என்ற அகநானூற்றுப் பாட்டில் ஆவிக்குரிய பொதினியில் 'பொன்னனுடைய உயர்ந்த கோயில் இருந்ததை மாமூலர் என்ற புலவர் சொல்கிறார். இந்நூலில் 20 பாடல்கள் உள்ளன. இந்நூலிற்கு ஐயரவர்கள் குறிப்புரை எழுதிக் கலைமகள் பத்திரிகையில் 1932-ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள்.

5. மகர நெடுங்குழைக்காதர் பாமாலை

இந்நூல் 100 பாடல்களைக் கொண்டது. நூலின் முடிவில் வாழ்த்துப்பா ஒன்று உள்ளது. ஆசிரியர் நாராயண தீக்ஷிதர் என்னும் வைணவப் பெரியார். புதியதும் பழையதும் என்ற நூலில் ஐயரவர்கள் சிறை நீக்கிய செய்யுள் என்ற தலைப்பில் இந்நூல் தோன்றிய வரலாற்றை மிகவும் சுவைபட எழுதியுள்ளார்கள். ஐயரவர்கள் இந்நூலை 1939-ஆம் ஆண்டு குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளார்கள். ஐயரவர்கள் குமாரர் அமரர் எஸ்.கலியாணசுந்தரையர் அவர்கள் 1947-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்கள்.

இவ்வைந்து நூல்களையும் மாலை ஐந்து என்ற தொகுப்பில் நூல்நிலையம் தமிழ் உலகிற்கு அளிக்கின்றது.

இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த விக்னேஷ் பிரிண்டர்ஸ் உரிமையாளர் கார்த்திகேயன் அவர்களுக்கு நூல்நிலையத்தின் சார்பாக நன்றி.

பெசன்ட் நகர்
சென்னை-90
4.1.1995

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித் துறை
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்

கயற்கண்ணி மாலை

[அங்கயற்கண்ணி மாலை, கடம்பவனவல்லி பதிகம்,
ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி என்பவற்றுடன்]

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90
1995

பொருளடக்கம்

	பக்கம்
1. முன்னுரை	v
2. கயற்கண்ணி மாலை	1
2. அங்கயற்கண்ணி மாலை	36
3. கடம்பவன வல்லி பதிகம்	48
5. ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி	52
6. செய்யுள் முதற் குறிப்பகராதி	56

முன்னுரை

பழங்காலத்தில் தமிழ் பயிலும் மாணாக்கர்கள் முறையே ஐந்து வகை இலக்கணங்களையும் தெரிந்து கொள்வார்கள். பல பாடல்களைப் பயின்ற ஊக்கத்தால் செய்யுள் இயற்றும் ஆர்வம் அவர்களுக்கு உண்டாகும். இலக்கியத் தொடர்பினால் சொற்களை ஆளும் வகையும், பொருள்களை அமைக்கும் திறனும், இலக்கணங்களின் பழக்கத்தால் பிழையின்றிப் பாடல் பாடும் ஆற்றலும் அமையும். இளம் பருவத்தில் பலவகை இலக்கியங்களைப் படித்த ஆற்றலைக் கொண்டு தனிப்பாடல்களை முதலில் பாடுவார்கள்; பின்பு சிறு சிறு பிரபந்தங்களைப் பாடுவார்கள். படிக்கும்போதுகூட முதலில் கருவி நூல்களாகிய அந்தாதி, தூது, உலா, கோவை முதலிய பிரபந்தங்களைப் படிப்பது வழக்கம். அவ்வாறே செய்யுள் இயற்றுகின்ற போதும் அந்தாதி முதலிய சிறு பிரபந்தங்களைப் பாடுவது வழக்கம். பெரிய புலவர்கள்கூடத் தொடர்நிலைச் செய்யுளை இயற்றுவதற்கு முன்னால் சிறிய பிரபந்தங்களை இயற்றினார்கள் என்பது வரலாற்றால் தெரிகிறது. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணம் பாடுவதற்கு முன்பு சில சிறு பிரபந்தங்களை இயற்றியிருக்கிறார். இப்படியே வேறு புலவர்களும் செய்திருக்கிறார்கள்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பல பிரபந்தங்களையும் புராணங்களையும் இயற்றிய பெரும் புலவர். அவருடைய வரலாற்றைப் பார்த்தால் சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே அவருடைய கவியாற்றல் எவ்வாறு வளர்ந்தது என்பது புலனாகும். சிறிய பிரபந்தங்களைச் செய்து அப்பால் புராணங்களைப் பாடும் ஆற்றல் அவருக்கு உண்டாயிற்று. பெரிய நூல்களை இயற்றும்போதும் பிரபந்தங்களைச் செய்ததுண்டு. எனினும் செய்யுள் பாடப் புகும்போது முதலில் தனிப் பாடல்களையும் சிறிய சிறிய பிரபந்தங்களையும் இயற்றுவது புலவர்களுடைய வழக்கம்.

தமிழ் நாட்டில் பலகாலமாக மங்கி மறைந்திருந்த சங்க நூல்களை வெளிப்படுத்தித் தண்டமிழ்த் தாய் பல அணிகலன்களைப் பூண்டு களிநடம் புரியச் செய்த வள்ளலாகிய ஐயரவர்கள் தம் இளமைக் காலத்தில் பல ஆசிரியர்களை அண்டிப் 'பருகுவன் அன்ன ஆர்வத்'தோடு நூல்களைப் பயின்றார். இவருடைய பெருந்தாகத்தை மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களே போக்கினார்கள். பிள்ளையவர்களிடம் பயில்வதற்கு முன்பே ஐயரவர்களுக்குத் தமிழில் ஓரளவு புலமை இருந்தது. இலக்கண இலக்கியச் செறிவோடு செய்யுள் பாடும் திறனும் இவரிடத்தில் முகிழ்த்தது. அந்தக் காலத்தில் இவர் சிறிய பாடல்களையும், தனிப் பிரபந்தங்களையும் பாடியிருக்கிறார். பிள்ளையவர்களிடம் வந்து பயின்ற போதும் பல பிரபந்தங்களைப் பாடியதுண்டு. பிற்காலத்திலும் பல செய்யுளைப் பாடிவந்தார். மகா கவியினுடைய மாணாக்கராக இருந்த இந்தப் பெருமானுக்குக் கவிபாடுவதென்பது எளிய செயல்.

ஆனால், பழம் பெரும் புலவர்களுடைய பாடல்களில் ஈடுபட்ட இவர் தம்முடைய கவிகளை விளம்பரப்படுத்திக் கொள்வதை விரும்பவில்லை. ஆயினும் உள்ளுணர்ச்சி உந்தும்போதெல்லாம் பாடி வருவார். சில சிறப்பான

நிகழ்ச்சிகளில் இவர் பாடிய தனிப் பாடல்களை 'என் சரித்திரத்'திலும் பிற கட்டுரைகளிலும் காணலாம். இவர் இரவு நேரத்தில் படுத்துக் கொண்ட பிறகு சிவபெருமானைப் பற்றிப் பல பாடல்களை வாய்மொழியாகச் சொல்லிக் கொண்டு வருவார். அருகில் யாரேனும் படுத்திருந்தால் பழம் பாடலை இவர் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றே தோற்றும். ஓய்வு கொள்ளும்போதெல்லாம் சிவ நாமத்தைச் சொல்வதும், உறங்குவதற்கு முன்பு பல பாடல்களைப் பாடுவதும் இவருக்கு உரிய இயல்பு. மகாகவியின் மாணாக்கராக இருந்தமையினாலும், இயல்பாகச் செய்யுள் இயற்றும் அறி வாற்றல் அமைந்தமையினாலும் இவர் தங்கு தடங்கலின்றிப் பேசுவதைப் போலவே பாடல்களைப் பாடிக் கொண்டு வருவார். சிவபெருமானை மனத்தில் தியானித்துக் கொண்டு நூற்றுக்கணக்கான பாடல்களை அப்படிப் பல இரவுகளில் பாடியது உண்டு. அவற்றை எல்லாம் எழுதுவதற்கு அப்போது அருகில் யார் இருக்க முடியும்? இவ்வாறு இவர் பாடிய பாடல்கள் எல்லாவற்றையும் தொகுத்தால் ஆயிரக்கணக்கில் கிடைக்கும். அவற்றை இவர் எழுதிவைக்கவில்லை. சின்னஞ்சிறு பிராயத்தில் இவர் பாடிய பல சிறு நூல்களும் இவரால் பாதுகாத்து வைக்கப் பெறவில்லை.

இவர் இளமைக் காலத்தில் பல பிரபந்தங்களைப் பாடினார் என்பதை ''என் சரித்திரம்'' கூறும். கல்வி வளர்ச்சியைப் பற்றிச் சொல்லும்போது, 'சிதம்பரம் பிள்ளையிடம் பல ஏட்டுச் சுவடிகள் இருந்தன, அவற்றைத் தனியே ஓர் அறையில் தொகுத்து வைத்துக் கருத்துடன் அவர் பாதுகாத்து வந்தார். அச்சுவடிகளில் சிலவற்றை நான் சில சமயங்களில் படித்துப் பார்ப்பேன். சதகங்கள், மாலைகள் முதலிய நூல்களைப் படித்துப் படித்து உண்டான பழக்கத்தால் அவற்றின் ஓசையைப் பின்பற்றி நான் செய்யுள் இயற்றத் தொடங்கினேன். எதுகை மோனைகள் அமைய வேண்டும் என்பது பழக்கத்தால் ஒருவாறு தெரிய வந்தது. ஆனால் அசை, சீர், தளை, தொடை முதலிய பாகுபாடுகளோ வேறு வகையான யாப்பிலக்கண விதியோ எனக்குத் தெரியவில்லை. சதகப் பாட்டுக்களைப் போன்ற விருத்தங்களைப் பாடலானேன். குன்னத்தில் ஆதிகும்பேசுவரர் விஷயமாகவும் மங்களாம்பிகை விஷயமாகவும் சில பாடல்கள் இயற்றினேன். தாயுமானவர் பாடல், பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முதலியவற்றிலே கண்ட கருத்துக்களை அப்படியே அமைத்தேன். ''நான் பெண்கள் அழகிலே ஈடுபட்டுக் காலத்தைக் கடத்தி விட்டேன். அவர்கள் மயக்கத்திற் பட்டு வாழ்க்கையை வீணாக்கி னேன்'' என்றும், ''செல்வரைப் புகழ்ந்து பாடி அலைந்து துன்புற்றேன்'' என்றும் கருத்துக்களை அமைத்துச் செய்யுட்களை இயற்றினேன். பழம் பாடல்களின் ஓசையை மாதிரியாக வைத்துக்கொண்டு அதைப் போலவே அவற்றின் கருத்துக்களை அப்படியே அமைத்துக் கொள்வதைப் பெருமை யாக நான் கருதினேன்' என்று எழுதியிருக்கிறார்.

வேறோரிடத்தில், 'ஆசிரியர்' சில அன்பர்களுடைய வேண்டுகோளின்படி தஞ்சைக்குச் சென்று ஒரு மாதம் இருந்தார். அப்போது நான் உத்தமதானபுரம் சென்று என் தாய் தந்தையருடன் இருந்து வரலானேன். திருப்பெருந்துறைப் புராணத்தை என் ஆசிரியர் இயற்றிக்கொண்டு வந்த சந்தர்ப்பமாதலின் என் மனம் அவர் கவித்துவத்தில் ஒன்றிப் போயிருந்தது. நானும் செய்யுள் இயற்றும் முயற்சியில் ஈடு படலானேன். உத்தமதானபுரத்தில் தங்கியபோது ஓய்வு இருந்தமையால் அம்முயற்சி அதிகமாயிற்று. தனிப்பாடல்கள் பல இயற்றினேன். முதலில் கலைமகள் விஷயமாகச் செய்யுட்களை இயற்றத்

தொடங்கினேன். நான் சொல்லச் சொலல என் சிறிய தந்தையார் எழுதி வந்தார். சில வெண்பாக்களையும் சில கட்டளைக் கலித்துறைகளையும் இயற்றினேன். இவ்வாறு பாடல்களை இயற்றி வந்தபொழுது என் மனத் துள்ளே ஒரு பெருமிதம் உண்டாகும்' என்று எழுதியிருக்கிறார்.

பிறிதோரிடத்தில், 'அவ்வப்போது சில சிறு பிரபந்தங்களைப் பாடினேன். இவ்விதம் பலவகையிலும் பாடும் பணியில் ஈடுபட்டதால் என் செய்யுள் முயற்சி விருத்தியாகி வந்தது. அதனால் மற்றவர்களுக்குச் சந்தோஷமும் எனக்கு மேன்மேலும் ஊக்கமும் விளைந்தன. சுப்பிரமணிய தேசிகர், ''பிள்ளையவர்களுடைய போக்கை நன்றாகக் கற்றுக் கொண்டிருக்கிறீர். உம்முடைய செய்யுட்கள் அவர்களுடைய ஞாபகத்தை உண்டாக்குகின்றன'' என்று அடிக்கடி சொல்லுவார். பிள்ளையவர்கள் இட்ட பிச்சையே எனது தமிழறிவு என்று வாழ்ந்து வந்த என் உள்ளத்தை அவ்வார்த்தைகள் மிகவும் குளிர்விக்கும்' என்று எழுதியிருக்கிறார்.

இவற்றால் ஐயரவர்களுடைய புலமை ஏற, ஏற, செய்யுள் பாடும் பழக்கம் மிகுதியாகி வந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இவர் பாடிய தனிப்பாடல்கள் இரண்டு தொகுதிகளாக முன்பே இந்த நூல் நிலைய வெளியீடாக வந்திருக்கின்றன. தேவார பாராயணம் செய்த போது பாடிய பாடல்களும், தலங்களுக்குச் சென்றபோது பாடிய செய்யுட்க ளும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய தனிப் பாடல்களும் அந்தத் தொகுதிகளில் இருக்கின்றன. இவர் சின்னஞ்சிறு பிராயத்தில் பாடிய பல பிரபந்தங்கள் இப்போது கிடைக்கவில்லை.

இவர் சேகரித்து வைத்திருந்த குறிப்புக்களை எல்லாம் அண்மையில் ஆராய்ந்து பார்த்தபோது சில சிறிய பிரபந்தங்கள் கிடைத்தன. அவற்றின் நடையையும், உள்ளுறையையும் பார்க்கையில் அவை ஐயரவர்கள் பாடிய நூல்கள் என்றே தோற்றுகின்றன. இப்போது கிடைத்தவற்றைத் தொகுத்து இந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறோம். இவற்றில் 'கயற் கண்ணிமா லை', 'அங்கயற் கண்ணிமாலை','கடம்பவன வல்லி பதிகம்' 'ஸ்ரீ சுந்தரேசுவ ரர் துதி' என்னும் நான்கு பிரபந்தங்கள் இருக்கின்றன. இவற்றுள் முதலில் இரண்டும் இளமைக் காலத்தில் பாடியனவாகத் தோற்றுகின்றன. பின் இரண்டும் பிற்காலத்தில் இயற்றியிருத்தல் வேண்டும். அவற்றில் கடம்பவன வல்லி பதிகம் எழுதிய குறிப்புப் புத்தகத்தில், 'மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இயற்றிய சகலகலாவல்லி மாலைபோல, அம்பிகை, கலைமகள், திருமகள் மீது திருப்பனந்தாள் மடாதிபதி விரும்பிய வண்ணம் பாடியன' என்ற குறிப்பு இருந்தது. அந்தக் குறிப்பிலிருந்து இவர் கலைமகள் மீதும், திருமகள் மீதும், வேறு இரண்டு பதிகங்கள் பாடியிருக்க வேண்டுமென்று தோற்றுகிறது. இத்தகைய நூல்க ளைத் தாம் செய்ததாக இவர் சொல்லிக் கொள்ளவில்லை. அதனால் அவைபற்றிய விவரங்கள் இவரோடு பழகினவர்களுக்கும் தெரியவில்லை.

முதலில் உள்ள இரண்டு நூல்களும் இளமைப் பருவத்தில் பாடியன ஆதலின் ஐயரவர்கள் 'என் சரித்திரத்தில்' குறித்துள்ளபடி பழைய புலவர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வது போன்ற அமைப்புக்களை இந்த நூல்களிலுள்ள செய்யுட்களில் பார்க்கலாம். மங்கையர்பால் மனம் மயங்கியது முதலிய பருவத்திற்கு அப்பாற்பட்ட குற்றங்களைச் சொன் னவை, முந்தையோர் பாடல்களை அடியொற்றிப் பாடினவை.

இப் பெரும் பேராசிரியர் திருவிளையாடல் புராணத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். இவரே பல சமயங்களில் திருவிளையாடல் புராணச் சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார். ஆகையால் மதுரையை ஒட்டியே இந்தப் பிரபந்தங்கள் இவர் திருவாக்கில் எழுந்தன. இவற்றில் பல திருவிளையாடற் கதைகளைக் குறித்திருக்கிறார்.

கயற்கண்ணி மாலையில் மீனாட்சியம்மையின் பெருமைகளைப் பலவாறு பாடியிருக்கிறார். அந்த நூலின் 96-வது பாடலிலிருந்து தொடர்ச்சியாகத் திருவிளையாடல் வரலாறுகளை அமைக்கிறார். அவற்றின் தொடர்பாக இரண்டாவது பிரபந்தமாகிய அங்கயற்கண்ணி மாலையில் எஞ்சிய திருவிளையாடற் கதைகள் வருகின்றன. ஆனால் அந்த நூல் முழுவதும் கிடைக்கவில்லை. 57 செய்யுட்களும்,58ஆவது செய்யுளின் ஒரு பகுதியும் கிடைத்துள்ளன. அவற்றின் அமைப்பைப் பார்க்கும்போது திருவிளையாடல் வரலாறு முழுவதும் சொல்லி, வேறு கருத்துக்களையும் அமைத்து நூறு செய்யுட்களால் பிரபந்தத்தை நிறைவேற்றியிருக்க வேண்டுமென்று தோற்றுகிறது.

தலங்களைப் பற்றிய செய்திகளை யார் சொன்னாலும் தொகுப்பது இப்புலவர் பெருமானுக்கு இயல்பாக இருந்தது. இவர் குறித்துள்ள குறிப்புக்களில் எத்தனையோ தலங்களைப் பற்றிய நுட்பங்களைக் காணலாம். ஆகவே, இவர் பாடிய பாடல்களில் ஒரு தலத்தைப் பற்றிய நூலாக இருந்தாலும் வேறு பல தலங்களைப் பற்றிய செய்திகள் இடையில் வருதல் வியப்பன்று. அந்த வகையில் கயற்கண்ணி மாலையில் காஞ்சிபுரம், திருவாஞ்சியம், இன்னம்பர் ஆகிய தலச் செய்திகள் வருகின்றன. பின்னுள்ள நூல்களில் வேணுபுரத்தையும், திருவக்கரையையும் குறிக்கிறார்.

அந்தக் காலத்தில் ஐயரவர்களுக்குத் தண்டமிழ்ப் புலமையில் எத்தனை ஆசை இருந்தது என்பதனைப் பல குறிப்புக்கள் காட்டுகின்றன.

''குவியாதென் புந்தி குசைநுனி போல்மிகக் கூர்ந்திடவும்'' (18)
''.........................கல்வி விதமனைத்தும்
வடியாது நித்தம் பெருகவும்'' (89)

என்பவற்றில் இவ்வேட்கையைக் காணுகின்றோம். 'மறதி இல்லாமலும் கலக்கம் இல்லாமலும் தெளிவுடன் தமிழறிவு சிறக்க வேண்டும்' என்ற விருப்பம் இவர் உள்ளத்தில் இருந்தது.

''பொருத்த முறுதமிழ்ப் பன்னூலும் ஆய்ந்தென்றூர்
போதும்நில்லாது
உருத்த மறவிக் கடற்படித் தேயல்லல் உற்றுமிக
வருத்தம் அடைந்தனன்'' (67)
''திடனார் தமிழ்மொழிப் பன்னூல்கள் ஆய்ந்தும் தெளிவின்றிஉன்
மடனார்த்த என்னை'' (68)
''சீரினை மேவிய செந்தமிழ் கற்றும் தெளிதலின்றிப்
போரினை மேவிய வினைை'' (8)

என்பவற்றைக் காண்க.

அங்கயற் கண்ணி மாலையிலும்,

''பாடியலுந் தமிழ்நூல்கள் பலபடித்தும் அறிவின்றி'' (13)

''தேன்தோய் சுவைத்தமிழைத் தெள்ளித் தெளியாது'' (44)
என வருவனவற்றையும் காண்க.

பேரவைகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் வேண்டும் என்பதை இறைவியிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்:

''படித்தவை சொல்லும் திறமை படைத்தலின்றித் துடித்தேன்'' (5)
''அவையிடை மேவுதற்கும்......... எய்யாது'' (12)
''புவிபாலர் முன்னம் பொருந்தியஞ் சாது புகன்றிடவும்'' (18)
''அவ்வளக்கவியை
ஏய்ந்த புலவர் இடைப்பிர சங்கம் இயற்றவும்'' (66)

என்பவற்றில் இந்த விழைவு பொலிவதைக் காணலாம். இனிய கவிபாட வேண்டும் என்னும் வேட்கையைப் பல பாடல்களில் புலப்படுத்துகின்றார்.

''செம்பொருட் பாஒதுதற்கும்'' (12)
''நாற்கவி பாடவும்'' (18)
''நீட்சிபெறும் இன்புறு கவிபாட'' (33)
''நாற்கவி பாடச்செய்வாய்'' (47)

முதலியவற்றைக் காண்க. இவற்றையன்றி 47, 49, 64, 66, 67, 68, 71, 73, 84, 89, 98-ஆம் பாடல்களிலும், அங்கயற் கண்ணி மாலையில், 14, 17, 22, 42-ஆம் பாடல்களிலும் இக் கருத்தைக் காணலாம்.

இத் தமிழ் வள்ளல் சைவத்தில் ஊற்றமுடையவர். தேவாரத்தில் பற்றுடையவர். பிற்காலத்தில் நாடோறும் தேவார பாராயணம் செய்து வந்தார். சிவபூசையையும் மேற்கொண்டு வந்தார். இவருடைய தந்தையார் சிவ பூசா துரந்தரர். ஆதலின் இளமைப் பருவத்திலே சிவபக்தி இப்புலவர் பெருமானுடைய உள்ளத்தில் முளைவிட்டு வளரலாயிற்று.

தேவார பாராயணத்திலும் பிற பாராயணத்திலும் இவருக்கிருந்த ஆர்வம்,

''சைவநல் ஆரியர்சொல், தேவார பாரணஞ் செய்யாது'' (கயற்.3)
''நின்சீரை அடிக்கடியான் பாராயணஞ்செயச் செய்வாய்'' (47)
என்பவற்றில் புலனாகிறது.

சிவ பூசையில் உள்ள பற்று,
''சிவபூசை செய்யாதே திரியேனை'' (4)
''பூசனைபண்ணிப் பின்னர் உண்ணேனெனினும்'' (9)
என்பவற்றால் தெரிய வரும்.

இந்தப் பெரும்புலவருக்கு இளமையிலேயே பல நூல்களில் பயிற்சி இருந்தமையை அவ்வந் நூல்களில் உள்ள சொல்லையும் பொருளையும் அங்கங்கு ஆளுதலால் உணரலாம்.

''பந்தனைப் பாவியை மக்கட் பதடியை'' (8)
என்பதில் வரும் மக்கட்பதடி என்பது திருக்குறளில் வரும் சொற்றொடர் ஆட்சி.

"ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" என்பதைப் படித்த நினைவில் எழுந்தது.

"ஏரிப் புனலன்ன பொன்னே" (கடம்ப. 8)
என்னும் பகுதி. கம்பராமாயணத்தில் வரும் சாதுகை என்னும் சொல்லை,
"சாதுகை மாந்தர்தம் சங்கமுற" (79)
என்னும் இடத்தில் ஆளுகிறார்.

"பம்புதிரைக் கடலதனைப் பகபதிவே ணியிலுறுநாள்
கம்புதமார் தருகூடல் அங்கயற்க ணாயகியே" (11)

என்பதில் அம்புதம் என்ற அரிய சொல்லை ஆள்கிறார். அது மேகத்தைக் குறிப்பது. அது, "அம்புதம் நால்களால் நீடு கூடல்" என்ற தேவாரத்தைக் கண்டு அமைத்தது. குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், "ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன் அம்புலீ யாடவாவே" என்பதில் இறைவனை 'ஆணிப்பொன் வில்லி' என்கிறார். அத் தொடரை இக்கவிஞர்,

"ஆணிப்பொன் வில்லி தனக்கமிழ்தே" (கடம்ப. 10)
என்பதில் அமைத்துள்ளார்.

"எல்லாஞ்செய் சித்த ரெனவேயக்
காலந் தெழுந்தருளும்
அல்லார் களத்தர்க்கிப் பொல்லானை
யாருமென் றன்னவரோ
டுல்லாச மாக விருக்கும்
பொழுதி லுரைத்தருள்வாய்
கல்லார் தமையும் புரப்பாய்தென்
கூடற் கயற்கண்ணியே" (35)

என்பது,

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச்சொன்னால்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோதெல் வேலி வடிவம்மையே"

என்னும் பழம் பாடலை ஒட்டிப் பாடியதாகும்.

"வித்தா டவிக்கன்றி நின்பாத தாமரை மேவுறலென்
சிந்தா டவிக்கிலை யாதுகொ லோசெக மீன்றவன்னே
சந்தா டவிசண்ப காடவி கற்ப தருவடவி
வந்தா ரடவி பலசூழ் கடம்ப வனவல்லியே" (கடம்ப. 3)

என்னும் பாடல், 'வெண்டாமரைக்கன்றி' என்னும் சகலகலாவல்லி மாலைப் பாடலை அடியொற்றியதாகும்.

சிலேடை நயம் அமைந்த சில வினாக்களைச் சில பாடல்களிற் பார்க்கலாம்.

"மருவழி யாத்தனிர் மாநிழ லூரடென்றும் வாழ்பவன்சொல்
இருபடி முன்ன மளித்தா ளெனின்மற் றியைபறச்சொல்
ஒருபடி நீயளித் திட்டதென்னே" (15)

என்பதில் அளக்கும் படி, பூமி என்ற இரண்டு பொருள்களில் படி என்னும் சொல்லை வைத்து 'வினாவுகின்ற நயம் அறிந்து இன்புறற்குரியது. இப்ப டியே வன்னி என்னும் சொல்லுக்கு நெருப்பு, கிளி என்றுள்ள இரண்டு பொருளையும் எண்ணி,

''சென்னி யிடைவிண் ணதிருடு மண்ணல் திருக்கரத்து
வன்னிவைத் தாளென்ன வோநீயுஞ் செங்கையில் வன்னிகொண்டாய்'' (23)

என்ற நயமான வினா எழுகிறது. இவற்றை யன்றி வேறு வகையில் நயமான சில வினாக்கள் கயற்கண்ணிமாலையில் அமைந்திருக்கின்றன.

'நீ அறப்பெருஞ் செல்வியாக இருந்தும் நின் 'கணவருக்குப் பிட்சாடனர் என்னும் பேர் இருப்பதை ஏன் நீக்கவில்லை? (14) என்பது ஒரு கேள்வி.

'எல்லா உலகையும் பாதுகாக்கும் நீ பாண்டி நாட்டுக்கு மாத்திரம் அரசியாக இருந்து ஆண்டது ஏன்? (16) என்பது மற்றொரு நயமான வினா. மலையத்துவச பாண்டியனுக்குப் பின்பு நாட்டை நீ ஆண்டதறிந்தும் உன்னை அபலை என்பது நியாயமா?' (17) என்பது ஒரு சுவையான கேள்வி. 'சிவபெருமானுடைய இடப்பாகத்தில் எப்பொழுதும் தங்கி இருக்கும் நீ இமய அரசன் மகளாகவும், பாண்டியன் மகளாகவும் வந்தது எப்படி?' (19) என்பது பிறிதொரு வினா.

'பாம்புகள் உன்னுடைய மயில் போன்ற சாயலுக்கு அஞ்சி ஒரு துன்பம் விளைவிக்காமல் இருக்கும் என்று எண்ணியோ அவற்றைச் சிவபெருமான் அணிகலனாக அணிந்தான்?' (26) என்பதிலும், 'விழிகளுக்கு எத்தனையோ உவமை இருக்கவும், கயற்கண்ணியாகிய உன் கண்ணிற்கு உவமை ஆகும் பொருட்டுக் கயல்மீன் என்ன புண்ணியம் செய்ததுவோ?' (27) என்பதிலும் 'சிவபெருமானோடு உன்னை அபேதமென்று சொல்பவர்கள் நாணம் அடை யும்படி நீ தனியே கன்னிகையாய் நெடுங்காலம் உலகை ஆண்டது ஏன்?' (30) என்பதிலும், ' நீ மதுரையில் அரசியாக ஆண்டதைச் சற்றும் எண்ணாமல் உன் கணவர் அதே நகர வீதியில் திருவடி வருந்த வளையையும் விறகையும் விற்றுத் திரிந்தது முறையா?' (34) என்பதிலும், 'வெள்ளி மலையை இல்லாகவும், தங்கமலையை வில்லாகவும் கொண்ட சிவபெருமான் வீடுதோ றும் பிச்சை வாங்குவது முறையா?' (37) என்பதிலும் உள்ள நயம் அறிந்து மகிழ்வதற்குரியது.

வடக்கே இமாசலத்தில் பார்வதி திருமணம் நிகழ்ந்தபோது கூட்ட மிகுதியால் அம்மலை தாழ்ந்தது. அப்போது நிலத்தைச் சமப்படுத்துவதற்காக இறைவன் அகத்திய முனிவரைத் தென்னாட்டுக்கு அனுப்பினான். அவர் பொதியில் மலையிற் சென்று தங்க, நிலம் சமநிலை பெற்றது. திருமணம் நிறைவேறிய பின் மீண்டும் திருக்கைலைக்குப் போக வேண்டியவர் அகத்தியர். ஆயினும் பாண்டி நாடும், பொதியிலும், தென்றலும், தமிழும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன வாதலின் அவர் இங்கே தங்கிவிட்டார். இதனால் பாண்டிநாடு முதலியவற்றின் சிறப்புப் புலனாகி றது. இது குறிப்பாகப் புலப்படும்படி,

''முன்ன மதனின் மணக்கோலங் கண்டிட முப்புவனம்
மன்னு மனைவரும் வந்து மகத்திய மாதவன்றான்
என்னந்த வுத்தரத் தேகா திருந்தன னென்றெய்வமே
கன்னங் கறுத்த குழலாய்தென் கூடற் கயற்கண்ணியே'' (31)

என்ற வினாவை எழுப்புகிறார்.

முன்னுள்ள இரண்டு நூலகளுக்கும் பின்னுள்ள இரண்டு நூல்களுக்கும் நடையிலும் பொருளமைதியிலும் வேறுபாடு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. முன்னுள்ளவற்றில் தமிழறிவு, கவிபாடும் ஆற்றல் முதலியவற்றை இளைய உள்ளம் அவாவிப் பாடுவதைக் காண்கிறோம்; பின்னுள்ளவற்றில் அவை இல்லை. முன்னுள்ளவற்றில் தம்முடைய குறைகளாகப் பலவற்றைக் கூறுகிறார். பழம்புலவர்கள் கூறுவனபோல மங்கையர் மயலில் உழந்தேனென்றும், புல்லரைப் பாடி வருந்தினேனென்றும், புறச்சமயம் புக்குக் குலைந்தேனென்றும் இளம்புலவர் பாடுகிறார். அவர் புறச்சமயம் புக்கு வருந்துவதற்கு இடமே இல்லை. ஆயினும் அங்கயற் கண்ணி மாலையில், ''பாழ்த்த புறச்சமயப் பாழை அடைந்துபிறர், தாழ்த்த வருந்தும் தமியேனை'' (30) என்கிறார். இத்தகையவை அநுபவத்தை உரைக்காமல், பழம்பாடல்களைப் பின்பற்றிப் பாடியவை என்பது தெள்ளத் தெளியத் தெரிகிறது. 'என் சரித்திர'த்தில் இதைப்பற்றி இப்புலவர்பிரான் கூறியிருப்பதை முன்பு பார்த்தோம்.

இளம்பருவத்தில் முளைவிட்ட கவிப்புலமை, மாபெருங் கவிஞர் ஒருவர்பால் கற்கும்போது தளிர்விட்டு அரும்பி மலர்ந்து, முதிர்ந்த பருவத்தில் இப்பெருமானிடம் கனிந்து நின்றது.

இவர் இயற்றிய செய்யுட்கள் முழுவதும் கிடைக்காவிட்டாலும் கிடைத்தவற்றையேனும் தொகுத்து வெளியிடும் பேறு கிடைத்ததற்கு முருகன் திருவருளை வழுத்துகிறேன். இனியும் பாடல்கள் கிடைக்குமானால் அவற்றையும் வெளியிடும் வாய்ப்பு நேரும் என்று எண்ணுகிறேன்.

இந்த நூலை வெளியிடுவதற்குத் திருமயிலை ஆரியமத சபையினர் பொருளுதவி புரிந்தனர். அவர்களுக்கு இந்த நூல் நிலையத்தின் சார்பில் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை ஆராய்ந்து குறிப்புரை எழுதி வெளியிடும்போது சிரஞ்சீவி பாலகவி மு.கோ. இராமனும், சிரஞ்சீவி வித்துவான் ஜி.எஸ். அனந்த நாராயணனும் உதவி புரிந்தார்கள். அவர்களுக்கு என் நன்றியறிவு உரியது.

'காந்தமலை'
சென்னை-28

கி.வா. ஜகந்நாதன்
7-11-1970

கயற்கண்ணி மாலை

காப்பு

(தரவு கொச்சகக் கலிப்பா)

செம்மைவள மல்கு திருக்கூட லங்கயற்கண்
அம்மை யடியிணையை யன்பினுடன் யான்பாடத்
தம்மை மறந்த தபோதனர்முன் வந்தருளும்
வெம்மைதவி ரருட்சித்தி வேழத்தைப் போற்றுவமே.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

1. தடையேனைத் தீயவர்ச் சார்ந்துதுன்
மார்க்கஞ் சரிக்கவிழை
நடையேனை வஞ்சமுஞ் சூதும்பொல்
லாங்கு நறுமொறுப்பும்
உடையேனை நின்னை யொருகாலத்
தேனு முரைத்தறியாக்
கடையேனைக் காத்தரு டென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

காப்பு. திருக்கூடல் - மதுரை. அங்கயற்கண் அம்மை - மீனாட்சி. சித்திவேழம் - இத்தலத்திலுள்ள விநாயகர்.

1. தடையேனை - பல தடைகளை உடைய என்னை. தீயவர் சார்ந்து தீயவர்களைச் சார்ந்து. சரிக்க - செல்ல. நடையேனை - நடத்தை உடைய என்னை. நறுமொறுப்பு - பொறாமை.

2\. மாத்தரு நீழ லிடத்தா
  னிடத்து வளர்ந்தகிலம்
பூத்தருள் வாயருள் பூண்டருள்
  வாயன்பர் புந்திவிழை
வீத்தருள் வாயன்பு சற்றுமில்
  லேனையு மெண்ணலின்றிக்
காத்தருள் வாய்வையைத் தென்கூடல்
  வாழுங் கயற்கண்ணியே.

3\. நாவார நின்னை நவிலாது
  சைவநல் லாரியர்சொல்
தேவார பாரணஞ் செய்யாது
  வீணரைச் சேர்ந்தொழுகித்
தீவாய் நரகுக் கிரையாகு
  வேனைத் தியங்கவிடேல்
காவாய் புனல்வையைத் தென்கூடல்
  வாழும் கயற்கண்ணியே.

4\. வேஞ்சின மாதி மிகுத்தே
  சிதடரை மேவிநிதம்
தாஞ்சிவ பூசை செயாதே
  திரியெனைச் சார்ந்தருள்வாய்
வாஞ்சிய மாதித் தலந்தோறு
  மேவிய வள்ளறனைக்
காஞ்சியிற் பூசிக்குந் தென்கூடல்
  வாழுங் கயற்கண்ணியே.

2\. மாத்தரு நீழல் இடத்தான் - காஞ்சிபுரத்தில் மாமரத்தின் நிழலில் உள்ளவன். இடத்து - வாம பாகத்தில். ஈத்தருள்வாயென்பது எதுகை நோக்கி வலித்தது. எண்ணல் இன்றி - என் குற்றங்களை எண்ணுதல் இல்லாமல்.

3\. சைவம் நல் ஆரியர் - சைவ சமய ஆசாரியர்கள். தேவாரம் என்றாலும் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றையும் கொள்க. பாரணம் - பாராயணம்.

4\. வேம் சினம் - உள்ளம் வெப்பமுற்றுத் தோன்றும் சினம். சினம் ஆதி என்றது, காமம், லோபம், மோகம், கோபம், மதம், மாச்சரியம் என்பவற்றை. சிதடரை - குருடரை; இங்கே ஞானக்கண் இல்லாதவரை. தாம் - மனம் விரும்பித் தாவுகின்ற. திரிகின்ற என்னை. வாஞ்சியம் - சோழ நாட்டிலுள்ள திருவாஞ்சிய மென்னும் சிவத்தலம்.

5. படித்தேன் படித்தவை சொல்லும்
திறமை படைத்தலின்றித்
துடித்தேனி னன்பர்கள் போலே
யெவரும் சொலும்பொருட்டு
நடித்தே னினிச்சகி யேனென்னைக்
காத்தரு ணாரணிபூங்
கடித்தே னுகுபொழிற் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

6. வஞ்சன் பிறரை யிகழ்ந்தேகந்
தீமை மலிந்தியலும்
நெஞ்சன் கொடியரைக் கொண்டாடி
வாடுபு நின்னைவிட்ட
தஞ்சனென் றாலுநின் மஞ்சனன்
றோவெற் றளரவிடேல்
கஞ்சன் புகழ்வுறு தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

7. வாரணி கொங்கை மடவார்
கலவி மயலிற்பட்டே
தாரணி யேசத் தளர்வேனைத்
துன்பிடைத் தள்ளிவிடேல்
நாரணி யாருயிர் நாயக
மேமுன் நரலைதந்த
காரணி கண்ட ரிடத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

5. ''இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற, துணர விரித்துரையாதார்'' (குறள், 650) என்பதை நினைந்து, 'படித்தவை சொல்லுந் திறமை படைத்தலின் றித் துடித்தேன்' என்றார். நடித்தேன்: 'நாடகத்தால் உன் அடியார் போல்நடித்து' (திருவாசகம்). கடி - நறுமணமுடைய.

6. வாடுபு - வாடி. தஞ்சன் - எளியவன். மஞ்சன் - மைந்தன்; ''நானுனக்கு மகனலனோ'' (திருவருட்பா). எற்றளரவிடேல் - என்னைத் தளரவிடாதே, கஞ்சன் - தாமரையில் வாழும் பிரமன்.

7. வார் - கச்சு. துன்பிடை - துன்பத்தில். நரலை - கடல். கார் - நஞ்சு; ஆகுபெயர்.

8. நிந்தனைக் கொள்கல மானேனை
நீசனை நேயமிலாப்
பந்தனைப் பாவியை மக்கட்
பதடியைப் பார்த்தருள்வாய்
சிந்தனை வாக்கினுக் கெட்டாத
சிற்பரன் றேவிசெவ்வேற்
கந்தனை யீன்றரு ளன்னேதென்
கூடற் கயற்கண்ணியே.

9. பண்ணே னெனினும் நினைத்துதி
பூசனை பண்ணிப்பின்னர்
உண்ணே னெனினு முனதடி
யார்தமக் குற்றசெய்ய
நண்ணே னெனினும் நினைவலஞ்
செய்து நலமடையக்
கண்ணே னெனினு மருள்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

10. சையந் தனக்கு நிகராகும்
யான்செ யதன்மமிந்த
வையந் தனக்குப் பெரும்பார
மாமென் வடிவமந்தோ
உய்யந்த மார்க்க மறியா
துழிதரு கிற்குமிந்தக்
கையன் றனைவிட் டிடாதேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

8. கொள்கலம் - இருப்பிடம். பந்தனை - பந்தத்தை உடைய என்னை. மக்கட் பதடி - பயனில சொல்லுதலால் மக்களுட் பதர் போன்றவன்; ''பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல், மக்கட் பதடி எனல்'' (குறள், 196).

9. துதி பண்ணேனெனினும், பூசனை பண்ணிப் பின்னருண்ணேன்; ''உன்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்'' (தேவாரம்). உற்ற - ஏற்ற பணிவிடைகளை. கண்ணேன் - நினையேன்.

10. சையம் - மலை. நான் செய்த அதன்மங்கள் மலைக்கு ஒப்பாகும்; என் வடிவம் பூமிக்குப் பாரமாகும். உய் அந்த மார்க்கம் - அந்தச் சிறந்த சன்மார்க்கத்தை; அந்த; உலகறி கட்டு. உழிதருகிற்கும் - அலையும். கையன் - இழிந்தவன்.

11\. பெரியா னெவனம்மி னென்றே
  தருக்குபு பேரறத்தில்
தரியா துழலும் தமியனை
  யாளத் தகுமுனக்கே
கிரியா ளரசன் றவத்தா
  லுதித்தருள் கேகயமே
கரியா னனத்தனைத் தந்தாய்தென்
  கூடற் கயற்கண்ணியே.

12\. மெய்யா வுரைக்கின் றனனா
  லவையிடை மேவுதற்கும்
நையாத செம்பொருட் பாவோது
  தற்கு நவிலுதற்கும்
எய்யா துழலுவ னின்னன்றி
  யோர்துணை யானறியேன்
கையா வமுதக் கடலேதென்
  கூடற் கயற்கண்ணியே.

13\. மாணாத புல்லர்கள் கூட்டங்
  கெழுமி மகிழ்ந்துநின்னைப்
பேணாத நாயிற் கொடியே
  னெனினும் பெரிதுமஞ்சி
நாணாது நின்னைச் சரண்புக்
  கமையினிந் நாயினுக்குக்
காணாத காட்சி யருள்வாய்தென்
  கூடற் கயற்கண்ணியே.

---

11. நம்மின் - நம்மைக்காட்டிலும். தருக்குபு - செருக்கடைந்து. தரியாது - தங்காமல். தமியனை - துணையின்றி தனியாகவுள்ள அடியேனை. கிரி ஆள் அரசன் - மலையரசனாகிய இமவான். கேகயமே - மென்மையால் மயிலைப் போன்றவளே. கரி ஆனனத்தன் - யானை முகமுடைய விநாயகன்.

12. அவையிடை - நல்லோர் கூடிய சபையில். நையாத - குற்றத்தால் நலிவுபடாத. செம்பொருள் - செம்மையான பொருளையுடைய. பா ஓதுதற்கும் - பிறரியற்றிய பாக்களைப் பலகாலும் படிப்பதற்கும். நவிலுதற்கும் - நானே புதிய பாடலைச் சொல்லுவதற்கும். எய்யாது - அறியாமல். நின் அன்றி - நின்னை அல்லாமல். கையா– கைப்புச் சுவையில்லாத.

13. மாணாத - சிறப்பைப் பெறாத. புல்லர்கள் - இழிதகைமை உடையவர் கள். கெழுமி - பொருந்தி. பேணாத கொடியேன், நாயிற் கொடியேன். காணாத - இதுகாறும் அடியேன் காணாத.

14. இன்னம்ப ராதி யிடந்தோறு
நாளு மெழுந்தருளும்
நின்னன் பருக்குப்பிச் சாடன
நாமமென் நீக்கிலைநீ
முன்னம் படிதனை யீந்து
மிதனை மொழிந்திடுவாய்
கன்னன் மொழியுடைக் கிள்ளாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

15. மருவழி யாத்தளிர் மாநிழ
லூடென்றும் வாழ்பவன்சொல்
இருபடி முன்ன மளித்தா
னெனின்மற் றியைபறச்சொல்
ஒருபடி நீயளித் திட்டதென்
னேயிஃ் துரைத்தருள்வாய்
கருவழித் தாளு மமுதேதென்
கூடற் கயற்கண்ணியே.

16. எல்லா வுலகு மளித்தர
சாளு மியல்புடைநீ
மல்லார் திணிபுயப் பாண்டிய
னாட்டினை மட்டுமணி
வில்லார் முடியணிந் தேயர
சாளும் விதமென்கொலோ
கல்லார்க் கணுகருந் தேனேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

14. இன்னம்பர் - சோழ நாட்டில் உள்ள ஒரு சிவத்தலம். நின் அன்பர் என்றது சிவபிரானை. படிதனை என்றது இருநாழி நெல்லை. கச்சியில் சிவபெருமான் உமாதேவியாருக்கு இருநாழி நெல்லைத் தந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கச் செய்தான் என்பது புராண வரலாறு. அறப்பெருஞ் செல்வியாக இருந்தும் உன்னுடைய நாயகனுக்குள்ள பிக்ஷாடனர் என்ற பெயரைப் போக்கவில்லையே, இதன் காரணம் என்ன என்றபடி. கன்னல் - கரும்பு. கிள்ளாய் - கிளியைப் போன்றவளே.

15. மரு - நறுமணம். மாநிழல் ஊடு என்றும் வாழ்பவன் - கச்சி ஏகம்பர். சொல் - நெல். இருபடி - இரண்டு படி. மற்று: அசை. இயைபு அற - பொருத்தம் அறும்படி. சொல் - சொல்லுகின்ற. ஒரு படி - ஓர் உலகத்தை. இறைவன் இரண்டு படியை அளிக்க நீ ஒரு படியை அளித்தாய் என்பது நயம். கரு - பிறப்பு.

16. மல் ஆர் - மற்போர் புரியும் செயல் நிறைந்த. திணி புயம் - செறிந்த தோள். மணி வில் ஆர் - நவமணிகளின் ஒளி பொருந்திய. உலகம் எல்லாவற்றையும் பாதுகாத்தருளும் அகிலாண்டேசுவரியாகிய நீ மீனாட்சியாகப் பாண்டியன் நாட்டினை மட்டும் ஆட்சிபுரிந்தது ஏன் என்றபடி.

17. மலையத் துவச வழுதிக்குப்
    பின்னளை வாரிதிசூழ்
வலையத்தை நீபரித் தாண்டருள்
    செய்த வகையறிந்தும்
அலையத்தை மேவு மறிவோ
    ரபலையென் பாரதென்னே
கலையத்தை நானவி லேன்வைவையச்
    கூடற் கயற்கண்ணியே.

18. புவிபாலர் முன்னம் பொருந்தியஞ்
    சாது புகன்றிடவும்
குவியாதென் புந்தி குசைநுனி
    போன்மிகக் கூர்ந்திடவும்
தவியாது கேட்பவர்க் கெல்லா
    மினிதுறச் சாற்றவுநாற்
கவிபா டவுமருள் செய்வாய்தென்
    கூடற் கயற்கண்ணியே.

19. தனிவா யமல னிடம்பிரி
    யாதென்றுந் தங்கியநீ
பனிவா யிமயப் பருப்பத
    ராசன்றன் பாவையென

---

17. மலையத்துவச வழுதிக்குப்பின் - தின்னுடைய தந்தையாகிய மலயத்துவச பாண்டியனுக்குப்பின். வாரிதிசூழ் வலையம் - பூமி, பரித்து - தாங்கி. அலை அத்தை மேவும் அறிவோர் - கடலை உவமையாகப் பொருந்தும் அறிவை உடையவர்; அலை - கடல்; ஆகுபெயர்; அத்தை: அஃதையென்பதன் திரிபு. அபலை - பெண்; பலமில்லாதவள். உலகத்தையே தாங்கும் வலிமை பெற்ற அபலை என்று அறிஞர்கள் சொல்லக் காரணம் என்ன. கலை அத்தை - கலையாகிய அஃதை. நவிலேன் - பயிலேன்.

18. புவிபாலர் - மன்னர். புகன்றிட - பாக்களையும் பொருளையும் சொல்ல. குவியாது - வாடாமல். புந்தி - அறிவு. குசை நுனி - தருப்பையின் நுனி; குசாக்கிரபுத்தி என்பது வழக்கு. கூர்ந்திடவும் - நுட்பம் பெறவும். நாற்கவி - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளுமாம்.

19. தனி வாய் - ஒப்பின்மை பொருந்திய. இடம் - இடப் பாகம். விறல் - வலிமை. பஞ்சவன் - மலையத்துவச பாண்டியன். பாவை - மகள். கனிவாய் - கொவ்வைக் கனிபோன்ற வாய். இறைவனிடம் என்றும் பிரியாமல் இருந்தே இமவானுக்கும் பாண்டியனுக்கும் மகளாக வந்தது எப்படி என்றபடி. இதில் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம் செய்த திருவிளையாடல் குறிக்கப்பெற்றது.

நனிவாய் விறற்பஞ்ச வன்பாவை
யென்ன நணுகியதென்
கனிவாய் மலர்ந்தருள் செய்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

20. நாவலன் றோழமை வாய்ந்தே
கவிஞர்க ணாயகனாம்
பாவல னென்றும் வருவா
னளகைப் பதியரசற்
காவல னாயர சர்க்கர
சாயு மணைகுவனின்
காவலன் யாவுநின் சீரேதென்
கூடற் கயற்கண்ணியே.

21. புனல்வாய் பவர்சடைச் செம்மேனிப்
பன்னகப் பூண்டிசைத்தூ
சனல்வாய் விழிமுத் தலைவா
யயிற்படை யண்ணலென
இனல்வாய் மலையத் துவசன்
பெருமகிழ் வெய்துறவெங்
கனல்வாய் உதித்தனை யன்றோதென்
கூடற் கயற்கண்ணியே.

---

20. நாவலன் - சுந்தரமூர்த்தி நாயனார்; அவருக்குத் தம்பிரான் தோழர் என்பது ஒரு பெயர். பாவலனாகி வந்தது - நக்கீரரோடு வாதிடும் பொருட்டு வந்தது. அளகைப் பதி அரசற்கு - குபேரனுக்கு. ஆவலன் நண்பன். காவலன் - இங்கே, கணவன். சிவபெருமான் சிறந்த புலவனானதும், அரசனானதும் உன்னுடைய சிறப்பினால்தான் என்றபடி 'ஏர்பிடித்தவன் என்ன செய்வான், பானைபிடித்தவள் பாக்கியம்' என்ற பழமொழியை இது நினைப்பிக்கிறது.

21. பவர் சடை - கொடிபோன்ற சடை. பன்னகப் பூண் பாம்பாகிய அணிகலன். திசைத்தூசு - திசைகளாகிய ஆடை; திகம்பரம். அனல் வாய்ந்த விழி; நெற்றிக்கண். முத்தலைவாய் அயில் - திரிசூலம். சடைமுதல் படை வரைக்குங் கொண்ட அண்ணல் எனக் கூட்டுக. நமக்கு மருமகனாக வந்தவன் இத்தகைய அண்ணல் என்று மலையத்துவசன் பெருமகிழ்வெய்துற என இசையெச்சத்தால் வேண்டிய சொற்களை வருவித்து முடிக்க. இனல் - இன்னல், துன்பம். தக்க மருகன் வரவில்லையே என்று துன்புற்றான். வெம் கனல்வாய் - புத்திரகாமேட்டி யாகஞ் செய்த தீயில், தடாதகைப் பிராட்டியார் திருவவதாரத்தைக் குறித்தது. அடுத்த பாட்டும் அஃதே

22 முனைவாய்க் கவைச்சிகை யங்கியி
ஹூடு முளைத்ததுதான்
தினைவாய் புனத்துச் சிலம்பன்
மகிழச் சிமயமலைச்
சுனைவாய்ச்செந் தாமரை யூடுறு
தோற்றந் துலக்கியதால்
கனைவாய் அளிமுரல் பூங்காத்தென்
கூடற் கயற்கண்ணியே.

23. சென்னி யிடைவிண் ணதிசூடு
மண்ண றிருக்கரத்து
வன்னிவைத் தானென்ன வோநீயுஞ்
செங்கையில் வன்னிகொண்டாய
உன்னி வழிபடு வார்க்கொரு
வாதரு ளுத்தமியே
கன்னி யிளங்குயி லேபுனற்
கூடற் கயற்கண்ணியே.

24. வரைவேந்தன் புத்திரி யாய்மரை
யூடுமுன் வந்ததற்கும்
தரைவேந்தன் புத்திரி யாய்த்தழ
லூடு சனித்ததற்கும்

---

22. முனைவாய் - முனை வாய்ந்த. கவைச்சிகை - கிளையாக அமைந்த கொழுந்து. அங்கி - தீ. முளைத்தது - மலையத்துவசன் யாகத்தில் தோன்றியது. புனத்து - கொல்லைகளையுடைய. சிலம்பன் - இமவான். சிமயம் - சிகரம். தாமரையூடுறு தோற்றம் - பார்வதி தேவியார் இமாசலத்தில் ஒரு பொய்கையில் தோற்றிய தாமரையில் திருவவதாரம் செய்தது. துலக்கியது - விளக்கியது. மீனாட்சி தீயில் தோன்றியது, பார்வதி செந்தாமரையில் தோன்றியது போலிருந்தது. தீக்குத் தாமரை உவமை. கனை வாய் - ஒலித்தலையுடைய அளி - வண்டு. பூங்கா - மலர்ச் சோலை.

23 விண்ணதி கங்கை. அண்ணல் - சிவபெருமான். வன்னி வைத்தான் நெருப்பைக் கொண்டான். வன்னி கொண்டாய் - கிளியை ஏந்தினாய். வன்னி என்பதை இருபொருளிற் பயன்படுத்தினார். ஒருவாது - நீங்காமல்.

24. வரை வேந்தன் - இமவான். மரை - தாமரை. தரை வேந்தன் - மலையத்துவச பாண்டியன். நிரை வேந்து உரிமை - வரிசையாக வந்த அரசுரிமையை. உறும் - ஏற்கும். பொருந்தும். ஆல்: அசை. இரண்டு அரசர்களுக்குப் புத்திரியாய்த் திருவவதாரம் செய்ததற்கு எற்றபடி நீ அரசாண்டாய் என்பது கருத்து. கரை வேந்தர் - பிறரால் புகழ் சொல்லப் பெறும் வேந்தர். தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம் இப்பாடலிலும் வந்துள்ளது

நிரைவேந் துரிமைபெற் றேயர
சாள னினக்குறுமால்
கரைவேந்தர் போற்றும் பதத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

25. அறையணி சார விமவான்
புரிந்த வருந்த வம்போல்
நிறையணி செல்வச் செழியற்
கிலைகொ ளிகழ்த்திடுவாய்
மறையணி நின்மணங் காணாமை
யாற்பய வாரிவஃரு
கறையணி கண்ட ரிடத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

26. அனகப் பரமனுன் சாயற்கு
நெஞ்சக மஞ்சுமென்றோ
பனகப் பணியையஞ் சாதணிந்
தானிதைப் பன்னியருள்
எனகத் துயர்ப்பிணிக் கோர்மருந்
தேயன்ப ரெய்ப்பில்வைப்பே
கனகச் சிலம்படித் தேனேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

25 அறை - பாறை. நிறை அணி செல்வச் செழியற்கு - நிறைந்த அழகும் செல்வச் செழிப்புமுள்ள மலையத்துவச பாண்டியனுக்கு. இலை கொல் - அருந்தவமில்லையோ. மறை அணி - மந்திரங்களால் அணிபெற்ற. நின் மணம் காணாமையால் செழியற்கு அருந்தவம் இலைகொல்; மீனாட்சியின் திருமணத்தின் போது மலையத்துவச பாண்டியன் இல்லை என்பதை நினைத்தது. பயவாரி - பாற்கடல். கறை - நஞ்சம்; ஆகுபெயர்.

26 அனகப் பரமன் - அனகனாகிய பரமசிவன்; அனகன் - பாவமற்றவன். உன சாயற்கு - உனனுடைய மயில்போன்ற சாயலுக்கு; சாயல் - மென்மை. பனகப்பணி - பன்னகமாகிய அணியை. பாம்பிற்கு மயில் பகையாதலின் நின்னைக் கண்டு மயிலாக எண்ணிப் பாம்பு எந்தத் துன்பமும் விளைவிக்காது என்றோ இறைவன் அதை யணிந்தான் என்றபடி. பன்னியருள் - திருவாய் மலர்ந்தருள்வாயாக. என் அகத் துயர்ப்பிணிக்கு - அடியேனுடைய உள்ளத்தி லுள்ள துயரமாகிய நோய்க்கு. எய்ப்பில் வைப்பு - இளைக்கும்போது பயன்படும் செல்வம்.

27. எண்ணணி னயனத் தினுக்குப்
மானங்க ளெண்ணிலவால்
மண்ணணி னவற்றுட் கயலென்ன
தன்மம் வகுத்ததுவோ
பெண்ணணின் மணிநின் றிருவிழி
யோடுறப் பெற்றமையால்
கண்ணணின் மணியுறை பாவாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

28. முற்றா தரவு படைத்தேநின்
பாத முளரிதனைப்
பற்றா வனுதின மெண்ணுபு
போற்றுமிப் பாதகன்பாற்
சற்றா தரவும் படைத்தா
யிலையித் தரணியுளோர்
கற்றாவென் பார்நினை யென்னேதென்
கூடற் கயற்கண்ணியே.

29. சீதங் கமழும் பிறையணி
செஞ்சடைச் செல்வரொடும்
ஏதங் கமழு மிருளாரென்
னுள்ளத் தெழுந்தருள்வாய்
வேதங் கமழும்செவ் வாயர்க்குப்
பாலருள் வித்தகியே
காதங் கமழும் பொழில்சூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

27. எண்ணின் - ஆராய்ந்து பார்த்தால். நயனத்தினுக்கு - திருவிழிகளுக்கு. உவமைகள் எண்ணில. என்ன தன்மம் வருத்ததுவோ - என்ன புண்ணியம் செய்ததோ. நின் திருவிழியோடுற - நின்னுடைய அழகிய திருவிழிகளோடு உவமையாகச் சேர்த்துச் சொல்ல. பெற்றமையால் என்ன தன்மம் வகுத்ததுவோ என்று கூட்டுக. கயற்கண்ணி என்று எம்பெருமாட்டியின் கண்ணோடு கயலை இணைத்துச் சொல்லும் பேற்றை எண்ணியபடி.

28. முற்று ஆதரவு - நிறைந்த அன்பு. பற்றா - பற்றி; புகலாக எனினும் ஆம். எண்ணுபு - எண்ணி. சற்றும் ஆதரவு என்று உம்மையைப் பிரித்துக் கூட்டுக. கற்றா என்பார் - கன்றையுடைய பசு என்பார். யான் கன்றைப் போல நின்னைப் போற்றியும் நீ பசுவைப் போல அருள் செய்யவில்லை, ஆதலின் நின்னைக் கற்றா என்பது எவ்வாறு பொருந்தும்.

29. ஏதம் - துன்பம். இருள் ஆர் - அறியாமை நிறைந்த. செவ்வாயர் என்றது திருஞானசம்பந்தப் பெருமானை.

30. அண்டார் புரஞ்செற்ற வெம்மானோ
 டுன்னை யபேதமென
விண்டார் சமழ்ப்புற நீகன்னி
 யாகி விரிதிரைசூழ்
ஒண்டா ரணியை நெடுங்கால
 மாண்ட வுதுவென் கொலோ
கண்டார் மொழியுடைக் கிள்ளாய்தென்
 கூடற் கயற்கண்ணியே.

31. முன்ன மதனின் மணக்கோலங்
 கண்டிட முப்புவனம்
மன்னு மனைவரும் வந்து
 மகத்திய மாதவன்றான்
என்னந்த வுத்தரத் தேகா
 திருந்தன னென்றெய்வமே
கன்னங் கறுத்த குழலாய்தென்
 கூடற் கயற்கண்ணியே.

32. செய்தவ மேது மறியே
 னினைத்துதி செய்தறியேன்
வெய்தவ மாற்ற விழைவே
 னினதருள் மேவுவனோ

---

30. அண்டார் - பகைவராகிய திரிபுராதியர். விண்டார் - கூறியவர்கள். சமழ்ப்பு உற - நாணம் அடைய. உது - அந்தச் செயல். இறைவன் உன்னோடு வேறுபாடற்றவன் என்று சொல்லுவார் நாணுமாறு நீ அவனை விட்டுத் தனியே கன்னிகையாக வந்து உலகை ஆண்ட அந்தத் திருவிளையாடலுக்குக் காரணம் என்ன என்றபடி. கண்டு ஆர் - கற்கண்டைப் போன்ற.

31. முன்னமதனில் - முற்காலத்தில். என் - என்ன காரணம். உத்தரத்து - வடதிசைக்கு. கன்னம் கறுத்த - மிகக் கறுத்த; வழக்குத் தொடர்.

நின் மணக்கோலம் காண மூன்று புவனங்களிலும் உள்ளவர்கள் வந்தும் அகத்திய முனிவன் தென்னாட்டுக்கு வந்தவன் மீட்டும் வடக்கே ஏகாமல் இங்கேயே இருந்தான்; இதற்குக் காரணம் என்ன என்றபடி. பாண்டி நாட்டின் உயர்வை எண்ணியே இருந்தான் என்பது குறிப்பு.

32. வெய்து அவம் ஆற்ற - வீணே பயனற்ற செயல்களைச் செய்ய. மை - மேகம். கோதண்ட வெற்பு - வில்லாகிய மேருமலையைக் கொண்ட; சிவபெருமான் திரிபுர சங்காரம் செய்தபோது மேருவை வில்லாக வளைத்தான் என்பது வரலாறு. வாமம் - இடப்பாகம். கைதவன் - பாண்டியன்.

மைதவழ கோதண்ட வெற்பண்ணல்
  வாமம வளர்கரும்பே
கைதவன் செய்தவப் பேறேதென்
  கூடற் கயற்கண்ணியே.

33. மாட்சி பெறுகவி வல்லோர்கள்
  யாரும் வணங்கியுனை
ஆட்சி யடைந்தனர் நாயடி
  யேனு மதுநினைந்தே
நீட்சி பெறுமின் புறுகவி
  பாட நிகழ்த்துதற்குக்
காட்சி யளித்தரு டென்கூடல்
  வாழுங் கயற்கண்ணியே.

34. முளைமதி வேணிய ளீயர
  சாளு முறைமையுன்னா
தளைமணி மாட மறுகூடு
  பாத வலர்வெதும்ப
வளைவிற்று மிந்தனம் விற்று
  முழன்ற வகையென்கொலோ
களைதவிர்த் தாளு மமுதேதென்
  கூடற் கயற்கண்ணியே.

---

33. உனை வணங்கி. ஆட்சி - புலமையை ஆளும் விறலை. நீட்சி - நெடிது காலம்.

34. முளைமதி - பிறையை அணிந்த. மணி அளைந்த மாடம்; மணி - நவமணிகள்; அழகுமாம். மறுகு ஊடு - வீதியின் நடுவே. இந்தனம் - விறகு. களை - வினையினால் உண்டாகிய இளைப்பு.

நீ அரசியாக இருந்தும் உன் உயர்வை எண்ணாமல் சிவபெருமான் வீதியில் நடந்து வளையையும் விறகையும் விற்றுத் திரிந்தது ஏன் என்றபடி. இப்பாடலில் வளையல் விற்ற திருவிளையாடலும் விறகு விற்ற திருவிளையாடலும் குறிக்கப் பெற்றன.

35. எல்லாஞ்செய் சித்த ரெனவேயக்
காலத் தெழுந்தருளும்
அல்லார் களத்தர்க்கிப் பொல்லானை
யாளுமென் றன்னவரோ
டுல்லாச மாக விருக்கும்
பொழுதி லுரைத்தருள்வாய்
கல்லார் தமையும் புரப்பாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

36. அற்பக னின்ற னடித்தா
மரையிணைக் கன்புசெய
நிற்பதன் றால்நெஞ்ச மென்செய்கு
வேனிதை திற்கவருள்
வெற்பக மேய. கிளியே
வருண்மழை மின்னிடையே
கற்பக மேதெள் ளமுதேதென்
கூடற் கயற்கண்ணியே.

37. வெள்ளிப் பிறங்கலை யில்லாவில்
லாக்கொண்டு மேருவினைத்
துள்ளித் திரிவிடைச் சொக்கேசர்
வீதிக டோறுமிரந்
தள்ளிக் கொடுமென வேற்றிடு
வாரைய மாங்கதென்னே
கள்ளக் கயவர்க் கரியாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

35. இறைவன் எல்லாம் வல்ல சித்தராக எழுந்தருளியது மதுரைத் திருவிளையாடல்களில் ஒன்று. அல் ஆர் களத்தர்க்கு - விடத்தின் கருமை நிறைந்த திருக்கழுத்தை உடைய சிவபெருமானுக்கு. உல்லாச மாக - மிக்க மகிழ்ச்சியோடு. புரப்பாய் - காப்பாற்றும் பேரருள் உடையாய். "ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து, நீ முத்தம் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம், வேய் முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச்சொன்னால், வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலி வடிவம்மையே" என்ற இப்பாடல் இதனோடு ஒப்புநோக்கத்தக்கது.

36. அல் பகல் - இரவும் பகலும்.

37. வெள்ளிப் பிறங்கலை இல்லாகவும், மேருவினை வில்லாகவும் கொண்டு; பிறங்கல் - மலை; இல் - இருப்பிடம். விடை - இடபம். ஐயம் ஏற்றிடுவார்; ஐயம் - பிச்சை. ஆங்கு : அசை. வெள்ளிமலையை யும், மேருமலையையும் கொண்டவர் பிச்சை எடுப்பதற்கு என்ன காரணம் என்றபடி.

38. ஒண்ணுதன் மங்கையர் போர்க்கோலந்
தாங்கி யுடன்வரப்போய்
விண்ணுதல் வெள்ளி விலங்கற்
கணங்களை வென்றுபின்னும்
அண்ணுதல் செய்து சினங்காட்டி
நின்றிடு மாற்றல்கண்ட
கண்ணுத லுண்மகிழ் வென்னோதென்
கூடற் கயற்கண்ணியே.

39. மனைவியொடு மக்களு நிச்சய
மென்று மனங்கொடுன்னைத்
தினையள வேனு நினையாத
பாவியைச் சிந்திப்பையோ
வனைமறை யந்தமு மன்பர்க
ளெஞ்சமும் வாழ்மணியே
கனைகடல் சூழ்புவி யேத்துதென்
கூடற் கயற்கண்ணியே.

40. உயல்விளை யாடு மனத்தாரை
யென்று மூறுதலின்றி
அயல்விளை யாடு மனவண்டுன்
பாத வலர்பற்றுமோ
புயல்விளை யாடு மிமவான்
பயந்திட்ட புத்தமுதே
கயல்விளை யாடும் வயல்சூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

38. ஒள் நுதல் - ஒளியை உடைய நெற்றி. விண் நுதல் - வானோர்கள் புகழுகின்ற. வெள்ளி விலங்கல் கணங்களை - வெள்ளி மலையாகிய கைலாசத்தில் உள்ள பூதகணங்களை. அண்ணுதல் செய்து - நெருங்கிச் சென்று. கண்ணுதல் - நெற்றியில் கண்ணுடைய சிவபெருமான். உள் மகிழ்வு - உள்ளத்தின்கண் மகிழ்ந்தது.

மீனாட்சியம்மை திக்குவிஜயம் செய்து கைலாசத்தில் சிவ பெருமானுடைய படைகளாகிய பூதங்களை வென்று கோபம் காட்டி நின்றபொழுது, அதுகண்டு வெறுக்காமல் மகிழ்ச்சி அடைந்ததற்கு என்ன காரணம் என்பது கருத்து.

39. நிச்சயம் என்று - உறுதியான துணை என்று. மனம் கொடு - மனத்தில் எண்ணி. மறை அந்தம் - உபநிடதம். கனை - ஒலிக்கின்ற.

40. உயல் விளையாடும் - உய்யும் நெறியில் எப்பொழுதும் உலாவும். அயல் - அடியார் இல்லாத அயலிடங்களில். புயல் - மேகம். பயந்திட்ட - பெற்ற.

41. வண்டேன் முடியிம வானுக்கும்
வீர வழுதிக்குநீ
ஒண்டே னலர்வா யெரிவாய்
மகளா யுதித்தமையால்
பண்டே யுறுமடி யார்க்கெளி
யாயெனப் பன்னுவதைக்
கண்டேனுன் பாலடி யேன்புனற்
கூடற் கயற்கண்ணியே

42. திரையற்ற தோற்றக் கடல்வீழ்ந்து
வான்கரை சேர்தலின்றி
வரையற்ற துன்ப மடைந்தேனுக்
காரருள் வைப்பதென்றோ
உரையற்ற மாற்றுயர் பொன்னேமின்
னேரிடை யுத்தமியே
கரையற்ற வின்பக் கடலேதென்
கூடற் கயற்கண்ணியே.

43. ஏகுற்ற வென்மன வானர
முன்ற னிருகமல
வாகுற்ற பாத மலர்பற்று
மோவிம வான்மகளாய்ப்
போகுற்ற செல்வி புராதனன்
வாமம் பொருந்தனமே
காகுத்தன் சோதரி தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

41. இமவானுக்கு அலரினிடத்திலும், வழுதிக்கு எரியினிடத்திலும் திருவவதாரம் செய்தமையால். வன் தேன்முடி - வளவிய தேனடைகளை உடைய சிகரம். வழுதி - பாண்டியன். உன்பால் கண்டேன்; கண்டேன் - அறிந்தேன்.

42. திரையற்ற கடல், தோற்றக்கடல்; தோற்றம் - பிறவி, வான்கரை - மேலான முத்தி யென்னும் கரை. வரை அற்ற - எல்லை இல்லாத. உரை அற்ற - உரைத்தல் என்னும் செயலுக்கு உட்படாத; சாதாரணப் பொன் உரைக்கப்படுவது; அம்மையாகிய பொன் உரையற்றது. மின் நேர் இடை மின்னலை ஒத்த இடையை உடைய.

43. ஏகுற்ற - கண்டபடி திரிந்த. வாகு - அழகு. குரங்கு மலரைப் பிய்த்து எறியுமே அன்றிப் பற்றாது என்ற குறிப்புத் தோன்றியது. போகுற்ற - திருவவதாரம் செய்த புராதனன் - பழைய பரமசிவன். வாமம் - இடப்பாகம். பொருந்தும் அன்னமே. காகுத்தன் - இராமனாக அவதரித்த திருமால்.

44. குயவாய் மகளிர் நலவாய்
நுடங்கு கொடியிடைவாய்
நயவா யுறுசெய்ய வாய்நசை
மேவுபு நான்மெலிந்தேன்
பயவாய் விழுந்து வருந்தா
வணமருள் பாலிப்பையே
கயவாய்க்கு முத்தி தருங்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

45. கூற்றான தொன்றுண்டென் றெண்ணாது
வீணசை கொண்டுநல்லோர்த்
தூற்றா வுழலுமிந் நாயேனை
யாளத் துணிவைகொல்லோ
நீற்றா னிடமுறு நின்மலை
யேபன் னியமமுந்தென்
காற்றான் மணங்கமழ் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

46. சென்னித் தலத்து மதியணிந்
தாடுஞ் சிவபெருமான்
வன்னித் திருநய னத்தான்
மதன்றனை மாய்த்ததுதான்
என்னித் திலவெண் ணகையா
யியம்புதி யென்றனக்குக்
கன்னிப் பெடையனப் பூந்தடக்
கூடற் கயற்கண்ணியே.

---

44. மகளிர் குயவாய் - பெண்களின் தனங்களில். மகளிர் என்பதை இடைநிலை விளக்காகக் கொண்டு மற்றவற்றோடும் கூட்டுக. நலவாய் - அழகில்; நலம் - அழகு. நுடங்கு - தளர்கின்ற. கொடியிடைவாய் - கொடி போன்ற இடையில். நயவாய் - மென்மையில். செய்யவாய் - சிவந்த வாயில். செய்ய வாய் என்பது ஒழிய ஏனைய நான்கு வாய்களும் ஏழாம் வேற்றுமை உருபு. நசை மேவுபு - விருப்பத்தை அடைந்து. பயவாய் - அச்சத்தில். கயவாய்க்கு - கரிக்குருவிக்கு; சிவபெருமான் ஒரு கரிக்குருவிக்கு முத்தி கொடுத்தது திருவிளையாடல்களில் ஒன்று.

45. கூற்றானது - யமனானவன்; அஃறிணையாகச் சொன்னபடி. வீண் நசை - வீணான ஆசை. நல்லோர்த் தூற்றா - நல்லவர்களை இகழ்ந்து. நீற்றான் - திருநீறணிந்த சிவபெருமான் இடம் - வாம பாகம். பல் நியமமும் - பல தெருக்களும். தென்காற்று - தென்றற்காற்று.

46. வன்னித்திரு நயனத்தால் - நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணால். மதன் - மன்மதன். என் - என்ன காரணம். நித்திலம் - முத்துப் போன்ற. அனப்பூந்தடம் - அன்னத்தையும் மலரையும் உடைய தடாகம்.

சிவ பெருமான் நின்னைக் காதல் செய்திருக்கவும், மன்மதனை மாய்த்தது என்ன காரணம் என்பது குறிப்பு.

47. ஆரா வமுத மனையநின்
சீரை யடிக்கடியான்
பாரா யணஞ்செயச் செய்வாய்பின்
னாற்கவி பாடச்செய்வாய்
நாரா யணனுக் கருமைச்
சகோதரி நாரணிநீர்க்
காராருஞ் சோலை புடைசூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

48. ஆண மிலாத மடவோர்கள்
கூட்டத் தகப்பட்டுளக்
கோணன் மரீஇக்குலை வுற்றன
னாலைய கோவென்செய்வேன்
பேண வருமருந் தேயிம்
மயக்கப் பிசாசொழியக்
காண விழைந்தனன் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

49. திருவளிப் பாய்மிடித் தீர்வளிப்
பாயெனைச் சேர்ந்தவருக்
குருவளிப் பாய்நல் லுணர்வளிப்
பாய்கவி யோதத்திறம்
மருவளிப் பாய்நன் மனமளிப்
பாய்மிக வாதைசெயும்
கருவழிப் பாய்புனற் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

47. ஆராவமுதம் - தெவிட்டாத அமுதம். பின் நாற்கவி. நீர்க் கார் - நீரை நிரம்ப உடைய மேகம்.

48. ஆணம் - அன்பு. மடவோர்கள் - அறிவற்றவர்கள். உள்ளக் கோணல் மரீஇ. பேண வரும் - அன்பு செய்தால் அருள் செய்ய வருகின்ற. மருந்தே - அமுதம் போன்றவளே. காண - நின்னைத் தரிசிக்க.

49. திரு - செல்வம். மிடித் தீர்வு - வறுமை போதல். உரு - நல்ல மேனி. உணர்வு - ஞானம். திறம் மருவ அளிப்பாய்; மருவ - பொருந்த: மருவ அளிப்பாய் என்றது மருவளிப்பாய் என்று நின்றது, செய்யுள் விகாரம். கரு - பிறப்பு.

50. எண்ணிற் கடங்குத லின்றாற்
றுயர மிருமிடியும்
புண்ணிற் றழற்சுடு கோல்நுழைந்
தாங்குப் புகுந்தலைக்கும்
மண்ணிற் றுணையுனை யல்லாம
லாரிதை மாற்றியருள்
கண்ணிற் பருகுசெந் தேனேதென்
கூடற் கயற்கண்ணியே.

51. தீதுந் துயர்செயுங் காமாதி
யாறுமென் சிந்தைநின்று
போதும் படிக்குக் கருணைசெய்
வாய்முப் புவனமுமீன்
றேது முதுமை யுறாதுறை
கன்னி யிளமயிலே
காதும் பவப்பகை யேபுனற்
கூடற் கயற்கண்ணியே.

52. ஓயாது பாழுக் குழைத்தே
நலத்தை யொழித்துநன்னூல்
ஆயாது வீயு மடியேனைச்
சீறி யகற்றிவிடேல்
தேயா மதிமுகச் செவ்வா
யருள்விழிச் சிற்றிடையாய்
காயா மலர்நிறத் தாயேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

50. துயரம் அடங்குதல் இன்றால். இரு மிடியும் - பெரிய வறுமையும். தழல் சுடு கோல் - நெருப்பில் சுட்ட கோல். அலைக்கும் - வருத்தும். உனை அல்லாமல் துணை ஆர். இதை - இந்த நிலையை கண்ணில் பருகு செந்தேன் என்றது, காட்சிக்கு இனியவள் என்றபடி.

51. காமாதி ஆறும் - காமம் முதலிய ஆறு உட்பகைகளையும்; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பன. போதும் படிக்கு - நீங்கும் வண்ணம். முப் புவனமும் ஈன்று ஏதும் முதுமை உறாது உறை கன்னி இளமயிலே; ''அகிலாண்ட கோடியீன்ற, அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்தரூபமயிலே'' (தாயுமானவர்). காதும் - துன்புறுத்தும். பவப்பகையே - பிறவிக்குப் பகையாக இருப்பவளே; பிறவியை ஒழிப்பவள் என்றபடி.

52. பாழுக்கு - பயனில்லாத செயலுக்கு, வீயும் - இறந்துபடும். தேயா மதி: இல்பொருளுவமை.

53\. ஆவா மனத்திற் கடிமைப்பட்
டேபுல னைந்தின்வழி
ஓவா துழலு மடியேற்குன்
சேவை யுறுதலுண்டோ
நீவா வருள்புரி வாயெனப்
போற்றி னிலத்தொருவர்
காவாருண் டோமலர்க் காவார்தென்
கூடற் கயற்கண்ணியே.

54\. வெங்கைக் கடகளி றன்னாரோ
ரைவர் மெலிவுறுத்தச்
சங்கைக் கரிய துயரடைந்
தேனெனைத் தாங்குதியால்
செங்கைப் பசுங்கிளித் தாயே
யடியர்கள் சிந்தையுறை
கங்கைச் சடாதரன் வாழ்வேதென்
கூடற் கயற்கண்ணியே.

55\. வானேய் கரமுடை யாயென
மூடரை வாழ்த்திநொந்து
யானேய் துயரத்திற் கெல்லையுண்
டோமுக்க ணெந்தையிடத்
தேனே திசைதொறுஞ் சென்றே
யமரர்ச் செயித்தவிறற்
கானேய் குழற்குயி லேகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

53\. ஆவா - அந்தோ. ஒவாது - இடைவிடாமல், சேவை - தரிசனம். போற்றின் காவாதவர் உண்டோ; நான் போற்றியும் நீ காப்பாற்றவில்லை என்பது குறிப்பு. மலர்க் கா ஆர் - மலரை உடைய சோலைகள் நிறைந்த.

54\. ஐவர் என்றது ஐம்பொறிகளை. ஐம்பொறிகளுக்குக் களிறு உவமை; "உரன்என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்" (குறள், 24). சங்கைக்கரிய - கணக்குக்கு உட்படாத.

55\. வான் ஏய் - ஈகையால் மேகத்தையொத்த. யான் ஏய் - அடியேன் அடைந்த. திசைதொறும் சென்றே அமரர் செயித்த - திக்கு விசயம் செய்து தேவர்களை வென்ற. கான் ஏய் - மணம் பொருந்திய.

56\. சமலனின் றாளிணை தன்னை
யுளத்திற் றரித்துறையும்
அமலரை யிம்மி யளவேனுங்
கூடி யறிந்திலனால்
விமல மடைகுவ தென்றுகொ
லோவலை மெல்லியல்வாழ்
கமல மனையகண் ணாய்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

57\. தெம்முகஞ் சென்று சிறுநகை
செய்து சினந்தெரித்த
ஐம்முகன் றன்னோ டமரேற்ற
மேன்மை யறிவன்கொலோ
வெம்முக வேற்கை யறுமுகத்
தானையும் வெய்யதுதிக்
கைம்முகத் தானையு மீன்றாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

58\. ஊனப் பிறவி பலகோடி
மேவி யுறுகணடைந்
தேனப்பிறவித் துயர்தனை
மாற்றிடத் தெண்டனிட்டேன்
வானப் பிறைநுத லன்னா
யிராவணன் வாழ்த்துமறைக்
கானப் பிரிய னிடத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

56\. சமலன் - மலத்தோடு கூடியவன். அமலரை - மலமற்ற ஞானிகளை. விமலம் - மலத்தினின்றும் நீங்கும் நிலைமை. அலை மெல்லியல் - பாற்கடலில் தோன்றிய திருமகள். அம்பிகையின் கண்ணுக்குக் கமலத்தை உவமை கூறி, அதற்கு அடையாக, 'அலைமெல்லியல் வாழ்' என்று சொன்னார்; எம்பெரு மாட்டியின் ஒரு திரு விழியில் திருமகள் இருப்பதாகக் கூறுவது மரபு. அதுபற்றி இவ்வாறு சொன்னார் எனலும் ஆம்; "திருமகள் வலக்கண்.... ஆகப் பெற்று.... அருமை விடளிப்பாள்" (திருவிளை. நான்மாடக் கூடலான படலம்).

57\. தெவ் முகம் - பகைவர் உள்ள இடங்களில்; என்றது திரிபுரங்களை. ஐம்முகன் - தத்புருஷம் முதலிய ஐந்து முகங்களை உடைய சிவபெருமான். மீனாட்சியம்மை திக்கு விசயம் செய்த பொழுது கயிலை சென்று சிவபெரு மானை எதிர்த்ததை நினைந்து 'அமர் ஏற்ற மேன்மை' என்றார். துதிக்கை முகத்தான் - விநாயகர்.

58\. ஊனப்பிறவி - குறையை உடைய பிறவி; ஊனவுடலால் ஆன பிறவி எனலும் ஆம். உறுகண் அடைந்தேன்; உறுகண் - துன்பம். நுதலை உடைய அன்னாய். மறைக்கானப் பிரியன் - சாமவேதப் பாடலில் விருப்பம் உடையவன்.

59. மட்டுறு கூந்தல் மடவார்
நயன மயல்வலையிற்
பட்டுறு நெஞ்சம் பலவிடத்
தோடுதல் பன்னவும்யான்
எட்டுணை யேனு மிரங்கா
திருந்தனை யீதழகோ
கட்டுரைத் தேனினிக் கூறேன்றென்
கூடற் கயற்கண்ணியே.

60. பேணா தவனின் றிருவடித்
தாமரை பேணியன்பு
பூணா தவனின் னடியார்க்கண்
டேயச்சம் பூண்டுமிக
நாணா தவனெனி னுந்துணை
வேறிலை நாயன்றுயர்
காணாத வாறென் கொலோகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

61. அசடர்கள் கூட்டங் கெழுமி
யவருள் ளவாவலுற
நிசமனு வேனு மிலாம
னவின்று நிதநிதமும்
வசைமிகத் தேடி மெலிந்தேனந்
தோநல் வழியறியாக்
கசடனை ஆள்வைகொல் லோகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

59. மட்டு - தேன். யான் பன்னவும் - அடியேன் பலகால் சொல்லவும்.

60. பேணாதவன் - விரும்பாதவன். நாயன் - நாய் போன்ற அடியேன். காணாதவாறு - நீ கடைக்கணித்துப் போக்காத தன்மை.

61. அசடர்கள் - அறிவில்லாதவர்கள். கெழுமி - சேர்ந்து, நவின்று பொய்சொல்லி.

62. இரியாத தீப்பழி யெய்தின
  னானின்னன் பெள்ளளவும்
தரியாத பாவி யெனினும்
  விடேல்விடிற் றாரணியில்
உரியா ரெவர்நின்னை யல்லாது
  பின்னு முரைப்பதென்னே
கரியா னனத்த னனையேதென்
  கூடற் கயற்கண்ணியே.

63. எண்ணிய வெண்ணிய வெல்லாந்
  தவிரவிவ் வேழைதனைப்
பண்ணிய கூத்திவை போதுமன்
  னேயினிப் பார்த்தருள்வாய்
புண்ணியர் முச்சுடர்க் கண்ணினர்
  வாமத்துப் புத்தமுதே
கண்ணிய பல்வளத் தென்கூடல்
  வாழுங் கயற்கண்ணியே.

64. ஆமனை நீரென் றுலுத்தரைப்
  பாடி யவர்வசிக்கும்
மாமனை தோறும் புகுந்தே
  சலிக்கும் வறியவனை
யோமனை நின்னை மணவாள
  ரைக்கவி யோதச்செய்வாய்
காமனைக் காய்ந்தவர் வாழ்வேதென்
  கூடற் கயற்கண்ணியே.

---

62. இரியாத - நீங்காத. எய்தினன் நான். தரியாத - உள்ளத்தில் கொள்ளாத.

63. தவிர - நீங்க. நான் நினைத்த இன்பங்களெல்லாம் நீங்கத் துன்பமுறும் படி நீ செய்த திருவிளையாடல்கள் போதும். வாமத்து - இடப் பாகத்துள்ள. கண்ணிய - பலரும் எண்ணி மதித்த.

64. நீர் ஆ மன் ஐ என்று உலுத்தரைப் பாடி - நீர், காமதேனு, அரசர், எனக்குத் தலைவர் என்று லோபிகளைப் புகழ்ந்து பாடி; ஆ - காமதேனு; மன் - அரசன்; ஐ - தலைவன். மா மனை - பெரிய வீடு. சலிக்கும் - பயன் பெறாமல் சலிப்படையும். வறியவன் ஐயோ. மனை நின்னை - சிவபெருமானுக்கு மனைவியாகிய நின்னையும். மணவாளரை - நின் கணவரா கிய சிவபெருமானையும். வறியவன் ஓதச் செய்வாய்.

65. ஓதிய துன்பங்கட் கெல்லையுண்
டோவிவை யுற்றடியேன்
நீதி யணுவு மிலாதே
யொழிந்தன னீயருள்வாய்
வேதியர்க் காதியன் வாமத்து
வாழ்விளக் கேயவுணர்க்
காதிய வேற்கர னன்னாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

66. வாய்ந்த மதுர கவிபா
டவுமவ் வளக்கவியை
ஏய்ந்த புலவ ரிடைப்பிர
சங்கம் மியற்றவுஞ்சீர்
வேய்ந்த வவர்கள்கொண் டாடவு
நீயருள் வெய்யவரைக்
காய்ந்த கருணைக் கடலேதென்
கூடற் கயற்கண்ணியே.

67. பொருத்த முறுதமிழ்ப் பன்னூலு
மாய்ந்தென்னோர் போதுநில்லா
துருத்த மறவிக் கடற்படிந்
தேயல்ல லுற்றுமிக
வருத்த மடைந்தன னற்கவி
பாடிட வாஞ்சையுற்றேன்
கருத்தை முடித்திகண் டாய்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

65. ஓதிய - நின்பால் முறையிட்ட. வேதியர்க்கு ஆதியன்: சிவபெருமானை முதல் அந்தணனாகச் சொல்வது வழக்கு; ''யாழ்கெழு மணிமிடற் றந்தணன்'' (அகநா. கடவுள்); ''வேதியா வேதகீதா'' (தே.) அவுணர்க் காதிய - அசுரர்களைப் பொருது அழித்த. வேல் கரன் - முருகன்.

66. வாய்ந்த மதுரகவி - பொருந்திய இனிமையுடைய பாக்களை. அவர்கள் - புலவர்கள். வெய்யவரை - மகிடாசுரன் முதலிய கொடிய அசுரர்களை. அசுரர்களை அழித்தது மறக்கருணையாதலின் 'வெய்யவரைக் காய்ந்த கருணைக் கடலே' என்றார்.

67. ஆய்ந்து என் - ஆய்ந்ததனால் என்ன பயன்? ஓர் போதும் நில்லாது - ஒரு வேளையும் மனத்தில் தங்காது. உருத்த - அச்சுறுத்திய, மறவி - மறதி. வாஞ்சை - விருப்பம். முடித்தி - நிறைவேற்றுவாய்.

68. திடனார் தமிழ்மொழிப் பன்னூல்க
ளாய்ந்துந் தெளிவின்றியுள்
மடனார்ந்த வென்னை விடாதே
யுனையுமிம் மண்சுமக்கும்
படநாகம் பூண்ட பரனையும்
பாடும் படிக்கருளல்
கடனா முனக்கனை யேகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

69. மாவித் தகமுறு நின்றிருக்
கோல மனம்பொருந்தல்
ஓவிப் புவியி லுழல்வேனை
யாள வுறுவைகொல்லோ
வாவித் தனிப்பெரு வாளைதென்
றாற்றின் வகையுதிர்க்கும்
காவித் தடம்புடை சூழுந்தென்
கூடற் கயற்கண்ணியே.

70. ஊனம் புரியும் பொறியைந்தின்
சேட்டை யொழித்துநித்தம்
மோனம் புரியும் படிக்குறு
மோவிந்த மூடனுக்கு
வானம் புரியு மலர்ப்பதத்
தாய்மது வண்டருந்திக்
கானம் புரியு மலர்ப்பொழிற்
கூடற் கயற்கண்ணியே.

---

68. திடன் - உறுதி. உள் மடன் ஆர்ந்த - உள்ளத்தில் அறியாமை நிரம்பிய. மண் சுமக்கும் பரன், படநாகம் பூண்ட பரன் என்று கூட்டுக.

69. வித்தகம் - ஞானம். ஓவி - நீங்கி. தென்தாற்றின்வகை - பலவகையான தென்னங் குலைகளை; தென் - தென்னை. காவி - செங்கழுநீர்.

70. ஊனம் - சிதைவு. சேட்டை, - குறும்பு. வானம் புரியும் - தேவலோகத்துள்ளவர் விரும்புகின்ற; வானம்: ஆகுபெயர். வண்டு மதுவை அருந்தி.

71. சீருந் தளையுஞ் சிறந்தே
பொருட்சுவை சேரகத்தின்
நாரு நவரச மும்பெறு
பாடல் நவின்றிடுதற்
கோரு முனம்வர நீயருள்
வாய்மிசை யொண்பிறையும்
காரும் படியு மதில்சூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

72. ஆவா பிறவிக் கடல்வீழ்ந்து
மாழ்கி யவலமுறீஇக்
காவா ரிலாது வருந்துமிந்
நாயைக் கடைக்கணிப்பாய்
தேவாதி தேவ ரிடத்தே
வளருந் திகழொளியே
காவார் மதுரைத் திருநகர்
வாழுங் கயற்கண்ணியே.

73. விஞ்சத் தனங்களை யீட்டிட
வாசையில் வீழ்ந்துழலும்
நெஞ்சத்த னின்னை யடுத்தேன்
புலவர்த நேரினின்று
செஞ்சொற் றமிழ்க்கவி யோதிட
வாரருள் செய்திடன்னே
கஞ்சத் தடம்புடை சூழுந்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

71. சீர், தளை என்பன செய்யுளின் உறுப்புக்கள். அகத்தின் நாரும் - உள்ளத்தில் தோன்றிய அன்பும். ஓர் முனம் வர - நினைப்பதற்கு முன்னே பாடல்கள் தாமே வரும்படி. மிசை - மேலே.

72. ஆவா - அந்தோ. அவலம் உறீஇ - துன்பத்தை அடைந்து, இடத்தே - இடப்பாகத்தில். கா ஆர் - சோலைகள் நிரம்பிய.

73. விஞ்ச - மிகுதியாக. தனங்களை - பலவகையான செல்வங்களை. கஞ்சத் தடம் - தாமரைப் பொய்கைகள்.

74. பொய்யன்புல் லோர்கள் குழுவதை
நாளும் புகன்றுழலும்
வெய்யன்பொல் லாத வினைபுரி
வீணன் விழைந்தியற்றும்
குய்யன் கரிய விழிமாத
ராசையைக் கொண்டுழலும்
கையனென் றாலு மருள்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

75. விண்ணெதி ரின்பமுஞ் சும்மை
மிகுத்த விரிகடல்சூழ்
மண்ணெதி ரின்பமும் வேண்டேனின்
பாத மரைமலரை
எண்ணெதி ரெண்ணி யிருப்பே
னருளொடு மேழையின்றென்
கண்ணெதிர் தோன்றுவ தென்றோதென்
கூடற் கயற்கண்ணியே.

76. வன்னெஞ்சர் தம்மை மதித்தேநின்
பேரை மறந்துழலும்
புன்னெஞ்சன் மாதர்கள் போகத்தை
நித்தம் புகன்றவர்பாற்
சென்னெஞ்சன் மூவகைத் துன்ப
நினைத்தல்செய் யாதிருக்கும்
கன்னெஞ் சனைக்கை விடாதேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

74. புகன்று - விரும்பி. குய்யன் - வஞ்சகச் செயலை உடையவன். கையன் - இழிந்தவன்.

75. விண் எதிர் இன்பமும் - வானுலகத்தில் தோன்றுகின்ற இன்பமும். சும்மை - ஒசை. மரை - தாமரை. எண்எதிர் எண்ணி - சிந்தையில் நினைந்து.

76. புகன்று - விரும்பி. செல் நெஞ்சன். மூவகைத் துன்பன் - ஆதியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூன்றுவகைத் துன்பங்களை உடைய அடியேன்; இவற்றைத் தாபத்திரயம் என்பர்.

77. தண்டேன் மொழிமனை யன்னை
பிதாதமர் தம்முறவை
விண்டேன்மற் றொன்றையும் வேண்டே
னிவர்தமை மேவுதலால்
உண்டே யெனிற்பெருந் துன்பமுண்
டாலென் றுறுதியதாக்
கண்டேனெஞ் சுடுநிற் கொண்டேன்றென்
கூடற் கயற்கண்ணியே.

78. நாவார நின்னை நவிலா
திருந்துபுன் னாரியர்பால்
ஓவா திருப்பினு மிவ்வீ
ணனையரு ளோடிங்ஙனே
நீவா வெனவழைத் தானந்த
வாரி நிறையச்செய்து
காவா யெனிற்றுணை யாவர்தென்
கூடற் கயற்கண்ணியே.

79. வானா தரித்திலன் மண்ணக
மேவி மருவுமின்பம்
தானா தரித்திலன் சாதுகை
மாந்தர்கள் சங்கமுற
நானா தரித்தனன் மெய்ம்மையி
தேயிங்ங னல்கு கண்டாய்
கானார் பொழில்புடை சூழுந்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

77. மனை - மனைவி. தமர் - சுற்றத்தார். விண்டேன் - நீங்கினேன். உண்டே எனின் - ஏதாவது நன்மை உண்டா என்றால்.

78. ஓவாது இருப்பினும் - நீங்காமல் இருந்தாலும். காவாய் - பாதுகாவாமல் இருப்பாய்.

79. வான் ஆதரித்திலன் - சொர்க்கபோகத்தை விரும்பவில்லை. சாதுகை மாந்தர்கள் - சாதுக்கள். இங்ஙன் - இப்படி. கான் - நறுமணம்.

80. சீரினை மேவிய செந்தமிழ்
கற்றுந் தெளிதலின்றிப்
போரினை மேவிய வீணனைக்
காத்தருள் புத்தமுதே
ஆரினை மேவிய வேணியன்
வாமத் தமரனமே
காரினை மேவிய கூந்தாறென்
கூடற் கயற்கண்ணியே.

81. மெய்யாக நானவில் விண்ணப்ப
மீதிந்த மேதினிமேல்
வையா தினியென்னை நின்பாதப்
போதிடை வைத்தருள்வாய்
நெய்யார் கருங்குழன் மானே
பசுந்தத்தை நித்தமுறை
கையானை யானனன் வாழ்வேதென்
கூடற் கயற்கண்ணியே.

82. மெச்சிப் பதிதர் செயறனை
வீண்வழி மேவலுறும்
துச்சன் றனையு னருட்கிலக்
காக்கித் துயர்களையாய்
உச்சிப் பிறையுடை யானிட
மேய வொருகுயிலே
கச்சிப் பதியிற் கரும்பேதென்
கூடற் கயற்கண்ணியே.

83. பேண வமைபுயற் கூந்தலும்
பாதிப் பிறைநுதலும்
மாண வமைகணை நோக்கமுஞ்
சாந்த மதிமுகமும்
ஏண மமைந்த வபய
வரத விருகரமும்
காண வருள்புரி தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

80. ஆரினை - ஆத்திமலரை. காரினை மேவிய - மேகத்தை ஒத்த. கூந்தால் - கூந்தலை உடையவளே; விளி.

81. தத்தை - கிளி. ஐ ஆனனன் - சிவபெருமான்.

82. பதிதர் - கடையவர்கள்.

83. புயல் - மேகம். கணை - அம்புபோன்ற. ஏணம் - நிலைபேறு.

84. ஆவா மிகவு மவமதிப்
பாரோ டலைந்தலைந்து
நாவாய் புலர்ந்து திரிவே
னொருவழி நண்ணச்செய்து
நீவா வெனக்கவி மாரி
பொழிந்திட நீயருளிக்
காவா திருப்பதென் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

85. அத்தனைக் கொன்ற வழிதகை
யாளனை யன்றருளும்
நித்தனைக் கூறிடு நீயருள்
சுற்றிந்த நீசன்றன்பால்
வைத்தனை யென்னி லெனைப்பொரு
வாரெவர் மாமயிலூர்
கத்தனை யீன்ற வனையேதென்
கூடற் கயற்கண்ணியே.

86. போற்ற வறிந்தில னின்னைமுன்
னோர்கள் புகன்றதுதி
சாற்ற வறிந்திலன் றாழ
வருந்திலன் றண்மலர்கள்
தூற்ற வறிந்தில னென்னையு
மாளத் துணிகுவையோ
காற்ற லறுவளத் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

84. நாவாய் - நாவும் வாயும். புலர்ந்து - உலர்ந்து.

85. அத்தனை - தந்தையை. அழிதகையாளனை - அயோக்கியனுக்கு. இங்கே கட்டியது மாபாதகந் தீர்த்த திருவிளையாடலை. கூறு இடும் - பங்கிட்டுக் கொள்ளும்; என்றது ஒரு பாதியில் இருந்ததைச் சுட்டியது. அருள் வைத்தனை என்னில். பொருவார் - ஒப்பவர்.

86. தாழ - வணங்க. தூற்ற - தூவ; அருச்சிக்க. காற்றல் அறுவளம் - வளப்பம் நீங்குதல் அற்ற.

87. வஞ்ச மலரு முளத்தார்கள்
கூட்ட மருவிப்பின்னும்
நஞ்ச மலரும் விழியா
ரெழிலை நயந்துதுயர்
நெஞ்ச மலருங் கொடியேனைக்
காத்திட னின்கடனே
கஞ்ச மலரும் புனற்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

88. குன்றைக் குழைத்த பரனா
ரகலங் குழைத்தருணீ
இன்றைக் கடியன் மனங்குழை
யாமைமற் றென்னையெனைப்
பின்றைப் புரப்பவர் யாவர்கண்
டாய்பசுப் பேசிடிற்றன்
கன்றைப் புரத்தல் கடனேதென்
கூடற் கயற்கண்ணியே.

89. மிடியாது மின்றி யிருப்பவுங்
கல்வி விதமனைத்தும்
வடியாது நித்தம் பெருகவுஞ்
செந்தமிழ் வான்கவிதை
ஒடியாது நித்தம் நவிலவுஞ்
செய்தெனை யுத்தமிநீ
கடியா தருள்புரி தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

87. வஞ்சம் மலரும் - வஞ்சகத்தன்மை தோன்றுகின்ற. மாதர் விழிக்கு நஞ்சம் உவமை. கஞ்சம் - தாமரை.

88. குன்றைக் குழைத்த பரனார் - மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமான். அகலம் குழைத்தருள் நீ - மார்பை அணைத்தலால் நெகிழச் செய்த நீ; காஞ்சிபுரத்தில் அம்மை தழுவ இறைவன் குழைந்ததை நினைத்தபடி. குழையாமை - உருகச் செய்யாதிருத்தல். மற்று: அசைநிலை. என்னை - என்ன காரணம். பின்றை - பிறகு. புரப்பவர் - பாதுகாப்பவர். பேசிடின் - நியாயத்தைச் சொன்னால். பேசிடின், பசு, தன் கன்றைப் புரத்தல் கடன்.

89. மிடி யாதும் - வறுமை சிறிதும். வடியாது - குறையாமல். வான் - பெருமை. ஒடியாது - தடைப்படாமல். கடியாது - வெறாமல் எனை அருள்புரி.

90. மாப்பது மாசனி தவ்வையின்
சார்பையென் மாட்டினிநீ
சீப்பதென் றோவென்றன் வல்வினை
யாய திரள்வனத்தைத்
தீப்பதென் றோநின்றன் சீரடி
யாரிடைச் சேர்த்தெனைநீ
காப்பதென் றோவருட் டென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

91. எல்லாச் செயலு முனதரு
ளாகவு மென்னையென்னே
அல்லாப்ப விட்டனை யென்செய்கு
வேனினி யையங்கொலோ
பொல்லாக் கொடுமன நின்றில
தாலருள் பூண்டமனம்
கல்லாச் சமைந்ததென் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

92. சாணாம் வயிற்றுக்குப் பல்கோடி
தீமைக டாம்புரிந்து
மாணா வுலுத்தரை வள்ளன்மை
யீரென்று வாழ்த்திச்சற்றும்
நாணா துழல்கின்ற நாயேன்
படுதுய ரங்கனைத்தும்
காணா திருப்பதென் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

90. மாப் பதுமாசனி - திருமகளாகிய தாமரையில் வீற்றிருக்கும் பெருமாட்டி. தவ்வை - அவள் தமக்கையாகிய மூதேவி. சீப்பது - நீக்குவது.- தீப்பது - எரிப்பது.

91. அல்லாப்ப - துன்புற. ஐயம்கொலோ - எல்லாச்செயலும் உனதருள் என்பது ஐயமோ. மனம் கல்லாய்ச் சமைந்தது என் - நின்னுடைய திருவுள்ளம் கல்லாக அமைந்தது என்ன காரணம்.

92. வயிற்றுக்கு - வயிற்றின்பொருட்டு; வயிறு வளர்ப்பதற்காக. மாணா - பெருமையில்லாத, உலுத்தரை - உலோபியரை.

93. வன்னெஞ்சக் கள்வருக் குள்ளே
யொளித்து வழிபட்டுறு
நன்னெஞ்ச வன்பர்க்குத் தோன்றுமன்
னேயிந் நலமிலியாம்
புன்னெஞ்சத் தீய னினைந்தே
பணிந்து புகழவுநீ
கன்னெஞ்சை யாகிய தென்னோதென்
கூடற் கயற்கண்ணியே.

94. செற்றார் புரஞ்செற்ற தேவேச
னோடென்றன் சிந்தையிடை
உற்றா தரவி னுறைந்தருள்
வாய்விண் ணுலகுரிமை
பெற்றானைத் தாக்கும் விருத்திரப்
பேயைப் பெயர்த்ததென்று
கற்றார் வழுததுறுந் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

95. விரிசா கரத்தி னிடைத்துரும்
பென்ன மிகவலையும்
பரிசார்ந்த நெஞ்சை நினையே
நினைக்கப் பணித்தருள்வாய்
தெரிசாது சங்க சிரோமணி
சீறிடத் தேய்ந்துழலும்
கரிசாபந் தீர்த்தருள் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

93. உள்ளே ஒளித்து - உள்ளிருந்தும் அவருக்குப் புலப்படாமல் மறைந்து நின்று. நலம் இலி - நற்பண்பு இல்லாத அடியேன். கல்நெஞ்சை - கல்லைப் போன்ற நெஞ்சை உடையாய்.

94. செற்றார் - பகைவருடைய. புரம் - திரிபுரங்களை. செற்ற - அழித்த. ஆதரவின் - அன்பினால். விண்ணுலகு உரிமை பெற்றானை - தேவலோகத்தை ஆளும் உரிமை பெற்ற இந்திரனை. விருத்திரப்பேயை - விருத்திராசுரனைக் கொன்றதனால் தோன்றிய பிரமகத்தியை. பெயர்த்தது - போக்கிய தலம். வழுத்தும் - புகழும். இப்பாட்டில் இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் குறிக்கப்பெற்றது.

95. சாகரத்தினிடை - கடலின் இடையே அகப்பட்ட. பரிசு - தன்மை. சாது சங்க சிரோமணி - சாதுக்களாகிய முனிவர்களின் கூட்டத்தில் முடிமணி போன்ற துர்வாசர். சீறிட - கோபித்துச் சாபமிட. கரி - ஐராவதம். இதில் வெள்ளையானை சாபந் தீர்த்த திருவிளையாடல் குறிக்கப் பெற்றது.

96. தாமம் வளைகுழன் மங்கையர்
கொங்கைச் சயிலநினைந்
தேம மிலேனைப் புரந்தாள
நீசிறி தெண்ணுவையோ
தேமலர்ச்சோலை மணவூ
ருறைகுல சேகரன்செய்
காமர் நகரெனுந் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

97. சௌரியம் பேசி யுடல்பொரு
ளாவி சதமென்றெங்கும்
பௌரிகொ டீய கொடியேனை
யாண்டருள் பண்ணுவையோ
ஔரச னாக வயில்வே
லனைப்பெற்ற வன்னைநலக்
கௌரிய னீன்ற மயிலேதென்
கூடற் கயற்கண்ணியே.

98. எண்களிக் குந்நின தம்புயத்
தாளினை யெண்ணியெண்ணி
மண்களிக் குஞ்சுவை சேர்கவி
பாட வரந்தருவாய்
விண்களிக் குங்கயி லைக்கிரி
நாதனை மேவிமணம்
கண்களிக் கச்செயுங் கண்ணேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

96. தாமம் - மலர்மாலை. சயிலம் - மலை. ஏமம் - பாதுகாப்பு; இன்பமும் ஆம். தேமலர் - தேனை உடைய மலர். காமர் - அழகை உடைய, மதுரைமா நகரம் குலசேகர பாண்டியனால் முதல் முதல் அமைக்கப் பெற்றது. அதற்குமுன் அவன் மணவூரில் இருந்தான். திருநகரங் கண்ட படலம் காண்க.

97. சௌரியம் - சூரத்தனம்; வீறாப்பு. சதம் - நிலையானது. பௌரி; பவுரி என்பதன் போலி; சுழலுதல். ஔரசன் - முறையான பிள்ளை. கௌரியன் - பாண்டியன்.

98. எண் - உள்ளம். மண் - உலகத்திலுள்ளோர். விண் - விண்ணோர். மணம் செயும். திருமணப்படலம் காண்க.

99. சாலாத தீயரைச் சார்ந்தே
துதிபல சாற்றிநின்றன்
பாலா தரவு சிறிதுமி
லேனைப் பதைப்பவிடேல்
மேலா மமல னிரசத
மன்றில் வியாக்கிரத்தின்
காலானுக் காடி யருள்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

100. கண்டோ மொழிமுலை செண்டோ
வெனமங் கையரைநிதம்
விண்டோய் விலாதுழல் வீணனை
நீகை விடேலமலாய்
குண்டோ தரன்பசி தீரவெண்
சோறு கொடுத்துணலைக்
கண்டோ விலாமகிழ் கொண்டோய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

99. சாலாத - பண்பு நிரம்பாத. நின்றன்பால். ஆதரவு - அன்பு. விடேல் - விடாதே. இரசதமன்று - வெள்ளியம்பலம். வியாக்கிரத்தின் காலான் - புலிக்கால் முனிவர். அமலன் ஆடி அருள். வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம் காண்க.

100. கண்டோ - கற்கண்டோ. விண்டு - புகழ்ந்து. அமலாய் - அமலையே. உணலைக் கண்டு - அவன் உண்ணுவதைப் பார்த்து. ஏ இலா - குறைவிலாத. மகிழ் - மகிழ்ச்சி. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் காண்க.

அங்கயற்கண்ணி மாலை

(தரவு கொச்சகக்கலிப்பா)

சீறுதரு மூடர்கடஞ் சேவைகளே செய்தொழுகிப்
பேறுதரு நின்னருளைப் பேணேனை யாள்குவையோ
கூறுதரு குறட்கன்னக் குழியினொடு வையையெனும்
ஆறுதரு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (1)

குன்றுவரு கொங்கையுடைக் கோதையர்கள் மேனிதொறும்
சென்றுவரு தீமைமிகு சிந்தையனை யாள்குவையோ
கன்றுவரு மானணிகைக் கண்ணுதலா லெழுகடலும்
அன்றுவரு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (2)

உண்ண லுடுத்த லுறங்கன் முதலியவே
நண்ணலுறு மிக்கொடிய நாயேனை யாள்குவையோ
விண்ணடைந்தாங் கின்பநுகர் வீரன்மல யத்துவச
அண்ணல்வரு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (3)

குன்றுவளை மலர்க்கரத்துக் கோவையுநின் னையுமதியா
தின்றுவளைக் கரமடவார்க் கிரங்குமெனை யாள்குவையோ
சென்றுவளை புகழ்மிகுமோர் செழியனிந் திரன்முடிமேல்
அன்றுவளை யெறிகூடல் அங்கயற்க ணாயகியே. (4)

---

1. குறட்கு - குண்டோதரனுக்கு. இப்பாட்டில் குண்டோதரனுக்கு அன்னக்குழியை அழைத்த திருவிளையாடல், வையையை அழைத்த திருவிளையாடல் ஆகிய இரண்டும் வந்தன.

2. கன்று வருமான் - மான்கன்று. இச்செய்யுளில் ஏழு கடலை அழைத்த திருவிளையாடல் வந்தது.

3. விண் - சுவர்க்க பதவி. இப்பாடலில் மலயத்துவசனை அழைத்த வரலாறு வந்தது.

4. குன்று வளை - மேருவை வில்லாக வளைத்த. கோவையும் - சிவபெருமானையும். செழியன் - உக்கிரகுமாரபாண்டியன். வளை - ஓராயுதம். இதில், இந்திரன் முடிமேல் உக்கிரகுமாரன் வளை எறிந்த வரலாறு வந்தது.

கடித்தவெயி றுடைச்செங்கோற் காலன்றண் டனைகருதா
தொடித்தவற வினைமிகவு முடையேனை யாள்குவையோ
கடித்தபொழில் மேருவினைக் கைச்செண்டி னுக்கிரன்முன்
அடித்தபெரும் பொழிற்கூடல் அங்கயற்க ணாயகியே. (5)

வெங்கணர்கண் டீவினையே விழைந்துன்சந் நிதியணுகா
திங்கணுக ரறக்கடைசெய் திருப்பேனை யாள்குவையோ
எங்கணரு ளெனுமுனிவர்க் கீரிருவே தப்பொருளை
அங்கணனா ரருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (6)

குயிலோ கிளியோவிக் கோதையர்கள் மாற்றமென்று
மயலே மிகுத்துழலிவ் வஞ்சகனை யாள்குவையோ
வெயிலாரும் பூணணிகள் மேவுக் கிரவரசா
அயிலோன் வருகூடல் அங்கயற்க ணாயகியே. (7)

இன்பினொடு நின்பெருமை யெண்ணியொழு குதலின்றித்
துன்பினொடு நாளகற்றுந் துன்மதியை யாள்குவையோ
வன்பினொடு மெம்பெருமான் வளைசெண்டு வேலொருசேய்க்
கன்பினொடு மருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (8)

வெயில்விடுத்த செம்மேனி விமலனொடு நினைநினைப்போர்ப்
பயில்விடுத்த முழுமூடப் பாதகனை யாள்குவையோ
மயில்விடுத்த வுக்கிரனாம் வழுதியலை கடல்சுவற
அயில்விடுத்த திருக்கூடல் அங்கயற்க ணாயகியே. (9)

---

5. எயிறு - பல். கோல் - தண்டம். காலன் - எமன். ஒடித்த அறவினை உடையேன் - அறச்செயல்களை அழித்தவன். கடித்த -மணம் மிக்க. இதில் உக்கிரகுமாரன் மேருவைச் செண்டால் அடித்த வரலாறு வந்தது.

6. அறக்கடை - பாவம். எங்கண் அருள் - எங்களுக்கு அருள் செய்வாயாக. இதில் வேதப்பொருளை அருளிய வரலாறு வந்தது.

7. மாற்றம் - சொல். அயிலோன் - வேலன். இதில் முருகன் உக்கிரகுமாரனாக அவதரித்த வரலாறு வந்தது.

8. நாள் அகற்றும் - காலம் கழிக்கும். சேய் - உக்கிரகுமாரன். இதில் உக்கிரகுமாரனுக்கு வளையும், செண்டும், வேலும் கொடுத்த வரலாறு வந்தது.

9. நினைப்பார்ப் பயில் விடுத்த - நினைப்பவர்களோடு பழகுவதை விட்ட. மயில் விடுத்த - தனக்கு உரிய மயில் வாகனத்தை விட்டு அவதரித்த. அயில் - வேல். இதில் உக்கிரகுமாரன் கடல் சுவற வேல் வீசிய வரலாறு வந்தது.

முக்காலங் களுமுணரும் மூதறிஞர் தமைச்சார்தல்
எக்கால மெனநினையா திருப்பேனை யாள்குவையோ
நக்கால நுகர்ந்தபிரா னவமணியி னியலமைச்சர்க்
கக்காலம் பகர்கூடல் அங்கயற்க ணாயகியே. (10)

வெம்புபசி பிணிதாகம் வெவ்வறுமை யடைந்துன்னை
நம்புதலி லாதுழலு நாயேனை யாள்குவையோ
பம்புதிரைக் கடலதனைப் பசுபதிவே ணியினுறுநான்
கம்புதமார் தருகூடல் அங்கயற்க ணாயகியே (11)

பாகியலு மொழிமடவார்ப் பற்றிநினைப் பற்றாது
போகியபுல் லருக்கரசாம் புன்மையனை யாள்குவையோ
வாகியல்விண் மழைதடுக்க மழைமுகில்கள் நான்மாடம்
ஆகியமுத் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (12)

பாடியலுந் தமிழ்நூல்கள் பலபடித்து மறிவின்றி
வாடியநெஞ் சகமுடைய மாண்பிலியை யாள்குவையோ
தேடியமா றனக்கரியர் சித்தரென வந்தெல்லாம்
ஆடியமுத் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (13)

தேனையுறழ் சுவைமிகுத்த செய்யுளினின் றனைத்துதியா
தேனையதி பாதகனை யீனனைநன் காள்குவையோ
மானையணி மலர்க்கரத்து வள்ளலார் கழையினைக்கல்
லானையுணப் புரிகூடல் அங்கயற்க ணாயகியே. (14)

---

10. நக்கு - மகிழ்ந்து. பகர் - விற்ற. மாணிக்கம் விற்ற திருவிளையாடல் இதில் வந்தது.

11. அம்புதம் - மேகம். இதில் நான்மாடக்கூடலான வரலாறு வந்தது.

12. பாகு இயலும் மொழி - வெல்லப்பாகு போன்ற சொல். வாகு - அழகு. இதிலும் நான்மாடக் கூடலான வரலாறு வந்தது.

13. பாடு இயலும் - பெருமையைப் பெற்ற. இதில் எல்லாம் வல்ல சித்தரான திருவிளையாடல் வந்தது.

14. துதியாதேனை துதியாத என்னை. கழை - கரும்பு. இதில் கல்லானைக்குக் கரும்பு அருத்திய திருவிளையாடல் வந்தது.

குன்றெய்து கொங்கையுடைக் கோதையர்கட் காளாகி
இன்றெய்தும் பழியினனா யிருப்பேனை யாள்குவையோ
மன்றெய்து நடமுடையார் வல்லமணர் விடுகளிற்றை
அன்றெய்து செறுகூடல் அங்கயற்க ணாயகியே. (15)

மருத்தகுழன் மடவார்கள் வாஞ்சைமீஇ மனமலையும்
ஒருத்தனைக்கா சினிச்சுமையா வுற்றேனை யாள்குவையோ
விருத்தன்முதல் மூன்றுருவ மேவியருட் பரனாடும்
அருத்தியுறு வளக்கூடல் அங்கயற்க ணாயகியே. (16)

வாடிமன மயங்காதுன் மலர்ப்பதத்தை யின்கவியாற்
பாடிநிதங் களித்திடுமா பயிற்றியெனை யாள்குவையோ
தேடிவரு புகழரச சேகரற்குப் பரன்மாறி
ஆடியருள் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (17)

வெஞ்சினக்கூற் றுவன்புரியும் வெந்தண்டம் மருவாதுன்
கஞ்சமலர்ச் சேவடியைக் கருதேனை யாள்குவையோ
நஞ்சினமழ குறுகளத்து நம்பனொரு பெண்பழிக்கா
அஞ்சினவான் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (18)

நீண்டவிழி மங்கையரை நேசித்து நினைவணங்கா
தீண்டவறக் கடைபுரிந்தே யிழிந்தேனை யாள்குவையோ
மாண்டதிருத் தந்தைதனை மாய்த்தனையைப் புணர்ந்தோனை
ஆண்டருளுந் திருக்கூடல் அங்கயற்க ணாயகியே. (19)

---

15. செறு - அழித்த. இதில் யானை எய்த திருவிளையாடல் வந்தது.

16. மருத்த - மணமுடைய. அருத்தி - அன்பு. இதில் விருத்த குமார பாலரான திருவிளையாடல் வந்தது.

17. களித்திடுமா - களித்திடுமாறு. அரச்சேகரன் - இராசசேகர பாண்டியன். மாறி - கால்மாறி. இதில் கால் மாறியாடிய திருவிளையாடல் வந்தது.

18. தண்டம் - தண்டனை. களத்து - கழுத்தையுடைய. இதில் பழியஞ்சின திருவிளையாடல் வந்தது.

19. ஈண்ட - மிகுதியாகச் சேரும்படி. அறக்கடை - பாவம். இதில் மாபாதகம் தீர்த்த திருவிளையாடல் வந்தது.

துங்கமுறு குருவடியைத் தொழலின்றி நாள்கழியாப்
பங்கமுறு பழிமிகுத்த பதகனையு மாள்குவையோ
புங்கமுறு குருமனையைப் போற்றாது விழைந்தோன்றன்
அங்கமறுத் திடுகூடல் அங்கயற்க ணாயகியே. (20)

இரவைநிகர் குழல்வாட்க ணேந்திழையார் தமைவிழைந்தே
உரவையகன் றலக்கணுறீஇ யொழியேனை யாள்குவையோ
பரவையமண் பதகர்விறற் பாண்டியன்மேல் விடுத்தவிட
அரவையறுத் திடுகூடல் அங்கயற்க ணாயகியே. (21)

பாவையுரைத் துனதுமலர்ப் பதம்பணித லொழிந்திந்த
நாவைவறி தேசுமக்கும் நாயேனை யாள்குவையோ
கோவைவெறுத் தேயமணக் கொடியர்விடுத் திடவந்த
ஆவையொழித் திடுகூடல் அங்கயற்க ணாயகியே. (22)

குழைத்த மனமுமலர் கொண்டு குவிகையும்
இழைத்த அருச்சனையு மில்லேனை யாள்குவையோ
தழைத்த படையைச் சவுந்தரசா மந்தனுக்கா
அழைத்த புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (23)

இளித்த செயலு மிழிவுடையோர்ச் சேர்ந்து
களித்த மனமுமுடைக் கள்வனையு மாள்குவையோ
ஒளித்த நிதிய முலவாக் கிழியொருவற்
களித்த புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (24)

---

20. புங்கம் - தூய்மை. இதில் அங்கம் அறுத்த திருவிளையாடல் வந்தது.

21. உரவை - அறிவை. அலக்கண் - துன்பம். பரவை அமண் - கடலைப் போன்று விரிந்த கூட்டமாயிருந்த சமணர்கள். இதில் நாகமெய்த திருவிளையாடல் வந்தது.

22. கோவை - பாண்டிய மன்னனை. இதில் மாயப் பசுவை வதைத்த திருவிளையாடல் வந்தது.

23. சவுந்தர சாமந்தன் - பாண்டியனுடைய சேனாபதி. இதில் மெய்க்காட் டிட்ட திருவிளையாடல் வந்தது.

24. ஒருவற்கு - குலபூடணன் என்னும் பாண்டியனுக்கு. இதில் உலவாக் கிழி அருளிய திருவிளையாடல் வந்தது.

இடைந்த செயலுநனி யேக்கறவும் புல்லருக்
குடைந்த மனமு முடையேனை யாள்குவையோ
மிடைந்த வளைகடமை மெய்ப்பர மன்வீதி
அடைந்து பகர்கூடல் அங்கயற்க ணாயகியே. (25)

பொருளும் மனையும் புதல்வரும் மெய்யென்று
மருளுங் கொடிய மனத்தேனை யாள்குவையோ
தெருளுமட வார்க்கட்ட சித்தி களைப்பெம்மான்
அருளுந் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (26)

படையாள் விழியவரைப் பார்த்துருகி நின்னை
உடையா னெனமதியா துற்றேனை யாள்குவையோ
நடையாள் வளவனுக்கு நாத னருளிவிடை
அடையாளஞ் செய்கூடல் அங்கயற்க ணாயகியே. (27)

கருத்து மொழியுமிந்தக் காயமும் வேறாகி
இருத்துந் துயர்க்கிடமா மீனனையு மாள்குவையோ
செருத்துன் படைபடைக்குத் தேவன் புனல்வைத்
தருத்தும் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (28)

பாற்றுங் கொடுமை படைத்தே யறவழியை
மாற்றுங் கொடிய மனத்தேனை யாள்குவையோ
போற்றுந் தெரிவை பொருட்டமலன் செம்பொன்மிக
ஆற்றுந் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (29)

---

25. இடைந்த - தலித்த. பகர் - விற்ற. இதில் வளையல் விற்ற திருவிளையாடல் வந்தது.

26. தெருளும் - தெளிவபெற்ற. மடவார் - இயக்க மாதர். இதில் அட்டமா சித்தி உபதேசித்த திருவிளையாடல் வந்தது.

27. படை ஆள் விழியவரை - ஆயுதத்தைப் போன்ற விழியை உடைய பெண்களை. வளவன் - சோழன். விடை - இடபம். இதில் விடை இலச்சினை இட்ட திருவிளையாடல் வந்தது.

28. செருத்துன்பு அடை படைக்கு - போரினால் உண்டான துன்பத்தை அடைந்த படை விரர்களுக்கு. தேவன் - சிவபெருமான். இதில் தண்ணீர்ப் பந்தர் வைத்த திருவிளையாடல் வந்தது.

29. பாற்றும் - நீக்குவதற்குரிய. தெரிவை - பொன்னனையாள். இதில் இரசவாதம் செய்த திருவிளையாடல் வந்தது.

பாழ்த்த புறச்சமயப் பாழை யடைந்துபிறர்
தாழ்த்த வருந்தும் தமியேனை யாள்குவையோ
காழ்த்த பகையுடைய காவலனைப் பாம்புரியில்
ஆழ்த்தும் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (30)

பலவா தனைமருவிப் பற்றிகந்து நெஞ்சம்
கலவா வுழலுமிந்தத் துட்டனையு மாள்குவையோ
உலவாநெற் கோட்டை யொருவற் கொருவனருள்
அலையார் புனற்கூடல் அங்கயற்க ணாயகியே. (31)

காமனென்ன வீனர்தமைக் கட்டுரைத்து மிக்குழலும்
தீமனத்த னாய சிறியனையு மாள்குவையோ
மாமனென வந்து வழக்குரைத்த வேணியிடை
ஆமணிவோன் மணிக்கூடல் அங்கயற்க ணாயகியே. (32)

மருளார் மனத்துன் மலரடியைப் பேணா
திருளார் குழுவோ டிணங்குமெனை யாள்குவையோ
தெருளார் வரகுணர்க்குச் சிவலோகங் காட்டியோர்
அருளாளர் வாழ்கூடல் அங்கயற்க ணாயகியே. (33)

சித்திர மென்னத் திகழ்மடவார்க் காளாகிக்
குத்திர மேய கொடியேனை யாள்குவையோ
பத்திரற்கு வீணை பரிந்தே பகைவெலுமால்
அத்திரர்வாழ் கூடனகர் அங்கயற்க ணாயகியே. (34)

---

30. *காழ்த்த - முற்றிய. காவலனை - சோழனை. பாம்புரி - அகழ். இதில் சோழனை மடுவில் வீழ்த்திய திருவிளையாடல் வந்தது.*

31. *கலவா - சுழன்று. ஒருவற்கு - ஒருழவனுக்கு. ஒருவன் - சிவபெருமான். இதில் உலவாக் கோட்டையருளிய திருவிளையாடல் வந்தது.*

32. *ஆம் - நீர்; கங்கை. இதில் மாமனாக வந்து வழக்கு உரைத்த திருவிளையாடல் வந்தது.*

33. *இருள் - அறியாமை. தெருள் - தெளிந்த அறிவு. இதில் வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திருவிளையாடல் வந்தது.*

34. *குத்திரம் - வஞ்சகம். பத்திரன் - பாணபத்திரன். மால் அத்திரர் - திருமாலாகிய அம்பை உடைய சிவபெருமான். இதில் விறகு விற்ற திருவிளை யாடல் வந்தது.*

நேரலர்கட் கஞ்சியுனை நிமிடப் பொழுதேனும்
ஓரலனாய்த் தீமைமிக வுற்றேனை யாள்குவையோ
சேரலன்பாற் செல்லத் திருமுகம்பா ணர்க்கருளி
ஆரணிகோ வாழ்கூடல் அங்கயற்க ணாயகியே. (35)

நையமன நின்றனுரு நாடிப் பணிந்துதுதித்
துய்ய வறியா துழல்வேனை யாள்குவையோ
செய்யமனப் பாணர்க்குச் சேர்மழையிற் பொற்பலகை
ஐயனிடு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (36)

வசையாருந் தீய வழிமருவி நின்பால்
நசையாது மின்றியுறை நாயேனை யாள்குவையோ
இசைவாது வெல்லவோ ரேழைக் கருள்செய்
தசையா னுறைகூடல் அங்கயற்க ணாயகியே. (37)

உன்னை யுனதருளை யுன்னா தனுதினமும்
தன்னை மதித்துத் தருக்குமெனை யாள்குவையோ
மன்னை வுறச்செய்த வன்றிக் குருளைகளுக்
கன்னையனை யான்கூடல் அங்கயற்க ணாயகியே. (38)

தேக்கிய வின்பவழி தேராது துன்பவழி
ஆக்கிய வொப்பரிய வற்பனையு மாள்குவையோ
பாக்கிய வேனப் பறழ்களை மந்திரியா
ஆக்கிய கூடனகர் அங்கயற்க ணாயகியே. (39)

---

35. நேரலர்கட்கு - பகைவர்களுக்கு. ஓரலனாய் - நியானிக்காதவனாகி. பாணர்க்கு - பாணபத்திரர்க்கு. ஆர் அணி கோ - ஆத்திமாலையை அணிந்த சிவபெருமான். இதில் திருமுகம் கொடுத்த திருவிளையாடல் வந்தது.

36. இதில் பலகையிட்ட திருவிளையாடல் வந்தது.

37. நசை - அன்பு. ஓர் ஏழைக்கு - பாணபத்திரர் மனைவிக்கு. அசையான் - சலனமில்லாதவன்; தாணு. இதில் இசைவாது வென்ற வரலாறு வந்தது.

38. மன் நைவு - மிக்க வருத்தம். வன்றிக் குருளைகள் - பன்றிக்குட்டிகள். இதில் பன்றிக்குட்டிகளுக்கு முலை கொடுத்த திருவிளையாடல் வந்தது.

39. ஏனப் பறழ்களை - பன்றிக்குட்டிகளை. இதில் பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய திருவிளையாடல் வந்தது.

நின்னாம மென்று நியம முறச்செபியா
துன்னா ரருளைவிழை வுற்றேனை யாள்குவையோ
கொன்னாருங் காரிக் குருவிக் கருள்புரிந்த
அன்னான் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (40)

காரை யுறழ்கரத்தா யென்று கசடர்கடம்
பேரை யியம்பியலை பேதையனை யாள்குவையோ
நாரை யுறமுத்தி நல்கி யருள்புரிந்த
ஆரையணி வார்கூடல் அங்கயற்க ணாயகியே. (41)

பாலவாய் மேவுதமிழ்ப் பாக்களினுன் றாள்பரவா
தேலவா யோதியரை யேத்துமெனை யாள்குவையோ
சாலவா யொருவழுதி தான்காணப் பாம்புசுலாய்
ஆலவா யாங்கூடல் அங்கயற்க ணாயகியே. (42)

வம்பெய்து கொங்கை மடவாரைப் போற்றியுனை
நம்பெய்த லில்லாத நாயினையு மாள்குவையோ
கும்பெய்து தானையுடைக் கோனஞ்சச் சுந்தரப்பேர்
அம்பெய்த கோன்கூடல் அங்கயற்க ணாயகியே (43)

தேன்றோய் சுவைத்தமிழைத் தெள்ளித் தெளியாது
மான்றோய் விழியால் மயங்குமெனை யாள்குவையோ
ஏன்றோ ருயர்ந்தோ ரிழிந்தோ ரெனும்பலகை
ஆன்றோர்க் கருள்கூடல் அங்கயற்க ணாயகியே (44)

---

40. *நியமம்* - விரதம். கொன் - பெருமை. காரிக்குருவி - காரியாகிய குருவி; வலியான். இதில் கரிக்குருவிக்கு உபதேசம் செய்த திருவிளையாடல் வந்தது.

41. ஆரை - ஆத்தி மலரை. இதில் நாரைக்கு முத்தி கொடுத்த திருவிளையாடல் வந்தது.

42. பால் அவாய் - பாலைப்போன்று. ஏலவாய் ஓதியரை - மயிர்ச் சாந்தைத் தன்னிடத்தே பெற்ற கூந்தலை உடைய பெண்களை. சால ஆய் - நூல்களை நன்றாக ஆராய்ந்த. சுலாய் - சுற்றி. இதில் திருவாலவாயான வரலாறு வந்தது.

43. வம்பு - கச்சு. நம்பு - விருப்பம். கும்பு - கூட்டம். இதில் சுந்தரப் பேரம்பு எய்த திருவிளையாடல் வந்தது.

44. ஏன்றோர் - தாங்கிய புலவர்கள். பலகை - சங்கப்பலகை. ஆன்றோர்க்கு - புலவர்க்கு. இதில் சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடல் வந்தது.

களித்த வுளமுங் கசடர்தமைச் சொல்வாயும்
ஒளித்த நடையு முடையேனை யாள்குவையோ
தளித்ததொடைப் பெம்மான் றருமிக்குப் பொற்கிழியன்
றளித்த புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (45)

சித்தநா வுடல்நின்பாற் செலுத்திவழி படலின்றி
மத்தனாய்த் திரிந்திடுமிம் மாண்பிலியை யாள்குவையோ
கத்தனார் கீரனைநீர்க் கரையேற்றி யாண்டருளும்
அத்தனா ருறைகூடல் அங்கயற்க ணாயகியே. (46)

இகத்தியலும் வழியிதுவென் றெண்ணாம லின்பனைத்தும்
உகத்தியங்கி நாள்கழிக்க லுற்றேனை யாள்குவையோ
மிகத்தியங்கு கீரனுக்கு விமலரரு ளாலியலைந்
தகத்தியனார் நவில்கூடல் அங்கயற்க ணாயகியே. (47)

துங்கத்தார் நின்கோயில் தொண்டுசெய துட்டருக்கிப்
பங்கத்தார்க் காளாமிப் பாவியினை யாள்குவையோ
சங்கத்தார் மாறு தணித்தே யராவணிந்த
அங்கத்தார் வாழ்கூடல் அங்கயற்க ணாயகியே (48)

இணங்குமற வாற்றினிடை யேகாத மூடர்
கணங்குழுமி நிற்பாடக் கல்லேனை யாள்குவையோ
பிணங்குமிடைக் காடனுளப் பேதகற்றி ஆண்டவனோ
டணங்கரசாய்க் கூடல்வளர் அங்கயற்க ணாயகியே. (49)

---

45. களித்த - இறுமாந்து மகிழ்ந்த. ஒளித்த நடை - மறைவாக மேற்கொண்ட தீய ஒழுக்கம். தளித்த தொடை - தேன் துளிக்கும் மாலை. இதில் தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடல் வந்தது.

46. நீர்க்கரை - பொற்றாமரைத் தீர்த்தத்தின் கரை. இதில் கீரனைக் கரையேற்றிய திருவிளையாடல் வந்தது.

47. இயல் ஐந்து - தமிழுக்குரிய இலக்கணம் ஐந்து. இதில் கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த வரலாறு வந்தது.

48. துங்கத்தார் - தூயவர் சேரும். பங்கத்தார்க்கு - குற்றம் உடையவர்களுக்கு. ஆளாம் - ஏவலனாகின்ற. மாறு - கலகம். இதில் சங்கத்தார் கலகம் தீர்த்த திருவிளையாடல் வந்தது.

49. மூடர் கணம் குழுமி - அறிவிலிகளின் கூட்டத்தில் கூடி. பேது - பேதம்; வேறுபாடு. இதில் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த திருவிளையாடல் வந்தது.

மலைவீசு முத்தே மயிலே மரகதமே
உலைவீசு பொன்னேயென் றோதேனை யாள்குவையோ
வலைவீசி முன்ன மணந்தபெரு மானுயிரே
அலைவீசு நீர்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (50)

கந்தடருங் களியானைக் காவலனே யெனச்சிதடன்
முந்தணவித் துதித்தலையும் முழுமகனை யாள்குவையோ
மந்தணத்தைப் பெருந்துறையின் மாணிக்க வாசகப்பேர்
அந்தணருக் கருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (51)

நயமாக்குஞ் செஞ்சுவைப்பா நான்கினையு மூடர்கடம்
வயமாக்கி மிகவருந்திம் மாண்பிலியை யாள்குவையோ
சயமாக்கும் பரசணிந்த சம்புமுனஞ் சம்புவினை
அயமாக்கும் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (52)

குன்றோடு வல்லிரும்பாங் குணமருவி யெவ்விடத்தும்
சென்றோடுஞ் சிந்தையுடைச் சிறியனையு மாள்குவையோ
மன்றோடு மன்பர்மனம் வாழ்பரமன் பரிநரியா
அன்றோடப் புரிகூடல் அங்கயற்க ணாயகியே. (53)

எண்சுமந்த செந்தமிழை எண்ணிஎண்ணித் துன்பமரீஇப்
புண்சுமந்த நெஞ்சமுடைப் புல்லியனை யாள்குவையோ
மண்சுமந்து பின்னர் வடுச்சுமந்த மாதேவன்
அண்சுமந்த கூடனகர் அங்கயற்க ணாயகியே. (54)

---

50. மலை விசும் முத்தே - இமய மலையாகிய பர்வதராசன் தந்த முத்துப் போன்ற தாயே. இதில் வலைவீசின திருவிளையாடல் வந்தது.

51. கந்து அடரும் - கட்டுத்தறியை முறிக்கும். சிதடன் முந்து அணவி - குருடன் முன்பு சென்று. முழு மகன் - மூடன். மந்தணத்தை - இரகசியமாகிய உபதேசத்தை. இதில் வாதவூரடிகளுக்கு உபதேசித்த திருவிளையாடல் வந்தது.

52. பரசு - மழு. சம்புவினை அயம் ஆக்கும் - நரிகளைப் பரிகள் ஆக்கிய. இதில் நரி பரியாக்கிய திருவிளையாடல் வந்தது.

53. மன்றில் வாழ்வதோடு, அன்பர் மனத்திலும் வாழ் பரமன். இதில் பரிநரியாக்கிய திருவிளையாடல் வந்தது.

54. அண் சுமந்த - அண்ணுதலை ஏற்ற. இதில் மண்சுமந்த திருவிளையாடல் வந்தது.

பரசிற் சுகமருணின் பாதம் பணிந்துன்பால்
விரசற் குளந்துணியா வீணனைநீ யாள்குவையோ
வரசண் பையர்தலைவர் வந்தே சுரந்தீர்த்
தரசற் கருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (55)

துளிக்குஞ் சுவைத்தமிழைச் சொல்லித் துதியாதே
களிக்கும் பயனறியாக் கள்வனை நீ யாள்குவையோ
தெளிக்கு மறைச்சிறுவர் தீச்சமணை மாற்றி
அளிக்குந் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (56)

மறம்பயனாக் கொண்டசில மானிடரைப் போற்றித்
திறம்புமதி பாதகனாந் தீயனைநீ யாள்குவையோ
புறம்பயத்துச் சான்றாம் பொருளை யழைத்த
அறம்பயனார் கூடனகர் அங்கயற்க ணாயகியே. (57)

வம்போடு நெஞ்சு மழையோடு கண்களுமாய்த்
துன்போடு பாவாற் றுதிக்குமெனை யாள்குவ்வையோ
........................மெல்லோரும் பூசையுவந்
.... (58)

55. பரசின் - புகழ்ந்தால். விரசற்கு - கலப்பதற்கு. வரசண்பையர் தலைவர் - மேலான சீகாழிக்குத் தலைவராகிய திருஞான சம்பந்தப் பெருமான். அரசற்கு -கூன் பாண்டியனுக்கு, இதில் பாண்டியன் சுரம் தீர்த்த வரலாறு வந்தது.

56. மறைச் சிறுவர் - ஞான சம்பந்தர். இதில் சமணரை வென்ற திருவிளையாடல் வந்தது.

57. புறம்பயம் - திருப்புறம்பயம் என்னும் தலம். சான்றாம் பொருள் - வன்னியும், கிணறும், இலிங்கமும். இதில் வன்னியும் கிணறும் இலிங்கமும் சாட்சியாக அழைத்த வரலாறு வந்தது.

கடம்பவன வல்லி பதிகம்

(கட்டளைக் கலித்துறை)

1\. தூமேவு வீரந் திருஞான
மூன்றையுந் தொண்டரெல்லாம்
தாமேவு வண்ண மளிப்பாயென்
றான்றவர் சாற்றுதல்கேட்
டேமேவு நின்சரண் சார்ந்தே
னிவற்றை யெளிதருள்வாய்
மாமேவு வானவர் வாழ்த்துங்
கடம்ப வனவல்லியே.

2\. வலக்கண் டிருவிடக் கண்வாணி
நெற்றியில் வாய்த்தொளிரும்
புலக்க ணறிவு மகளென
நூல்கள் புகல்வதுகேட்
டலக்கண் விலக்குநின் றாளடைந்
தேனரு ளன்பர்கள்மும்
மலக்கண் ணடையுறு கண்டீர்
கடம்ப வனவல்லியே.

1\. திரு - செல்வம். ஏ - பெருமை. கடம்பவனவல்லி - மதுரையில் எழுந்தருளியிருக்கும் அங்கயற்கணம்மை.

2\. அம்பிகையின் வலக்கண் திருமகள், இடக்கண் கலைமகள், நெற்றிக்கண் ஞானசக்தி யென்பர். திரு - திருமகள். புலக்கண் - ஞானக்கண். அறிவு மகள் - ஞானசக்தி. அலக்கண் - துன்பத்தை. மும்மலக் கண் அடை உறுகண் - மும்மலத்தால் அடையும் துன்பத்தை. தீர் - தீர்க்கும்.

3. விந்தா டவிக்கன்றி நின்பாத
   தாமரை மேவுறலென்
சிந்தா டவிக்கியை யாதுகொ
   லோசெக மீன்றவன்னே
சந்தா டவிசண்ப காடவி
   கற்ப தருவடவி
வந்தா ரடவி பலசூழ்
   கடம்ப வனவல்லியே.

4. தாயா முனக்குத் தமியேன்
   குறைகளைச் சாற்றனன்றே
ஈயார் தமிழ்ச்சுவை யாயா
   ரிறுமாந் திருப்பவர்பாற்
போயா சகஞ்செய விட்டுவிடே
   லென்றன் புத்தமுதே
வாயார வாழ்த்த வருள்வாய்
   கடம்ப வனவல்லியே.

5. புத்தியி லேன்விழ லுக்கிறைப்
   பேனின்றன் பொன்னடிசேர்
பத்தியி லேனெனி னுஞ்சரண்
   சார்ந்தனன் பார்த்தருளெண்
சித்தி தருமமிழ் தக்கட
   லின்மணித் தீவகத்தின்
மத்தியில் வில்வ வனஞ்சார்
   கடம்ப வனவல்லியே.

---

3. அம்பிகை விந்தமலைக் காட்டில் வாழ்வதாகக் கூறுவது மரபு; அதனால் விந்தியாசலநிவாசினி என்ற திருநாமம் அவளுக்கு உண்டாயிற்று. (லலிதா சகஸ்ர நாமம் 336.) சிந்தாடவிக்கு - மனமாகிய காட்டிற்கு. சந்தாடவி - சந்தனவனம். கற்பதரு அடவி - கற்பகக் காடு. வந்து ஆர் அடவி பல - காற்று நிறைந்த பல காடுகள்.

4. தமியேன் - துணையின்றித் தனியாக உள்ள அடியேன்.

5. விழலுக்கு இறைப்பேன்: 'விழலுக்கு நீர் இறைப்பது' என்பது பழமொழி. அமிழ்தக் கடலினிடையே உள்ள மணித் தீவத்தில் சிந்தாமணிக் கிருகத்தில் அம்பிகை எழுந்தருளியிருக்கிறாள்.

6\. ஊனார் மயறீர் வியாத
　　னுதிட்டிர னோங்குவிறற்
கூனார் சிலைவிச யன்னன்றி
　　நின்புகழ் கூறுவதற்
கியானா ரெனினுஞ் சரண்புகுந்
　　தேனகற் றென்குறையை
வானார் முகில்படி யுஞ்சீர்க்
　　கடம்ப வனவல்லியே.

7\. ஆவா நினதடி யெண்ணாமல்
　　வீண்செய லாற்றிவெய்ய
தீவாய் விழுபுழுப் போலநொந்
　　தேனின்று தேர்ந்தடைந்தேன்
தேவாதி தேவ னிடத்தாய்
　　நினையன்பிற் சேவைசெய
வாவா வினிதரு ளீவாய்
　　கடம்ப வனவல்லியே.

8\. பாரிற் றருவென மாந்தரைப்
　　பாடிப் பயனின்றியே
தாரித்த லின்றிநின் பாலே
　　யடைக்கலஞ் சார்ந்தனனால்
ஏரிப் புனலன்ன பொன்னே
　　யருட்புய லேயமிழ்த
வாரித் தடமணித் தீவக்
　　கடம்ப வனவல்லியே.

---

6. ஊனார் மயல் - உடலில் பற்று வைக்கும் மயக்கம். உதிட்டிரன் - தருமபுத்திரன். கூனார் சிலை - வளைவையுடைய வில்லை. விசயன் - அருச்சுனன். விசயன்னன்றி; விரித்தல் விகாரம். யான் ஆர் - அடியேன் என்ன தகுதி உடையேன். என் குறையை அகற்று.

7. ஆவா - அந்தோ. தேவாதி தேவன் இடத்தாய் - மகாதேவனுடைய வாமபாகத்தில் உள்ளாய்; இடத்திலுள்ள தாயே எனலும் ஆம்.

8. தரு என - கற்பக மென்று-தாரித்தல் இன்றி-அமைதி பெறுவதில்லாமல். அருள் புயலே - அருள் வழங்குவதில் மேகம் போன்றவளே.

9. அன்பே யிலாதவர் செய்யுங்
கொடிய வவமதிப்பால்
துன்பே யடையு மனத்தேனை
யாளத் தொடங்குவையோ
இன்பே செறிமது ராபுரி
யன்ப ரிதயமுற்றோய்
வன்பே சமைமணித் தீவக்
கடம்ப வனவல்லியே.

10. காணிக்கை வைத்தம ரேசர்
வணங்குநின் கான்மலரைப்
பேணித் தொழுது நினைக்க
வருள்செய் பெரியம்மையே
ஆணிப்பொன் வில்லி தனக்கமிழ்
தேயகி லாண்டம் பெற்ற
மாணிக்க மேமணித் தீவக்
கடம்ப வனவல்லியே.

11. நற்றவர் கற்றவர் நாவலர்
காவலர் ஞானமிகப்
பெற்றவர் தம்முண் மகிடனைப்
போற்றவப் பேறுதனை
உற்றவ ராரவன் சென்னிநின்
றாள்பெற் றுரைக்குமல்லால்
மற்றவ ரார்சொல வல்லார்
கடம்ப வனவல்லியே.

---

9. மதுராபுரி அன்பர் - சோமசுந்தரக் கடவுள். வன்பு - வலிமை.

10. அமரேசர் - இந்திரன். ஆணிப் பொன் வில்லி - உயர்ந்த பொன்மலையாகிய மேருவை வில்லாகக் கொண்ட சிவபெருமான். ''ஆணிப்பொன் வில்லி புணர் மாணிக்கவல்லி'' (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

11. நற்றவர் - நல்ல தவம் புரியும் முனிவர். நாவலர் - பாப்பாடுவதில் வல்லவர். காவலர் - மன்னவர். அவன் சென்னி உரைக்கும்; மகிடன் தலையின் மேல் நின் தாள் படிதலால் அவன் பெறும் பேறு பெற்றவன் என்றபடி.

ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. பொற்றா மரைப்பூந் தடமுமரி
 பூசித் தரிய பேறுமிகப்
பெற்றா னெனவான் றோரெடுத்துப்
 பேசு மமலன் சினகரமும்
அற்றார்க் குதவு மங்கயற்க
 ணம்மை திருக்கோ யிலுங்கண்டோர்
உற்றார் பாசப் பிணியறவே
 யுடையா ரகில வுலகமுமே.

2. வையை நதிசூழ் தென்மதுரை
 வாழு மமலன் றிருவருளால்
மெய்யை யுறுவீட் டின்பமெலாம்
 மேவ லாகும் விழைநெஞ்சே
பொய்யை விழையிற் பயனெவனீ
 புகலா யவனைப் பொருந்தாயேல்
வெய்யை பின்னை யுய்யைமிக
 வீணே யுடையாய் விளம்பிடிலே.

---

1. அரி - இந்திரன். சினகரம் - கோயில். பாசப்பிணி அறவு உற்றார்; அறவு - அறுதலை.

2. மெய்யை விழை. வெய்யை - கொடியாய். உய்யை - உய்ய மாட்டாய்.

3. தாயைப் புணர்ந்து தந்தைதனைத்
தடிந்திட் டோனு மாரியன்றன்
வேயை யுறுதோண் மனைவிழைந்த
வெய்ய பாவி தானுமருள்
மேய கதைநீ கேட்டறிந்தும்
விளங்கு கூட னாயகன்சீர்
தூயை யாக வுரைத்துரைத்துத்
தொழாமை யென்னே சொன்னெஞ்சே.

4. என்ன வென்ன சொற்றிடினு
மெனக்கு வசமா காதுதிரிந்
தன்ன மென்னத் தனமென்ன
ஆடை யென்ன வாவன்மரீஇத்
துன்ன வென்ன துயருற்றாய்
சோதி மதுரைச் சீர்கேட்கக்
கன்ன மென்ன புண்ணியஞ்செய்
தனவோ வுரைத்தி கடைநெஞ்சே.

5. மாயா மயமிவ் வுடலமென
மதியா தரிவை மாரைவிழைஇ
நோயா னுடங்கி வருந்தினையால்
நுவலக் கேட்டி மடநெஞ்சே
தாயா யுயிர்க்குத் தண்ணளிசெய்
தாணு வேணு புரத்தலைவன்
தேயா வளமார் தென்மதுரை
சேறி நலங்கள் சேருதற்கே.

---

3. தந்தையைத் தடிந்திட்டோன் அருள் மேய காதையென்றது மாபாதகம் தீர்த்த திருவிளையாடலை. ஆரியன் - குரு. வேயை உரு - மூங்கிலைப் போன்ற. குருவின் மனைவியை விழைந்தவன் அருள் பெற்றதை அங்கம் வெட்டின திருவிளையாடலால் அறியலாம்.

4. அன்னம் - சோறு. மரீஇ - பொருந்தி. துன்ன - சேர்ந்திருந்ததனால். என்ன துயர் உற்றாய் - எத்தகைய துயரத்தை நீ இதுகாறும் அடைந்தாய். சோதி - சொக்கலிங்கப் பெருமான். கன்னம் - கர்ணம்; காது.

5. விழைஇ - விரும்பி. வேணுபுரத்தலைவன் - சீகாழியில் பிறந்த ஞானசம்பந்தர். தேயா வளம் - குறையாத செல்வமாகிய அருளை. ஆர் - நிரம்பப் பெற்ற. சேறி - செல்வாயாக.

6. கூட னகரி னன்பருக்காக்
குணங்கள் கடந்த வமலனெட்டெட்
டாடல் புரிந்தா னியாவரையு
மாடல் புரிந்தான் அடியவரை
நாடல் புரிந்தான் மடநெஞ்சே
நவிலக் கேட்டி சிறிதேனும்
வாடல் புரியா திருத்தியவன்
மலர்ப்பூந் தாளை வணங்குதியே.

7. வளமார் மதுரை யரன்சீரை
வாயால் வழுத்தி யவன்பதத்துத்
தளமார் மலரிட் டருச்சித்துத்
தகைசால் துதியாற் றோத்தரித்தே
உளமாங் கவன்பா லுறுத்தினருக்
குறுகண் ணியாது மிலையாமால்
களமார் தீயர்ச் சேர்பாவங்
கலவார் கலப்பார் கவின்றிருவே.

8. திருவு முருவுந் திறமுமெங்குஞ்
சேருங் கீர்த்தி யோடறிவும்
மருவு மருவார் துயரமிலை
வண்மை யாவு மருவுவரால்
கருவுங் குறியுங் குணமுமுக்
காலங் கடந்தே யருவுருவோ
டருவு முருவுங் கடந்தொளிரு
மமலன் மதுரை யணைந்தவரே.

---

6. எட்டெட்டு ஆடல் - அறுபத்து நான்கு திருவிளையாடல்களை.

7. தகை-தகுதி; அழகுமாம். உறுத்தினருக்கு - பொருந்தச் செய்தவருக்கு. உறுகண் - துன்பம். களம் - கள்ளம்; வஞ்சனை. உறுத்தினர் கலவார். திரு கலப்பார் - செல்வத்தைப் பொருந்துவார்.

8. மருவார் - பகைவரால் உண்டாகும். கரு - பிறப்பு, குறி-திருவுருவம்; பெயருமாம். முக்காலம் - முக்காலமும்; உம்மை தொக்கது.

9. ஆல வாயி லமர்ந்தருளு
மமல னருளை யன்றிநெஞ்சே
சால வாயின் வேறுதுணை
சாற்றற் குண்டோ வவன்பெயரைக்
கோல வாயி னுரைத்துரைத்துக்
குறித்தே யவன்றாண் மலரிருப்பின்
சீல வாயி னருள்புரிவன்
றீர்ப்பன் றுயர மியாவையுமே.

10. செல்வக் கூட னகருறையுஞ்
சிவனைப் பணிந்து செழுஞ்சோதி
வில்வத் தளிரோ டிளமதியம்
வேய்ந்த வேணி விகிர்தனே
எல்வத் திரமைந் துடையாயெம்
மீசா வாச விதழியுள்ளாய்
மல்வக் கரையா வெனநிதமும்
வாழ்த்தி வணங்கு மடநெஞ்சே.,

---

9. சால ஆயின் - நன்றாக ஆராய்ந்தால், அவன் தாள் மலர் குறித்தே; குறித்து - தியானித்து. சீல ஆயின் - எளிமையையுடைய அன்னையைப் போல்.

10. எல் வத்திரம் ஐந்து - ஒளியையுடைய திருமுகங்கள் ஐந்து; ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பன, இதழி-கொன்றை; "நறுங்கொன்றைப் போதி னுள்ளான்" (அப்பர்.) மல் வக்கரையா - வளம் பொருந்திய திருவக்கரை என்றும் தலத்தில் உள்ளவனே.

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

கயற்கண்ணி மாலை

பாடல்	பக்கம்
அசடர்கள்	22
அண்டார்புரஞ்	12
அத்தனைக்கொன்ற	30
அற்பகனின்ற	16
அறையணி	10
அனகப்பமரன்	10
ஆணமிலாத	18
ஆமனைநீ	23
ஆராவமுத	18
ஆவாபிறவி	26
ஆவாமனத்திற்	20
ஆவாமிகவு	30
இரியாததீப்பழி	23
இன்னம்பராதி	6
உயல்விளையாடு	15
ஊனப்பிறவி	21
ஊனம்புரியு	25
எண்களிக்கு	34
எண்ணிய	23
எண்ணிற்கடங்கு	19
எண்ணினயன	11
எல்லாச்செயலு	32
எல்லாஞ்செய்	14
எல்லாவுலகு	6
ஏகுற்றவென்மன	16
ஒண்ணுதல்	15
ஓதியதுன்பங்கட்	24
ஓயாதுபாமுக்	19
கண்டோமொழி	35
குயவாய்மகளிர்	17
குன்றைக்குழைத்த	31
கூற்றானதொன்று	17
சமலனின்றாள்விணை	21
சாணாம்வயிற்றுக்கு	32
சாலாததீயரை	35
சீதங்கமமு	11
சீரினைமேவிய	29
சீரும்தளையும்	26
செம்மைவள	1
செய்தவமேது	12
செற்றார்புரஞ்செற்ற	33
சென்னித்தலத்து	17
சென்னியிடை	9
சையந்தனக்கு	4
சௌரியம் பேசி	34
தடையேனை	1
தண்டேன்மொழிமனை	28
தனிவாயமல	7
தாமம்வனைகுழல்	34
திடனார்தமிழ்	25
திருவளிப்பாய்	18
திரையற்ற தோற்றக்	16
தீதுந்துயர்செயுங்	19
தெம்முகஞ்சென்று	21
நாவலன்றோழமை	8
நாவார... சைவ	2
நாவார திருந்து	28
நிந்தனைக் கொள்கல	4
படித்தேன் படித்தவை	3
பண்ணேனெனினு	4
புவிபாலர் முன்னம்	7
புனல்வாய்பவர்சடை	8
பெரியனெவனென்னிற்	5
பேணவமைபுயற்	29
பேணாதவனின்	22
பொய்யன்புல்	27
பொருத்தமுறுதமிழ்	24
போற்றவறிந்திலன்	30
மட்டுறுகூந்தல்	22
மருவழியாத்தளிர்	6
மலையத்துவச	7
மனையொடு	15
மாட்சிபெறுகவி	13
மாணாதபுல்லர்கள்	5
மாத்தருநீழல்	2
மாப்பதுமாசனி	32
மாவித்தகமுறு	25
மிடியாதுமின்றி	31
முளைமதிவேணி	13
முற்றாதரவு	11
முன்னமதனின்	12

பாடல்	பக்கம்	பாடல்	பக்கம்
முனைவாய்க்கவைச்சிகை	9	வாய்ந்தமதுர	24
மெச்சிப்பதிதர்	29	வாரணிகொங்கை	3
மெய்யாகநானவில்	29	வானாதரித்திலன்	28
மெய்யாவுரை	5	வானேய்கரமுடை	20
வஞ்சமலருமுள	31	விஞ்சத்தனங்களை	26
வஞ்சன்பிறரை	3	விண்ணெதிரின்ப	27
வண்டேன்முடி	16	விரிசாகரத்தி	33
வரைவேந்தன்	9	வெங்கைக்கடகளி	20
வன்னெஞ்ச	33	வெள்ளிப்பிறங்கலை	14
வன்னெஞ்சர் தம்மை	27	வேஞ்சினமாதி	2

அங்கயற்கண்ணி மாலை

பாடல்	பக்கம்	பாடல்	பக்கம்
இகத்தியலு	45	நயமாக்குஞ்	46
இடைந்தசெய	41	நின்னாம	44
இணங்குமற	45	நீண்டவிழி	39
இரவைநிக	40	நேரலர்கட்	43
இளித்தசெய	40	நையமன	43
இன்பினொடு	37	படையாள்	41
உண்ணலுடுத்த	36	பரசிற்சுக	47
உன்னை	43	பலவா	42
எண்சுமந்த	46	பாகியலு	38
கடித்தவெயி	37	பாடியலுந்	38
கந்தடருங்	46	பாலவாய்	44
கருத்துமொழி	41	பாவையுரைத்	40
களித்த	45	பாழ்த்த	42
காமனென்ன	42	பாற்றுங்	41
காரையுறழ்	44	பொருளும்	41
குயிலோ	37	மருத்தகுழன்	39
குழைத்தமன	40	மருளார்	42
குன்றுவரு	36	மலைவீசு	46
குன்றுவளை	36	மறம்பயனா	47
குன்றெய்து	39	முக்காலங்களும்	38
குன்றோடு	46	வசையாருந்தீய	43
சித்தநா	45	வம்பெய்து	44
சித்திரமென்ன	42	வம்போடு	47
சீறுதரு	36	வாடிமன	39
துங்கத்தார்	45	வெங்கணர்கண்	37
துங்கமுறு	40	வெஞ்சினக்கூற்றுவன்	39
துளிக்குஞ்சுவை	47	வெம்புபசி	38
தேக்கிய	43	வெயில்விடுத்த	37
தேன்றோய்	44		
தேனையுறழ்	38		

கடம்பவனவல்லி பதிகம்

பாடல்	பக்கம்	பாடல்	பக்கம்
அன்பே	51	நற்றவர்	51
ஆவா	50	பாரிற்றரு	50
ஊனார்	50	புத்தியி	49
காணிக்கை	51	வலக்கண்டிரு	48
தாயாமுன	49	விந்தாடவிக்கன்றி	49
தூமேவு	48		

ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி

பாடல்	பக்கம்	பாடல்	பக்கம்
ஆலவாயி	55	திருவுமுருவுந்	54
என்னவென்ன	53	பொற்றாமரைப்பூந்	52
கூடனகரி	54	மாயாமயமிவ்	53
செல்வக்கூட	55	வளமார்	54
தாயைப்புணர்ந்து	53	வையைநதி	52

உ

களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டைமணிமாலை

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி

டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை - 600 090.

௨

களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டைமணி மாலை

களக்கா டென்னும் தலம் நாங்குநேரி (நான்கூனேரி)த் தாலுகாவிலுள்ளது. சோராரணிய மென்றும் புன்னைவனமென் றும் இது வழங்கும். இங்கே எழுந்தருளியுள்ள ஸ்வாமியின் திருநாமம் சத்தியவாசகரென்று வடமொழியிலும், பொய்யா மொழியாரென்று தமிழிலும் வழங்கும். அம்பிகையின் திருநா மம் ஆவுடை நாயகியென்பது.

இவ்விரட்டைமணிமாலையை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. ஆனாலும் முற்காலத்தில் களக்காட்டுத் தெற்கு மாடத்தில் புகழ்பெற்று விளங்கியிருந்த சிறந்த கவியாகிய ஸ்ரீ கைலாசநாத தேசிகரோ அன்றி அவர் மரபினரோ இதனை இயற்றியிருக்கலாமென்று நினைக்கின்றார்கள். இதிலுள்ள பாடல்கள் கற்பனை நயங்களையும், சிறந்த கருத்துக்களையும் பெற்றிருத்தலின் பக்திமான்களும், அறிஞர்களும் அறிந்து இன்புறற்பாலன. இதன்கணுள்ள செய்யுட்கள் பழைய புலவர்க ளால் பரம்பரையாக மனப்பாடஞ் செய்யப்பெற்று அங்கங்கே வழங்கி வந்தன. ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ சந்திரசேகர கவிராஜ பண்டிதரால் அச்சிடப் பெற்ற தனிப்பாடற்றிரட்டில் இதிலுள்ள ஐந்து பாடல்கள் உள்ளன. அதனால் இந்நூலின் பெருமை விளங்கும். இஃது எழுதப்பட்டி ருந்த ஏட்டுச் சுவடி கும்பகோணம் காலேஜில் முன்பு தமிழ்ப் பண்டிதராக இருந்த திரிசிபுரம் ஸ்ரீ சி. தியாகராச செட்டியாரவர் களிடமிருந்து கிடைத்தது.

காப்பு

வெண்பா

பூப்பார் களந்தைப் புரகரே சன்மீதில்
வாய்ப்பா மிரட்டைமணி மாலைக்குக் - காப்பாவார்
பொன்கருத்த ரென்கருத்த ரென்னவரு போரானை
என்கருத்த ரென்கருத்த ரே.

நூல்

வெண்பா

1. அணிகொண்ட தென்களந்தை யாயி னடியேனிப்
பிணிகொண்ட சென்மம் பெறுக - பணியா
மருமாலை யேசத்ய வாசகர்தாட் கிட்டுத்
திருமாலை யேசத் தினம்.

கட்டளைக்கலித்துறை

2. தினம்போற்றும் போதகத் துள்ளே தியானமுஞ் செய்யுமன்பர்
மனம்போற் றமிய னுடன்பொருந் தாவஞ்ச நெஞ்சையுமென்
இனம்போற் குறித்ததன் றீதையென் மேலிட் டிடுதிகண்டாய்
கனம்போற்றும் பூங்குழல் பங்கா களந்தையிற் கண்ணுதலே.

வெண்பா

3. கண்ணுதலைப் பொறகளந்தைக் கண்ணுதலைச் சேர்ந்திருந்தும்
கண்ணுதலைக் காணாத காட்சிபோற்-கண்ணுதலை

காப்பு: பூப்பு ஆர் - மங்களம் நிரம்பிய, களந்தை; களக்காடு என்பதன் மரூஉ. பொன் கருத்தர் - திருமகளுக்கு நாயகராகிய திருமால்; எழுவாய். என் கருத்தர் என்ன வரு - என்னுடைய தலைவரென்று சொல்ல அவருக்கு முன்னமே அனுக்கிரகம் செய்ய வந்த. போரானை என் கருத்தர் - போரானையென்னுந் தலைவர். திருமால் விநாயகரை வழிபட்ட செய்தி விநாயக புராணத்தாலும் கந்தபுராணத்தாலும் அறியப்படும். என் கருத்தர் - என் கருத்தில் உள்ளவர்.

1. ஆயின் - அடியேன் பிறக்குமிடமாயின். பணியா-பணிந்து. மரு மாலை-மணம் பொருந்திய மாலையை; மாலையை இட்டு. திருமாலைத்தினம் ஏச.

களந்தையிற் பிறப்பேனாயின் எனக்குப் பிறப்பு வேண்டுமென்றபடி.

2. போற்றும்போது அன்பர் மனம் அவர்களோடு பொருந்தியது போல என் நெஞ்சு என்னோடு பொருந்தவில்லை. ஆதலால் அதனை என் இனமாக வும் அதன் தீய செயல்களை என் செயல்களாகவும் எண்ணல் பொருந்தாது என்பது கருத்து. இட்டிடுதி - இடுகின்றாய். கனம்-மேகம்.

3. கண்ணு தலை-கருதப்படுகின்ற முதன்மை வாய்ந்த. யான் சேர்ந்திருந்தும், கண் நுதலை (நெற்றியை)க்காணாதது போலவே. அன்மையி

எட்டியிருந் தேனல்லே னென்பார்கள் வீடுபெற்றால்
எட்டியிருந் தேனாகு மே.

கட்டளைக்கலித்துறை

4. ஆகத்தி லேயொரு பாதியென் னம்மைக் களித்தவடன்
பாகத்தி லேயொன்று கொண்டா யவண்மற்றைப் பாதியுமுன்
தேகத்திற் பாதியுஞ் சேர்ந்தா லிருவருண் டேசிவனே
ஏகத் திராம லிருப்பாய் களந்தையு மென்னெஞ்சுமே.

வெண்பா

5. என்னெஞ்சு கல்லாகு மென்றுமிந்தக் கல்லுமையாள்
பொன்னஞ் சரணம் பொறாதென்றும் – அந்நாள்
இடத்தாளை யம்மிமே லேற்றுகளக் காட்டாய்
இடத்தாளை யஞ்சாதே யின்று.

கட்டளைக்கலித்துறை

6. இன்றொக்க வேண்டினெவ் வாறொக்கு மோவெழில் சேர்களந்தைக்
கோபுரங் குன்றொக்குங் கோபுர மொக்குமக் குன்றதுபோல்
அன்றொக்க வேண்டுமென் னல்வினை தீவினை யாமிரண்டும்
என்றொக்கு மோவினித் தென்களக் காடனை யான்பெறவே.

லிருந்தும் அறிந்து கொள்வேனாயினன். அத்தகைய நான் வீடு பெற்றால் என்னை நல்லவனென்பார்கள். ஆனால் அவ்வாறு பெறுதல் அரிது என்பது கருத்து. எட்டி – எட்டிமரம்.

4. ஏகம் – ஒன்று. தேவரீருக்கு இரண்டு வடிவம் இருத்தலால் அடியேனுடைய உள்ளத்திலும் களந்தையிலும் எழுந்தருளியிருக்கலாமென்பது கருத்து.

5. அந்நாள் – திருமணம் நிகழ்ந்த பண்டைக்காலத்தில், இடத்தாளை – அம்பிகையின் இடப்பாதத்தை. அஞ்சாதே; வினைமுற்று. என் நெஞ்சு கல்லாதலின் உமாபாகத்திற்குரிய இடத்தாளை அதில் வைத்தால் நோமென்று எண்ணாதே; முன்னரே அந்தத்தாள் அம்மிமேல் ஏறிப்பழகியுள்ளதென்பது கருத்து.

6. இன்று ஒக்க வேண்டின் – இக்காலத்து நல்வினை தீவினைகள் ஒத்திருக்க விரும்பின். ஒக்குமோ; ஓகாரம் எதிர்மறை. அன்று – இறைவனுடைய திருவருளைப் பெறும் அக்காலத்தில்.

இருவினையொப்பை எக்காலத்து யான் பெறுவேனோ என்பது கருத்து.

வெண்பா

7. யான் பிறவி நீந்த வெழிற்களந்தைப் பொற்கோயில்
தான்புணை காண்சத்ய வாசகன்மீ-கான்காண்
அடிப்படங் காட்டு மராப்போலும் பாய்தான்
கொடிப்படங் கம்பமே கூம்பு.

கட்டளைக்கலித்துறை

8. கூம்பாத சிந்தையிற் கொண்டாடு வார்குழம் பாதசெந்தே
னாம்பாக மான தமிழைச் செழுங்கொன்றை யாவணியும்
வேம்பாக நான்சொல் கவிகளைத் தானு மிகவிரும்பிப்
பாம்பா வணிந்து கொளுமே களந்தைப் பரஞ்சுடரே.

வெண்பா

9. பரம்படியாய் நல்லோரும் பாவிகளும் பெற்ற
பிரம்படிபோ லுன்னடியான் பெற்றேன்-நிரம்பும்
குதிரைகளைக் காட்டாய்மா கோமாயு வான
மதுரைகளக் காடாகு மற்று.

கட்டளைக்கலித்துறை

10. மற்றோ ரொருவரைக் கண்டதுண் டோசத்ய வாசகராய்
உற்றோர் கழஞ்செடை வெண்ணெய்க்குத் தாய்க்கொரு கோடிபொய்கள்
சொற்றோருந் தாழை மலர்சாட்சி யென்றுசொன் னோருமல்லால்
கற்றோர்கள் வம்மின்கள் சென்மின்கள் போமின் களந்தையிலே.

வெண்பா

11. களந்தை வரும்விடமுங் கண்ணுதலு மாகக்
களந்தை வருமரனைக் காணான்-வளர்ந்தவொரு
மாலைக்கண் டானென்று சொற்றக்காற் றேசமிரு
மாலைக்கண் டானென்னும் வந்து.

---

7. புணை - தெப்பம். மீகான் - மாலுமி. கொடிப்படம் - கொடியிலுள்ள ஆடை.. கொடியாடைக்குப் பாம்பின் படம் உவமை.

8. குழம்பாத செந்தேன் - தெளிந்த தேன்.

9. பரம்பு அடியாய் - உலகமெங்கும் பரவிய திருவடிகளை யுடையாய்; ''தில்லை மூதூ ராடிய திருவடி, பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி'' (திருவாசகம்.) மா - குதிரை. கோமாயுவான - நரிகளான.

10. சொற்றோர் - திருமால். கற்றோர் - மெய் சொல்லக் கற்றோர்கள். சென்மின்கள் போமின்களென்பன விரைவு பற்றி வந்தன.

11. சொன்னால் என்பதற்குப்பின் அவன் கண்களை யென்னும் தொடர்மொழியை வருவிக்க.

கட்டளைக்கலித்துறை

12. உம்பரை வாழ்வித்த கண்டங்கண் டேமொண் புரமெரித்த
அம்பரை யெற்றிய சூலங்கண்டேமரு ளுங்கொலையும்
நம்பரை பாகற் கிவையாக லாலவர் நாமஞ்சொல்லா
வம்பரை வையுங்க டென்களக் காடரை வாழ்த்துங்களே.

வெண்பா

13. வாழ்நிலைசேர் பொன்னுலகம் வண்களந்தைக் கோபுரத்தின்
ஏழ்நிலைமே லேறினா லேறலாம் - பாழ்மனமே
அன்புன்னைக் காட்ட வரனறிவ தேயருமை
தென்புன்னைக் காட்டனடி சேர்.

கட்டளைக்கலித்துறை

14. சேரார் புரஞ்செற்ற சேவக னாருக்கென் றீவினைகள்
ஓரா யிரம்புர மாய்விடு மோவுறை யுங்களக்கா
டாராயு நல்ல பதியான வர்க்கடி யேன்மனந்தான்
கூராரு முட்களக் காடாகு மோவருள் கூட்டுங்கொண்டே.

வெண்பா

15. கொண்டாடு வேன்பணிவேன் கும்பிடுவேன் கைகொட்டிக்
கொண்டாடு வேன்களந்தைக் கொற்றவா-புண்டாவக்
கைச்சிலை யாலடியேன் கல்லா லெறியேனை
நச்சிலை யாலடியே னை.

கட்டளைக்கலித்துறை

16. அடியேற வேண்டுமென் னெஞ்சத்தை யென்றுமெய்
த்தாமலன்றோ
குடியே றிடக்களக் காட்டுக்குள் ளேகுளிர் புன்னைவைத்துக்
கடியேறு தண்புனற் பொற்றா மரைகண்டு கண்ணுதற்கும்
வடியேறு கண்ணிக்கும் பொற்கோயி லுங்கட்டி வைத்தனரே.

வெண்பா

17. வைத்த பொருளு மனையாளு மைந்தருமே
கைத்த பொருளென்று கைவிட்டுப்-பத்திபண்ணும்

---

12. விடத்தை உண்டமையின் 'உம்பரை வாழ்வித்த' என்றார்; 'எஞ்சுவா ளளித்த நஞ்சுபொதி கண்டமும்'' (மதுரை மும்மணிக்கோவை.) அம்பரை - அம்பாக உள்ள திருமாலை. பரை பாகற்கு - உமாபாகர்க்கு.

13. இத்தலத்து விருட்சம் புன்னையாதலால் புன்னைவனமென்றார்.

14. முள் களக்காடு - முட்களையுடைய களாச்செடிகளையுடைய காடு.

15. கை கொட்டிக்கொண்டு ஆடுவேன். நச்சிலை - விரும்பவில்லை.

ஊரா ரணியரென வுன்னுவார்க் கில்லையே
சோரா ரணியர் துணை.

கட்டளைக்கலித்துறை

18. துணையான நாரி புவியையெல் லாம்பெறுந் தொல்லைவடிக்
கணையா னதுபுவி யெல்லா மெடுத்துண்ணுங் கைச்சிலைக்கல்
அணையாக நின்று புவியினைத் தாங்குமென் றாலினிநாம்
பணையார் களந்தைப் பதியார் செயலையென் பன்னுவதே.

வெண்பா

19. பன்னுமறை யோனேபரமன் முடிதேட
உன்னு மதியா லுனைத்தாங்கும்-அன்னமாய்ச்
சேணங் களந்தையே தேய்ந்தாயே திக்கறியாக்
கோணங் களந்தையோ. கூறு.

கட்டளைக்கலித்துறை

20. கூற்றும் பயந்து களந்தைக் குழந்தைக்கு மேமுகமன்
சாற்றும் படிவென்ற தாளாரு மாவுடைத் தாயருமே
மாற்றும் பிறவிப் பணிகட்கெல் லாமலை மேன்மருந்தாய்
ஆற்றும் பிடகரு மாயிருப் பார்க ளணித்துவந்தே.

---

17. கைத்த - வெறுத்த. பண்ணும்: முன்னிலைப்பன்மை ஏவல். ஊரார் அணியர். சோராரணியமென்பது இத்தலத்தின் வடமொழித் திருநாமம்.

18. துணையான நாரி - உமாதேவியார். நாரியென்பதற்கு வில் நாணென்பது வேறு பொருள். கைச்சிலைக் கல் - மேரு. பணை - வயல்.

19. இப்பாட்டுப் பிரமனை நோக்கிக் கூறியது. சேண் - ஆகாயம். அளந்தையே - அளந்தாயே. களந்தை திக்கறியாக் கோணமோ; களக்காட்டிற்கு வந்திருந்தாயானால் இறைவனை எளிதில் தரிசிக்கலாமே என்பது கருத்து.

20. பிடகர் - வைத்தியர். அணித்து வந்து - அருகில் வந்து.

உ

கணபதி துணை

திருக்காளத்தி
இட்டகாமிய மாலை

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்:
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திகலாநிதி
டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90

உ

கணபதி துணை

முகவுரை

இறைவனைப் பாமாலையால் வழிபடுதல் நம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டுப் பயின்று வரும்வழக்கம். கவி இயற்றும் ஆற்றலுடையார் தம்முடைய குறைகளைப் பாக்களால் இறைவனுக்கு விண்ணப்பம் செய்தல் இயல்பு.

திருக்காளத்தி இட்டகாமிய மாலையாகிய இது நோய் வாய்ப்பட்ட பக்தர் ஒருவர் திருக்காளத்தியப்பரிடம் தம் குறைகளைக் களைந்தருள வேண்டுமென்று வேண்டிப் பாடிய செய்யுட் டொகுதி. இட்ட காமியமென்பது விரும்பப் பெற்ற பொருளென்னும் பொருளினது. தாம் விரும்பிய பொருள் இன்னதென்று குறையிரந்து பாடியமையின் இந்நூல் இப்பெயர் பெற்றது;

''என் மனத்துக்கிட்ட காமியந் தந்தருள்
வாய்கயி லாபுரிக் காளத்தியே'' (39)

என்றுஇந்நூலில் வருதல் காண்க.

இவ்வாசிரியர் இளமையிலே பெண்மயலிற் சிக்கி உழந்ததன் பயனாக நோயுற்று அதனாலும் வறுமையாலும் துன்புற்றவரென்று இந்நூலால் தெரிகின்றது. அவற்றால் மிகவருந்தி உலகிலுள்ள பிற மருந்துகளாற் பயனில்லையென்று கண்டு,

''அருந்தவ மில்லாத வன்மெய் தனிற்பிணியை
மாற்று மருந்துதென் கைலாய மேய மலைமருந்தே''

என்று உறுதி பூண்டு அத்தலத்தை அடைந்து வழிபட்டவர்.

இவருடைய வாக்கு அன்பு கனிந்து எளிய நடையில் விளங்குகின்றது. திருக்காளத்தி நாதர் பெருமையை இவர் பலபடியாகப் பாராட்டுகிறார். கண்ணப்பரைப் பலவிடங்களிற் சிறப்பிக்கின்றார். அவற்றுள்,

''அருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகத்
திருமஞ்ச னக்குடம் புல்லா லவன்மென்று தின்றதசை
அருமந்த போனக மன்றோநங் காளத்தி யப்பருக்கே'' (3)

என்னும் செய்யுள் மிகச் சிறந்தது.

இவ்வாசிரியர் பெயர் இன்னதென்று இப்போது விளங்க வில்லை. இந்நூல் இத்தனை செய்யுளுடைய தென்றும் விளங்க வில்லை. பலவருஷங்களுக்கு முன் இந்நூலின் ஏட்டுப் பிரதி ஒன்று காளத்தியிலிருந்த சைவர் ஒருவரிடமிருந்து எனக்குக் கிடைத்தது. இதில் காப்புச் செய்யுளும் அதன்பின் 49-ஆம் செய்யுள்வரையுள்ள செய்யுட்களும் காணப்பட்டன. அவற்றுள்ளும் 32, 33, 34 என்னும் மூன்று செய்யுட்கள் உள்ள ஏடு கிடைக்கவில்லை. பழந்தமிழ்ச் செய்யுட்களைக் கிடைத்தவரையிலேனும் வெளிப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தினால் இந்நூலைக் '**கலைமகள்**' வாயிலாக வெளியிடலானேன்.

இதனைத் தம் பத்திரிகையிற் பிரசுரம் செய்வித்த **ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்களுடைய** அன்பை நான் பாராட்டுகின்றேன்.

"தியாகராஜவிலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
16-12-1938

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

உ

கணபதி துணை

திருக்காளத்தி இட்டகாமிய மாலை

—★—

காப்பு

(நேரிசை வெண்பா)

தேமிகுகா ளத்திச் சிவக்கொழுந்தைப் போற்றுமிட்ட
காமிய மாலைக் கலித்துறைக்கு-நேமிபுகழ்
தாளத் தடைவுகொள்பா தாளக் கணபதிதாள்
மேளத் துடன்றுணையா மே.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

1\. திருமான் மலரயன் றேடுமெம் மானன்பர் தேக்கவின்பம்
தருமா நடம்புரி பெம்மான் கயிலைத் தலத்தன்றக்கன்

குறிப்புரை

(காப்பு) தேம் - இனிமை, தேன்; தே - தெய்வத்தன்மையுமாம்.

காளத்தி நாதர் மலைக்கொழுந்து, ஐங்கொழுந்தென நூல்களில் வழங்கப்படுதலின் இங்கே சிவக்கொழுந்தென்றார்; "காதணிவெண் குழையானைக் காளத்தி மலைக்கொழுந்தை" (பெரிய. திருநா.345.) இட்ட காமியமாலையென்ற கலித்துறைநூல் நிறைவேறுதற்கு. நேமி-உலகம். தாளத்து அடைவு கொள் தாளென்று கூட்டுக; நடனஞ் செய்யும்போது தாளத்தின் அடைவை மேற்கொண்ட திருவடியென்பது பொருள்; "சதிபாய் குறுந்தாட்டு" (உரிச் சொல் நிகண்டு, காப்பு.) பாதாளக் கணபதி: ஸ்தல விநாயகருள் ஒருவர்; இவர் அகத்திய முனிவராற் பிரதிட்டை செய்யப்பெற்றவரென்பது ஐதிஹ்யம். மேளம் - ஒரு வாத்தியம்.

தாள் துணையாமென்க.

1\. திருமாலும் அயனும்; அயன் - பிரமதேவன். அன்பர் இன்பத்தைத் தேக்க வென்க. மாநடம்: இந்நடனம் பரமானந்த தாண்டவமாதலின் அன்பர் இன்பத்தைத் தேக்கும்படி தந்தது; "நினைந்தொறுங் காண்டொறும் பேசுந் தொறு மெப்பொழுதும், அனைத்தெலும் புண்ணெக வானந்தத்

மருமான்வில் வேடர்தங் கோமா னிடுங்கண் வலையிற்சிக்கும்
பெருமா னிடத்திற் சிறுமானொ ரானையைப் பெற்றதுவே.

2. தமரக் கடலைக் கடைந்த முகுந்தன் றனக்குமெய்க்கே
பமரக்கண் ணாயிரத் தாற்குமெட் டாது பனிக்கதிர்வேற்
குமரக் கடம்பன்முன் னத்தியை யீன்ற கொடியையுங்கொண்
டமரர்க் கரசொரு கல்லா லடியி லமர்ந்ததுவே.

3. தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகத்

தேன்சொரியும், குனிப்புடையான்'' (திருவா. திருக்கோத்தும்பி) கயிலைத்தலத் தன் - தென்கயிலாயமாகிய திருக்காளத்தியில் எழுந்தருளியிருப்பவன். மரு மான் - மாப்பிள்ளை. வில்வேடர்தம் கோமான் இடும் - கண்ணப்பநாயனார் இட்ட. கண்வலையிற் சிக்கும் - கண்ணாகிய வலையிலே சிக்கிய; அவர் கண் இடந்து அப்ப ஆட்கொண்டமையைக் குறித்தபடி. கண் காரணமாக அவர் அன்பு வெளிப்பட்டமையின் அதனை வலையாக்கினார். கண்களையு டைய வலையிற் சிக்கும் பெரிய மானென்று வேறொரு பொருளுந் தோற்றி யது; கண் - வலையின் உறுப்பு. இடத்திற் சிறுமான் - வாமபாகத்திலுள்ள சிறியமான்போன்ற உமாதேவியார். ஓர் ஆனையென்றது விநாயகரை.

வலையிற் சிக்கும் ஒரு பெரிய மானின் இடத்துள்ள சிறியமான் ஓர் ஆனையைப் பெற்றதென்றது ஒரு நயம்.

2. தமரம் கடல் - முழக்கத்தையுடைய கடல். பமரக்கண் ஆயிரத்தான் - இந்திரன்; பமரம் = பிரமரம் - வண்டு; ஆண்பாலார் கண்களுக்கும் வண்டை உவமை கூறுவது உண்டு; ''வானிற் பொலிதோ கையர்கண் மலர் வண், கானிற் படர்கட் களிவண்டொடு'' (கம்ப. சரபங்கர் பிறப்பு 4.) பனிக்கதிர் வேல் - குளிர்ச்சியாகிய கிரணங்களையுடைய வேலாயுதம்; அடியார்களுக்கு அநுகூலம் செய்யும் கதிராதலின் இங்ஙனம் கூறினார்; பகைவருக்குப் பனித்த லைச் செய்யும் கதிரையுடைய வேலெனலும் ஆம்; பனித்தல் - நடுங்குதல். குமரனாகிய கடம்பன்; கடம்பன் - கடம்பமாலையை அணிந்த முருகக்கடவுள். அத்தியை - யானையை; விநாயகரை. கொடி - உமாதேவியார். அமரர்க்கரசு - சிவபிரான். கல்லால்: இத்தலத்து விருட்சம்; ''கல்லாலின் கீழிருந்த காபாலிகாண் காளத்தி யானவனென் கண்ணு ளானே'' ''கல்லாலமர்ந்தாயு நீயே யென்றுங் காளத்திக் கற்பகமு நீயேயென்றும்'', ''கல்லாலினீழற்கீ ழறங்கண் டானைக் காளத்தி யானை'' (தே.திருநா.)

இப்பாட்டில், கடம்பு, அத்தி, அரசு, கொடி, கல்லாலென்னும் தாவரப் பெயர்கள் ஒருங்கே வந்தமை காண்க.

3. கண்ணப்பநாயனார் பெருமை கூறப்படும். தருமமும் தவமும். மரு மணம். வாயானது உதகத்தையுடைய திருமஞ்சனக்குடம்; உதகம் - நீர்.

திருமஞ் சனக்குடம் பல்லா லவன்மென்று தின்றதசை
அருமந்த போனக மன்றோநங் காளத்தி யப்பருக்கே.

4. ஆகாச மாநட்ட மாடீ பரிந்துமை யாளுறைந்த
பாகா செகத்திற் பிறவாம லுக்குன் பதந்தருவாய்
வாகா தவரு மரற்றமால் யானை வதைத்ததன்றோல்
ஏகாச மிட்ட சொருபாதென் காளத்தி யீச்சுரனே.

5. மச்சிட்ட வீடு சுடலைபன் மாலை மலரவன்கம்
நச்சிட்ட மாகிய கற்பம்வெம் பேய்படை நன்றுதின்ற
உச்சிட்டம் போனக மென்பா பரண முடைபுலித்தோல்
அச்சிட்டர் போற்றுங் கயிலையிற் காளத்தி யப்பருக்கே.

திருமஞ்சனம் - அபிடேகம். அருமந்த போகம் - அருமருந்தன்ன உணவு.

செருப்பு மலர் வாய் குடம்: "செருப்புக் குச்சுப்புல் செவ்வாய் கலசம்" (திருக்காளத்திநாதர் கட்டளைக்கலிப்பா, 3.) வாய்குடம்: "வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்", "தூயவாய்க் கலச மாட்டி" (தே.); "வாய்கலச முனமுதம்" (திருவா. திருத்தோணோக்கம், 3); சிவானந்தலஹரியிலுள்ள "மார்காவர்த்தித" என்னும் சுலோகத்தைப் பார்க்க. காளத்தியப்பர்; "ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே" (பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.)

4. ஆகாச மா நட்டம் ஆடீ - சிதாகாசத்தில் பரமானந்த தாண்டவம் செய்தருள்வோய். பரிந்து - விரும்பி. பிறவாமலுக்கு - பிறவாமற் செய்தற்கு; "வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு" (காளமேகக் கவிஞர்) என்பதிலுள்ள 'குட்டாமலுக்கு' என்பதுபோல நின்றது. "பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்" (குறள்) என்றலின், 'பிறவாமலுக்கு உன் பதந் தருவாய்' என்றார். வாகா - அழகுடையவனே. தவரும் - இந்திரியங்களா கிய யானைகளை வென்ற தவத்தையுடைய முனிவர்களும்; இவர் தாருகாவ னத்து முனிவர் அல்லாதவர். யானை - தாருகாவனத்து முனிவர் விட்ட யானை. ஏகாசம் - மேற்போர்வை; "சிங்கப் பசுந்தோல்கொடேகாச மிட்டும்" (தக்க.551.) சொருபா - திருவுருவத்தையுடையாய்.

5. மச்சு - மேல்மாடம்; வழக்கு. பன் மாலை மலரவன் கம் - சொல்லப்படும் மாலை பிரமாவின் தலைகளாகும்; கற்பந்தோறும் உள்ள பிரமருடைய தலைகள் மாலையாயின. நஞ்சு இட்டமாகிய கற்பம் - விடமானது விருப்பத்துக்குரிய காயகற்பம். நஞ்சென்றது எதுகை நோக்கி வலித்தது. கற்பம் - இறவாமற் செய்யும் மருந்து; "நெடுநா ளிருந்தபேரும், நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி நெஞ்சுபுண் ணாவர்" (தாயுமானவர் பாடல்.) 'தேவரமுதுண்டுஞ் சாவ வொருவரும், உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்த'லின் அவ்விடத் தைக் கற்பமாகக் கூறினார். பேய் படை - பேய்க் கூட்டங்கள்.

6. அணியேன்வெண் ணீறு துதியேனின் னாமமெய் யன்பினுன்றாள்
பணியேனின் றொண்ட ருடனணு கேன்பெரும் பாவஞ்செய்த
திணியேன் றவமிலி யானாலுங் காத்தரு டெய்வசிகா
மணியே சிவக்கொழுந் தேகயி லாய மலைக்கொழுந்தே.

7. போதுசெய் வேன்மனம் புன்மைசெய் வேனம்பிப் போந்தவர்க்குச்
சூதுசெய் வேனுந்தி தான்வளர்க் கைக்குத் தொடங்கிப்பல
தீதுசெய் வேனென் பெரும்பாவந் தானின்று தீருகைக்கிங்
கேதுசெய் வேனிறை வாதிருக் காளத்தி யீச்சுரனே.

8. அங்கணத் தாரெழுந் தற்புதத் தாமரை யாதரிப்போர்
வங்கணத் தாலெனை யஞ்சலென் பாய்மத னைச்செயித்த
செங்கணத் தாரத்ன மிட்டிமை யாநிற்குஞ் சித்ரபணிக்
கங்கணத் தாய்பொன் முகரிக்கல் லாலடிக் காளத்தியே.

படைத்தொகுதிகள். நன்று தின்ற உச்சிட்டம் - கண்ணப்பர் நன்றாக மென்று தின்ற எச்சில்; ''பல்லா லவன்மென்று தின்றதசை, அருமந்த போனகம்'' (3) என்றார் முன்னும். என்பு ஆபரணம். அச்சிட்டர் - சிவகோசரியார் முதலிய அந்தச் சிஷ்டர்கள். அ: நெஞ்சறிகட்டு; பண்டறி கட்டுமாம்.

6. வெண்ணீற்றை அணியேன். திணியேன் - திண்ணியேன்; மனவன்மையை யுடையேன்; ''கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென் கன்னெஞ்ச முருகவிலையே'' (தாயுமானவர்) என்பது காண்க. சிவக்கொழுந்து: காப்புச் செய்யுளைப் பார்க்க. மலைக்கொழுந்து: ''காளத்திமலைக்கொழுந்தை'' (பெரிய. திருநா.345)

7. போதுசெய்வேன் - தாமதம் செய்வேன்; நின்னைப் பணிதல் முதலிய செயல்களைச் செய்யாமல் வீணே பொழுதைக் கழிக்கின்றேனென்பது கருத்து. மனம் புன்மை செய்வேன் - மனத்தின்கண் புல்லிய எண்ணங்களை எண்ணு வேன். சூது - வஞ்சகம். உந்தி - வயிறு. உந்தி - வளர்க்கைக்கு: ''சானும் வளர்க்க வடியேன் படுதுயர் சற்றலவே'' (பட்டினத்தார் பாடல்.)

8. அம் கணத்தார் - அழகிய அடியாராகிய திருக்கூட்டத்தினர். அற்புதத் தாமரை - ஞானவாசனையுடைய திருவடியாகிய தாமரை. ஆதரிப்போரதுவங்க ணத்தால்; வங்கணம் - நட்பு. நான் வேறு குணமிலேனாயினும் அன்பர் கூட்டத்தின் நட்புடைமையினால் என்னை அஞ்சலென்பாயாக வென்றார். மதன் - காமன். செங்கண் அத்தா: எரிவிழியாதலின் செங்கணென்றார். ரத்னம் இட்டு - மாணிக்கத்தைப் பொதிந்து. இமையா நிற்கும் - விளங்கும்

9. பெருக்க மலக்குடி லைப்பேணி யேயுழல் பித்தனென்கை
சுருக்க மனம்பொறுத் தானாலு மென்மிடி தூளெழப்பார்
மருக்கம லத்துறை வேதற்கெட் டாத வடிவினனே
எருக்க மலர்ச்சடை யாய்திருக் காளத்தி யீச்சுரனே.

10. பெண்ணப்பன் வேள்வி தனிலே யுகந்து பெருகப்பிடித்
துண்ணப் புகுந்த சுரரையெல் லாந்துரந் தோடச்செய்தாய்
விண்ணப்ப மொன்றுண்டு கேளடி யேன்மெய்ப் பிணிகளைவாய்
கண்ணப்ப னெச்சி லுகந்தவ னேதிருக் காளத்தியே.

11. துறைவாரி நஞ்சண்ட கோளத்தை முட்டத் தொடங்கியநாள்
நிறைவா னவர்களுந் தாமிற வாமன்முன் னின்றதுபோற்
பிறைவார் சடைமுடிப் பிஞ்ஞக னேயென் பிணிதொலைப்பாய்
இறைவா வுனைநம்பி னேன்றிருக் காளத்தி யீச்சுரனே.

12. பாலிலுவண்டான சுடைமட்கி நஞ்சம் பரந்ததுபோல்
வாலிப ரூபஞ்சிங் காரத்தின் றீமை மயக்கிடவென்

சித்ரபணி - அலங்காரமாகிய பாம்பு. பொன்முகரி: இத்தலத்தில் ஓடும் நதி. கல்லால்: 2-ஆம் செய்யுட் குறிப்புரையைப் பார்க்க. காளத்தி யென்பதே இத்தலத்துச் சிவபெருமானுக்கு ஒரு திருநாமம்; ''கருநிலவு கண்டனைக் காளத்தியை'', ''கானகத்துக் கருங்களிற்றைக் காளத்தியை'' (தே. திருநா.); இந்நூல் 10-ஆம் செய்யுளைப் பார்க்க.

9. பெருக்க - உருவத்திற் பெரிதாகும்படி. மலக்குடில் - அழுக்கு நிறைந்த குடிசை போன்ற உடல். சுருக்க - சுருங்கும்படி. மிடி - வறுமை. தூள் எழ - அழிய. மரு - நறுமணம். வேதன் - பிரமதேவர். எருக்கமலர்ச்சடை: ''துன்னியலூ ரினும்விரைசார்ந் தறியாத புல்லெருக்குஞ் சூடிக்கொண்டாய்'' (வாட்போக்கிக் கலம்பகம், 99.)

10. பெண் அப்பன் - மாமன்; என்றது தக்கனை. உண்ணப் புகுந்த - அவியை உண்ணவெண்ணிச் சென்ற. துரந்து - ஓட்டி. திருக்காளத்தி: 8.

11. துறைவாரி நஞ்சு - துறைகளையுடைய கடலிற் பிறந்த ஆலகால விடம்; எழுவாய். முட்ட - வருத்த. முன்னின்றதென்றது பாதுகாப்பாக நின்றமையைக் குறித்தபடி.

12. மட்கி - கெட்டு. வாலிப ரூபம் - இளைய மகளிர் உருவம்; வாலிபம்: வழக்கு. ரூபமும் சிங்காரத்தின் தீமையும். பிணிதனின் - நோயினின்றும்.

மேலினில் வந்திடும் பொல்லாப் பிணிதனின் மீட்டருள்வாய்
சேலுகள் வாவி செறிகயி லாயச் சிவக்கொழுந்தே.

13. நெருப்புக் குகையைப் புழுமொய்க்கு மோவிந்த நீணில்மேல்
இருப்புக் கபாடத்தைச் செல்லெய்து மோவிமை யோர்க்கரசே
விருப்புற் றுன் றாளைத் தியானித்த பேர்க்கு மிடிவருமோ
செருப்புச் சடையண்ண லேகயி லாயச் சிவக்கொழுந்தே.

14. நொச்சியுங் கொன்றையுஞ் சூழ்சடை யாயென்னை நோவுசெய்யும்
மெய்ச்சிலு கான பிணிதொலைப் பாயன்று வேடனிட்ட
எச்சிலுந் தின்று பசியுங் கெடாம லிருந்தென்மனக்
குச்சி லுறைப்வ னேகயி லாயச் சிவக்கொழுந்தே.

15. சிந்தை வியாகுலந் தந்தடி யேன்மெய்யிற் றீங்குசெய்யும்
இந்த வியாதி தனைக்களை வாயியற் சுந்தரனா
கந்தவி யாமற் பரவைக்குத் தூதுசெல் காரணனே
தந்த வியாளப் பணியாய்கை லாயச் சதாசிவனே.

16. எலிதான் கலக்கண்ணி னீர்களிற் பூனை யிரங்குமதோ
கிலிதான் பிடித்து மனமே தியங்கிப்பற் கெஞ்சியிட்டால்
வலிதாய பாவம் விடுமோதென் காளத்தி வானவனம்
புலிதாழ் சடையன் கடாட்சமுண் டாயிடிற் போய்விடுமே.

சேல் உகள் - சேல் மீன்கள் துள்ளுகின்ற. சிவக்கொழுந்து: காப்புச் செய்யுளைப் பார்க்க.

13. நெருப்புக்குகை - உலோகங்களை உருக்கும் பொருட்டு நெருப்பினுள் வைக்கப்படும் ஒரு கருவி; "கருமருவு குகையனைய காயத்தி னடுவுட் கனிம்புதோய் செம்பனையயான்" (தாயுமானவர் பாடல்) இருப்புக் கபாடம் - இரும்பாற் செய்யப்பட்ட கதவு. செல் - கறையான். இமையோர்க்கரசே: "அமரர்க் கரசு" (2) செருப்பு - கண்ணப்பநாயனாரது செருப்பு.

14. சிவபெருமான் நொச்சியை அணிந்தமை: "நொச்சியம் பச்சிலையான்" (தே.சுந்தர. நன்னிலத்துப்பெருங்கோயில்) சிலுகு - சண்டை; "கலைகற்ற பேய்களொடு சிலுகிட் டுலாவுவன" (அஞ்ஞவதைப்பரணி) வேடன் - கண்ணப்ப நாயனார். குச்சில் - குடிசையில்.

15. சுந்தரன் ஆகம் தவியாமல்; ஆகம் - மனம். பரவை - பரவை நாச்சியார். வியாளப்பணி - பாம்பாகிய ஆபரணம்.

16. கண்ணிற் கலநீர்களில் - கண்ணிலிருந்துவிடும் கலநீரால்; "மன்ற கலகங்கல னேதூணி கட்புனல்" (முல்லையந்தாதி, 28) கிலி - பயம்; வழக்கு. அம்புலி தாழ் - பிறைதங்கிய. பாவம் போய்விடும்.

17. மேலடி வைக்குஞ் சினமாறன் றன்சுர மீட்டகதை
போலடி யேன்மெய்ப் பிணிகளை வாயண்டர் போற்றநெடு
மாலடி தேட வயன்முடி தேட மறைந்தொருகல்
லாலடி தேடி யமர்தரு காளத்தி யாண்டவனே.

18. கோழைச் சவலை யடியேனைக் காத்தருள் குற்றமிலா
மாழைச் சயிலத் தனுவுடை யாயுன்னை வாழ்த்தப்பொறா
மோழைச் சமணைக் கழுவேற் றினாற்கு முலைகொடுத்த
ஏழைச்சி பங்கின னேதிருக் காளத்தி யீச்சுரனே.

19. நாவுக் குருசி தனைத்தேடிப் பல்லுயிர் நாடியந்த
ஆவுக்குத் தீங்குசெய் யும்பஞ்ச பாதக னாமென்றனைக்
கோவித்துக் கீழ்நர கிற்படுத் தாமற் குறித்தருள்வாய்
காவித் தடவயல் சூழ்கயி லாபுரிக் காளத்தியே.

20. மாரக் கடம்பனைப் பெற்றகண் ணாவுனை வாழ்த்துமென்மேற்
கோரப் பிணிகெடப் பார்த்தருள் வாய்நின்சொற் குற்றமென்ற
கீரற்கு நின்சொரு பங்காட்ட வேண்டிக்கிளைத்தெழுந்த
ஈரச் சடாமுடி யாய்திருக் காளத்தி யீச்சுரனே.

---

17. மேல் அடிவைக்கும் மாறன் - தன்மேல் பிரம்படியை வைத்த பாண்டியன்; இவன் அரிமர்த்தன பாண்டியன். சுரமீட்டது கூன்பாண்டியனுக்காயினும், அவன் முன்னோன் செயலையும் அவன் செயலாகக் கூறினார். அண்டர் - தேவர்.

18. கோழை - பயத்தையுடையவன். சவலை - ஏமாந்து நிற்பவன், ஆதரவற்றவன்; ''சவலையாய் நாயேன் கழிந்து போவேனோ'' (திருவா.) மாழைச் சயிலத் தனு - பொன்மலையாகிய வில். மோழை - அறிவின்மை. ஏறறினான்: திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். ஏழைச்சி - பெண். 'ஏழைப்பங்காளன்' என்பதை நினைப்பிக்கின்றது.

19. ஆவுக்கு - உயிருக்கு.

20. மாரக் கடம்பனை - மன்மதனைப் போன்ற திருவுருவத்தையுடைய முருகக் கடவுளை; மாரன் - மன்மதன். சிவபெருமான் திருவிழிகளில் உண்டாகிய பொறியிலிருந்து முருகக் கடவுள் உற்பவித்தாராதலின், 'கடம்பனைப் பெற்றகண்ணா' என்று கூறினர். கோரம் - கொடுமை. நின்சொற்குற்றமென்ற கீரன் - தருமியின் பொருட்டுப் பாடித்தந்த ''கொங்குதேர் வாழ்க்கை'' என்ற செய்யுள் பொருட்குற்றமுடையதெனக் கூறிய நக்கீரர். நக்கீரர் இத்தலத்தில் வழிபட்டுச் சிவபெருமானை அவமதித்த பாவந் தீர்ந்தாராதலின் இது கூறினார். நக்கீரரோடு வாதிடுகையில் சடைமுடி, நெற்றிக்கண் முதலியவற்றோடு தம் திருவுருவத்தைக் காட்டினாரென்றும், கீரர் பின்னும் அஞ்சாது, ''சடைகொடு வெருட்டல் வேண்டா'' என்று கூறினாரென்றும் திருவிளையாடற் புராணம் உரைக்கும். ஆதலின் இங்கே, 'நக்கீரருக்கு நின் திருவுரு

21. நின்பணி தன்னின் முயலேனின் னாம நினைந்தருள்வார்
முன்பணி யேன்றிரு நீறணி யேன்வஞ்ச மூர்க்கனியான்
மின்பணி தொண்டர் தலைமண்டை கொண்டது மீட்டதுபோல்
என்பிணி யைக்களை வாய்திருக் காளத்தி யீச்சுரனே.

22. வீணுந் தகைமையு மேம்பாடுங் கற்று மிகவுழன்று
சாணுந்தி பேணித் திரிதனன் றோசெஞ் சடாமுடியும்
பூணுமுந் நூலுந் திருமார்புந் தூக்கிய பொற்பதமும்
காணும் பதந்தரு வாய்கயி லாபுரிக் காளத்தியே.

23. தூற்று மருந்தும்பொய் சோலை மருந்தும்பொய் சூழ்கடலில்
ஏற்று மருந்தும்பொய் மானிடர் காளஞ் செழுத்தையன்பாற்
சாற்று மருந்தவ மில்லாத வன்மெய் தனிற்பிணியை
மாற்று மருந்துதென் கைலாய மேய மலைமருந்தே.

24. பணிக்கு மருந்து கருட னலாதில்லை பாரிலிருள்
அணிக்கு மருந்து தவனன் லாதில்லை யானபசி
தணிக்கு மருந்தன்ன தானமல் லாதில்லை சாற்றுகிலென்
பிணிக்கு மருந்து கயிலாய ரன்றிப் பிறரில்லையே.

வத்தைக் காட்ட வேண்டித் தோற்றுவித்த சடைமுடியையுடையாய்' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

21. பணி - திருத்தொண்டு. மின்பணி தொண்டர்..... மீட்டது: இவ்வரலாறு இப்போது விளங்கவில்லை.

22. வீண் - பயனற்ற விஷயங்கள். தகைமை - தகுதியுடைய செயல்கள். மேம்பாடு - மென்மை. நன்மையும் தீமையும் கலந்து கற்றேனென்றபடி. சாண் உந்தி - சாணளவாகிய வயிறு; ''சாணும் பிழைக்க'' (பட்டினத்துப்.) தூக்கிய பொற்பதம் - குஞ்சிதசரணம். பதம் தருவாய் - பதவியை அருள்வாயாக.

23. தூற்றும் மருந்து - துளிக்கும் திரவரூபமான மருந்து; மரத்தூற்றிலுள்ள பட்டை முதலிய மருந்தெனலும் ஆம். சோலை மருந்து - சோலையில் வளரும் மூலிகையாகிய மருந்து. கடலில் ஏற்று மருந்து - அமுதம். பொய்யென்றது நிலையான பரிகாரத்தைச் செய்யா வென்னும் கருத்தினது. மலைமருந்து: காளத்திநாதர் திருநாமங்களுள் ஒன்று; ''அங்கண் மாமலை மேன்மருந்தை வணங்கி'', ''அயன்மா றேடும், மருந்துவெளி யேயிருந்த திருக்கா ளத்தி மலையடிவா ரஞ்சார வந்து தாழ்ந்தார்'', ''திருமுன் சென்றெய்தி மலைமேன் மருந்தை வணங்கினார்'' (பெரிய. திருநா. 348, திருஞா. 1021, ஏயர்கோன். 196)

24. பணிக்கு - நாகத்திற்கு. மருந்து - பரிகாரம். இருள் அணி - இருளாகிய படை. தவனன் - சூரியன்.

25. நெஞ்சடை யாமுன் னினைவழி யாமுன் னெடும்புலன்கள்
அஞ்சடை யாமுன் னறிவழி யாமு னயர் ந்துகண்கள்
பஞ்சடை யாமுன் னடியேனைக் காத்துன் பதந்தருவாய்
செஞ்சடை யாய்பர மாகயி லாயச் சிவக்கொழுந்தே.

26. தீக்கிரை யாயெறும் புக்கிரை யாய்மண் டினற்கிரையாய்
நாய்க்கிரை யாய்வன் னரிக்கிரை யாயுட னான்சுமந்தேன்
வாய்க்கிரை தேடி வருந்தாம லாண்மழன் மதனையுங்கட்
டீக்கிரை யாக்கிய தேவே கயிலைச் சிவக்கொழுந்தே.

27. குச்சித்த னன்னெறி யில்லாத வன்வெய்ய கோபனின்பால்
மெய்ச்சித்த மற்றவ னானாலுங் காத்தருள் வேதப்பிரான்

---

25. நெஞ்சு அடையாமுன் - கபத்தினால் தொண்டை அடைத்துக் கொள்வதற்குமுன். நினைவு - ஞாபகம். நெடும்புலன்கள் - நீண்ட காலமாகப் பல நுகர்ச்சிகளை நுகர்ந்த பொறிகள்; புலன்கள்: இங்கே, ஆகுபெயர். அடையாமுன் - அடைப்பதற்குமுன்; "ஒக்க வடைக்கும்போதுணர மாட்டேன்" (தே.திருநா. திருப்புகலூர்) கண் பஞ்சடைதலாவது ஒளி மழுங்குதல்; "காலன் வருமுன்னே .கண்பஞ்சடைமுன்னே" (பட்டினத்தார் பாடல்.) இச்செய்யுளில் மரணசமயத்தில் உண்டாகும் அறிகுறிகள் சொல்லப்பட்டன. கயிலாயம் - தட்சிணகைலாசமாகிய காளத்தி.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மே லுந்தி, அலமந்த போதாக" (தே. திருஞா. திருவையாறு) என்பது காண்க.

26. இறந்த பிறகு உடல் தீ முதலியவற்றுக்கு இரையாதல் கூறப்படும்.

இந்த உடலை நான் பாதுகாத்துச் சுமந்தாலும் இது கடைசியில் எனக்குப் பயன்படுதலின்றித் தீ முதலியவற்றிற்கு இரையாகிக் கழியும் என்றார். வருந்தாமல் ஆள்வாயாக.

இந்தச் செய்யுளின் கருத்தோடு, "எரியெனக் 'கென்னும் புழுவோவெனக் கென்னு மிந்தமண்ணும், சரியெனக் கென்னும்" (பட்டினத்தார் பாடல்), "நாய்தம தெனநரி தமதெ னப்பிதாத், தாய்தம தெனதமன் றனதெனப்பிணி, பேய்தம தெனமனை மதிக்கும் பெற்றிபோல், ஆய்தம தெனப்படும் யாக்கை யாரதே" (திருவிளை. இந்திரன். 32) என்பவை ஒப்புநோக்கற்பாலன.

27. குச்சித்தன் - இழிந்த சித்தத்தை யுடையவன். வேதப் பிரான் - பிரமதேவர். பிரமாவின் தலைகளில் நடுத்தலை தன்னை இகழ்ந் தமையின்

உச்சித் தலைகொய் தவனேகண் ணப்ப னுமிழ்ந்ததசை
இச்சித் தமுதுசெய் தோனேதென் காளத்தி யீச்சுரனே.

28. நேர்ந்தாரை வாழ்வித்து நேராரைத் தாழ்விக்கு நின்மலனே
பூந்தாரை யிந்து முடித்தவ னேயுனைப் போற்றிவந்து
சேர்ந்தேனை வாழ்வித்தென் மெய்யிற் பிணிதனைத் தீர்த்தருள்வாய்
சார்ந்தாரைக் காப்பவ னேகயி லாபுரிச் சங்கரனே.

29. அப்புரத் தத்தசை யென்பாற் சமைத்தவென் னாகத்துற்ற
துப்புரத் தைக்குலைக் கும்பிணி தீர்த்தருள் சோபனனீ
செப்புரத் திற்பெண் ணழுத்துங் கணையுஞ் சிலையுங்கொண்டு
முப்புரத் தைச்செற்ற காளத்தி யீச முழுமுதலே.

30. நாகரை யாகத்திற் பூண்டவ னேயந்த நாட்புரத்தைச்
சேகரை யாடலிற் செற்றவ னேமலர்த் தேமுதலாம்
மாகரை யாளும் பரனேயென் மெய்ப்பிணி மாற்றிவலி
யேகரை யாமல்வைப் பாய்திருக் காளத்தி யீச்சரனே.

அதனை இறைவன் கொய்தனனென்பது புராண வரலாறு. வேதப்பிரா னாயினும் அவன் தன்னை இகழ்ந்தவழி ஒறுத்தும், வேடனாயினும் தன்னை வழிபட்டவிடத்து அவன் வழிபாட்டை ஏற்றுக்கொண்டும் அடியார்க்கு எளிய னாந் தன்மையுடையவனாயினனென்று புலப்படுத்தியபடி.

28. நேர்ந்தாரை – தன்பால் அன்பு பூண்டவரை. நேராரை – பகைவர்களை. தாழ்வித்தாலும் அச்செயல் அவர் நன்மைகருதிய மறக்கருணையின் பாற் படுதலின், அடுத்து நின்மலனேயென்றார். சிட்டபரிபாலனமும் துட்டநிக்கிரக மும் உடையானென்றபடி. பூந்தாரை இந்து – பொலிவுபெற்ற நட்சத்திரங்களை யுடைய சந்திரனை. தாராகணமென்று நட்சத்திரக் கூட்டத்தைக் கூறுவர். முடித்தவனே – சிரத்தில் சூடியோய்.

29. அப்பினது அம்சத்தையுடைய ரத்தத்தாலும் தசையாலும் என்பாலும் உண்டாக்கிய என் உடம்பென்க. என் ஆகத்துற்ற பிணி, குலைக்கும் பிணியென்க. துப்பையும் உரத்தையும் குலைக்கும்; துப்பு – தூய்மை; உரம் – வன்மை. சோபனன் – திவ்யமங்கள மூர்த்தி. செப்பு உரத்தில் பெண் அழுத்தும் கணையும் – புகழையுடைய திருமார்பில் திருமகளைப் பதித்த திருமாலாகிய அம்பையும். சிலையும் – மேருமலையாகிய வில்லையும்.

30. நாகரை – பாம்புகளை. ஆகத்தில் – திருமேனியில். பூண்டவனே – ஆபரணமாக அணிந்தோய். அந்த: பண்டறிகட்டு. புரத்தையும்

31. கூற்ற நமனை யுதைத்தவ னேவெங் கொடியபுலித்
தோற்றங் கரையுள்ள சோதியென் னோவைத் தொலைத்தருள்வாய்
போற்று நரையுகந் தாள்பவ னேதெய்வப் பொன்முகரி
யாற்றங் கரையி லமர்ந்தருள் காளத்தி யற்புதனே.

32, 33, 34. ★ ★ ★ ★ ★

35. வெங்களை மூடி முளைதனில் வாடுமென் மெய்ப்பிணிநீத்
தங்களைந் தேயெனை யாண்டருள் வாய்கொன்றைத் தாரினை
யும்திங்க ளையுமர வங்களை யுந்திருத் தார்களையும்
கங்களை யுங்கட்டு செஞ்சடை யாய்திருக் காளத்தியே.

36. பல்லாலொர் மாத்தசை மென்றிட்ட வற்குன் பதமளித்தாய்
வில்லா லசுரரைச் செற்றா யெனது மிடிதொலைப்பாய்
சொல்லா லமரர் துதிக்குங் கயிலைச் சுடர்க்கொழுந்தே
கல்லான் மரத்தி னிழலுறை வாய்திருக் காளத்தியே.

அவற்றிலிருந்த சேகரையும்; சேகர் - குற்றத்தையுடைய அசுரர்; சேகு - குற்றம். ஆடலின் - விளையாட்டைப் போல. திரிபுரம் எரித்தது இறைவனுக்கு ஒரு விநோதார்த்தமாகவே இருந்ததென்றபடி. மலர்த் தே - பிரமதேவர். மாகர் - வானவர், தேவர். வலியே கரையாமல் - ஆற்றல் குறையாமல்.

31. கூற்றம் நமனை - உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவனாகிய யமனை. புலித்தோல் தங்கு அரை; அரை - இடை. பொன் முகரியாறு இத்தலத்தில் ஓடுவது. அற்புதன் - ஞானமூர்த்தி.

32, 33, 34 இம் மூன்று செய்யுட்களுமுள்ள ஏடு கிடைக்கவில்லை.

35. களை - பயிரினிடையே தோன்றும் களை. தம்மை இளம்பயிராக உருவகம் செய்தார். பிணி நீத்தம் களைந்தே - நோயாகிய வெள்ளத்தைப் போக்கி; மிகுதிபற்றி நீத்தமென்றார். அரவங்களையும் - பாம்புகளையும். திருத்து ஆர்களையும் - திருத்தப்பெற்ற ஆத்திமாலைகளையும். கங்களையும் - தலைகளையும்.

36. மா - பன்றியது. மென்று இட்டவற்கு - கண்ணப்பநாயனாருக்கு. அசுரர் - திரிபுரத்தில் இருந்த அசுரர்கள். மிடி - வறுமை. கல்லால், இத்தலவிருட்சம்.

37. பெரும்புனல் கொன்றை சிறுபிறை சூடிய பிஞ்ஞகனே
இரும்பனைப் பித்தளை யாகாமற் காத்தரு ளேமனென்னும்
துரும்பனைத் தூணி லவதரித் தேசெற்ற சோதிபெற்ற
கரும்பனை வெம்பொடி செய்தவ னேதிருக் காளத்தியே.

38. அருமந்த வாலிப மெல்லா நடுங்கவென் னாகந்தன்னில்
வருமந்த மான பிணிதொலைப் பாய்நச்சு வாயரவம்
தருமந்த மாணிக்கந் தன்னைக்கை யாலள்ளித் தன்கதிராற்
கருமந்தி செம்மந்தி யாகுங் கயிலையிற் காளத்தியே.

39. நேமியன் றன்னைக் கலையாக்கி யிந்தை நிலத்தரைத்துத்
தோமிய றக்கன் றலைவெட்டிப் பாரதி துண்டங்கொய்து
மாமிதன் காதை யரிந்தவ னேயென் மனத்துக்கிட்ட
காமியந் தந்தருள் வாய்கயி லாபுரிக் காளத்தியே.

---

37. பெரும்புனல் - கங்கை. இரும்பனை - இரும்புபோன்ற வலிய நெஞ்சையுடைய என்னை; ''இரும்புதரு மனத்தேனை'' (திருவா.) பித்துஅளை ஆகாமல் - சிற்றின்பத்தில் ஈடுபடும் பித்து அளைந்தவனாகாமல். இரும்பாகிய என்னைப் பித்தளையாகாமல் காப்பாயாகவென வேறொரு பொருள் தோற்றியது. ஏமன் - இரணியன்; ஏமம் - பொன். துரும்பனை - துரும்பு போன்றவனை; ''வெறும், துரும்பனே னென்னினும்'' (தாயுமானவர் பாடல்.) சோதி - நரசிங்க மூர்த்தி. அவர் பெற்ற கரும்பன், மன்மதன்; கரும்பன் - கரும்பாகிய வில்லையுடையவன். வெம்பொடி - வெவ்விய நீறு.

38. அருமந்த - அருமருந்தன்னவென்பதன் மரூஉ; ''அருமந்த வரசாட்சி வரிதோமற் றெளிதோதான்'' (பெரிய. திருவாரூர்ச்.44) வாலிபம் - இளமைப் பருவம்; வழக்கு. வரும் மந்தமான பிணி. தரும் அந்த மாணிக்கம். தன் கதிரால் - அந்த மாணிக்கத்தின் கிரணங்களால். மாணிக்கம், செந்நிற முடையதாதலின் அதன் கதிர் வீசியதால் கருமந்தி செம்மந்திபோலத் தோற்றியது.

39. தக்கயாக சங்காரத்தில் நிகழ்ந்த செயல்கள் கூறப்படும்.

நேமியன் - சக்கரபாணியாகிய திருமால்; நேமி - சக்கரம். இங்கே திருமாலின் அம்சமாகி யக்ஞபுருஷனைக் கொள்க. கலை - கலைமான். தக்க யாக சங்காரத்தில் யக்ஞ புருஷன் மானுருவந் தாங்கி ஓடினானென்பது புராணவரலாறு; ''மகத்தின் றெய்வதம், பிணையென வெருக்கொடு பெயர்ந்து போதலும்'' (கந்த. யாகசங்கார. 37) இந்தை - சந்திரனை. பாரதி துண்டம் - கலைமகளது நாசியை. இட்ட காமியம் - விரும்பிய பொருளை.

40. காமத் தளவின் முயல்பஞ்ச பாதகன் கள்வன்செயும்
தோமத் தனையு மிடியத் தனையுந் தொலைத்தருள்வாய்
சேமத்தைச் சேர்சடைப் பாகீ ரதிபொங்கிச் சிந்தச்சிந்த
ஈமத் திருநடஞ் செய்பவ னேயேழிற் காளத்தியே.

41. குலைமதி யென்றுளம் பேணேன் விரகக் கொடுமையிற்பட்
டலைமதி கேட னெனினு மடியனை யாண்டருள்வாய்
விலைமதி யாத கழையீன்ற முத்தம் வெயிலைத்தள்ளிக்
கலைமதி காட்டுங் கயிலாய மாமலைக் காளத்தியே.

42. புழைக்கை மலைவெங் கராவாயிற் பட்டுப் புராதனவென்
றழைக்கும் பொழுதரி காத்தது போலெனை யஞ்சலென்பாய்
உழைக்கண் பிதுங்கப் புலிதண்டை மோத வறவினர்போல்
கழைக்கண்கள் முத்துதிர்க் குங்கயி லாபுரிக் காளத்தியே.

43. பண்ணிடந் தான்செவி யாகிடப் பாணர்ப் பரித்தவனே
பெண்ணிடந் தான்வைத்த பிஞ்ஞக னேயென் பிணிதொலைப்பாய்

---

40. காமத்து அளவில் முயல் - காமநுகர்ச்சி மாத்திரத்தில் முயற்சிகளைச் செய்கின்ற. தோம் அத்தனையும்; தோம் - குற்றம். மிடி - வறுமை. சேமம் - பாதுகாப்பு. பாகிரதி - கங்கை. ஈமத் திருநடனம் செய்பவனே - சுடலையில் அழகிய தாண்டவத்தைச் செய்தருள்வோய்.

41. குலைமதி என்று உளம் பேணேன் - என்பாவத்தை அழிப்பாயாக என்று வேண்டி நின்னை என் மனத்தின்கண் வைத்துப் போற்றுதலைச் செய்யேன்; மதி: முன்னிலையசை. விரகமென்றது இங்கே காமதாபத்தை. கழையீன்ற முத்தம் - மூங்கில்கள் உதிர்த்த முத்துக்கள். கலைமதி - கலைகளையுடைய சந்திரனது குளிர்ச்சியை.

42. புழைக்கைமலை - யானை; என்றது கசேந்திரனை. கரா - முதலை. புராதன - ஆதிமூலமே. அரி - திருமால். உழைக்கண் பிதுங்க - மானினது கண் அச்சத்தால் விழி பிதுங்க. தண்டை - வாலை. புலி வாலைத் தரையில் மோதிய மாத்திரத்தில் மான்கள் அஞ்சி விழி பிதுங்கின. கழைக்கண்கள் முத்து உதிர்க்கும் - மூங்கிலின் கணுக்கள் முத்துக்களை உதிரும்படி செய்யும்; மானின் நிலைகண்டு இரங்கிக் கண்ணீர்த்துளிகளை உதிர்க்குமென்று வேறொரு பொருள் தோற்றியது. முத்து உண்டாகும் இடங்களில் மூங்கில் ஒன்று.

43. பண் இடம் - பண்கள் தோற்றுவதற்குரிய இடம். தான்: அசைநிலை. பாணர்ப் பரித்தவனே - இசைவாணர்களைத் தாங்கியவனே. சிவ

மண்ணிடந் தானயன் காணாத நின்றன் வடிவையெல்லாம்
கண்ணிடந் தானுக் கிருப்பாக நல்கிய காளத்தியே.

44. அல்விளக் குந்திங்க ளங்கமுந் தேயச்செல் லாதவதனார்
பல்விழக் கண்டவ னேயெனை யாண்டருள் பைந்தொடியார்
இல்விளக் கப்புது மாலைக்கு நாகங்க ளீன்றுவைத்த
கல்விளக் கேற்றுங் கயிலாய மாமலைக் காளத்தியே.

45. சிலம்பார்க்கத் தூது நடந்தவ னேயென்றன் சிந்தைவியா
குலம்பாற்றி மெய்யிற் பிணிகளை வாய்பெருங் கோலவெண்ணித்
திலம்பார்த் தெடுத்தரி பற்காட்டுங் கொள்கை சிறுபடிமக்
கலம்பார்ப்ப தொக்குங் கயிலாய மாமலைக் காளத்தியே.

46. செல்வைத்த புற்றிற் பணிவந்த தென்னமெய் தேம்பச்சொட்டைச்
சொல்வைத் துறையும் பிணிதொலைப் பாய்புனஞ் சூழ்கிளியை

பெருமான் தம் திருக்காதில் இரண்டு கந்தருவர்களைத் தோடாகத் தரித்தருளி னாரென்பது வரலாறு; "தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர்,பா டுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே" (திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்) மண் இடந்தான் - பூமியைத் தோண்டினவனாகிய திருமால். இடந்தானும் அயனம். கண் இடந்தானுக்கு - கண்ணப்ப நாயனாருக்கு.

44. அல் விளக்கும் - இரவை நீக்கி நிலவால் விளக்குகின்ற. ஆதவனார் - சூரியன்; பன்மை, இகழ்ச்சிக்குறிப்பு. தக்கயாக சங்காரத்தின் போது சிவபெருமான் சந்திரனைத் தேய்த்துச் சூரியனது பல்லைத் தகர்த்தனரென்பது வரலாறு. மகளிர் மாலைக்காலத்தில் விளக்கேற்றுதல் மரபு. இல்விளக்க - வீடுகளுக்கு விளக்கம் உண்டாக்கும் பொருட்டு. புதுமாலைக்கு - புதுமையை யுடை மாலைப்பொழுதுக்கு; முல்லைமலர்தல் முதலிய புதுமையை உடைமை யின் புதுமாலையென்றார். கல்விளக்கு - மணியாகிய விளக்கு. பைந்தொடியார் விளக்கேற்றும் என்க.

45. சிலம்பு ஆர்க்க. சிவபெருமான் வேதத்தைச் சிலம்பாக அணிந்தனரென் பது வரலாறு. தூது நடந்தது சுந்தரமூர்த்தியாருக்காகப் பரவையினிடம் சென்றதைக் குறித்தது. வியாகுலம் - துயரம். பாற்றி - போக்கி. கோல வெண் நித்திலம் - அழகிய வெண்மையான முத்துக்களை. அரி - குரங்கு. சிறு படிமக்கலம் - சிறிய கண்ணாடி. கண்ணாடி பார்ப்பார் பல்லைத் திறந்து பார்த்தல் இயல்பு.

46. செல் - கறையான். பணி - பாம்பு. தேம்ப - வருந்த. சொட்டைச்சொல் - பழிமொழி. வில்வைத்த - வில்லைப்போன்ற. கவண் - கிளி.

வில்வைத்த நன்னுதல் வேடிச் சியர்கவண் மீதுரத்னக்
கல்வைத்து வீசுங் கயிலாய மாமலைக் காளத்தியே.

47. நண்டா னதுகட்டும் வானரம் போல நடுங்கியுள்ளம்
திண்டாட வந்தெனைச் சாதிக்கு மெய்ப்பிணி தீர்த்தருள்வாய்
அண்டாத மாலயன் றான்முத லான வமரர்குழாம்
கண்டா தரிக்குங் கயிலாய மாமலைக் காளத்தியே.

48. மிடிக்கே யலுத்து மெலிகின்ற பாதகன் மீண்டுமிந்தக்
கடிக்கே யிளைத்துமெய் நோவாமற் காமின் கனத்தனத்தார்
மடிக்கே கிடத்த வுழல்கின்ற மாயன் வணங்கக்கல்லால்
அடிக்கே யுறைந்த பரனேதென் காளத்தி யற்புதனே.

49. நிரைப்பண் ணளியிசை மேவிய பூங்குழ னேரிழைமா
தரைப்பின் றொடர்ந்து துயர்படு வேனெனைத் தாங்கியருள்
திரைப்பெண்ணைத் தாங்கு சடையாய் திருவுந்திப் பொன்முகரிக்
கரைப்புண்ணி யாபர மாகயி லாபுரிக் காளத்தியே.

கடி கருவிகளுள் ஒன்று. கவணில் ரத்தினத்தையே கல்லாக வைத்து வீசிக் கிளியை ஓட்டினர்.

47. நண்டுக்குக் குரங்கு அஞ்சும். கட்டும் - கட்டப்பெற்ற. திண்டாட: ''திண்டாட வெட்டி விழவிடுவேன்'' (கந்தரலங்காரம்) சாதிக்கும் - துன்புறுத்தும், அண்டாத - அணுகவொண்ணாத. ஆதரிக்கும் - அன்பு செய்யும்.

48. மிடி -வறுமை.. அலுத்து - இளைப்புற்று; ''அலுத்தே னடியேனதிகைக் கெடில வீரட் டானத் துறையம் மானே'', ''அலுத்தே னடியேனை யஞ்சலென் னாய்'' (தே. திருநா. திருவதிகை, திருவாவடுதுறை) கடி - மேகநோய். கா - பாதுகாப்பாயாக. மின்னுகின்ற பாரமாகிய நகிலையுடையார். மடிக்கே கிடத்த - குழந்தையாகக் கொண்டு பாலூட்டுதற்கு மடியின்கண் படுக்கவைக்க. உழல்கின்ற - பிறவியெடுத்துத் திரிகின்ற. பல தாயர் வயிற்றிற் பிறந்து பிறந்து திரிகின்ற திருமாலென்றபடி.

49. நிரைப்பண் அளி - வரிசையாகிய பண்களைப் பாடும் வண்டுகள். தாங்கி - பாதுகாத்து. திரைப்பெண்ணை - அலைகளை யுடைய கங்கையாகிய பெண்ணை. திருவுந்தியாகிய பொன்முகரி; உந்தி - நதி.

உ

பழனி இரட்டைமணிமாலை

பதிப்பாசிரியர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி

டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை - 600 090.

பழனி இரட்டைமணி மாலை

இரட்டைமணி மாலை யென்பது தமிழிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. நிறத்தால் வேறுபட்ட மணியும் பவளமும் கோத்து அமைக்கப்படுவதுபோல யாப்பால் வேறு பட்ட வெண்பாவையும் கட்டளைக் கலித்துறையையும் அந்தா தியாகத் தொடுத்து அமைக்கப்படுவது இப்பிரபந்தம். இந்த வகையில் நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன.

ஆறுபடை வீடுகளுள் ஒன்றும் திருவாவினன்குடியென்று கூறப்படுவதுமாகிய பழனியில் திருக்கோயில் கொண்டெழுந்த ருளியுள்ள முருகக்கடவுள் திறத்தில் இஃது இயற்றப்பெற்றது. இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இது தெள்ளிய இனிய நடை வாய்ந்து அன்பை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இதிலுள்ள செய்யுட்போக்கினால் இதனை இயற்றியவர் சிறந்த புலவரென்றும் முருகக் கடவுள்பால் மிக்க அன்புடையவரென் றும் அருமையறியாத பல செல்வர்கள்பால் அலைந்து அலைந்து வெறுப்புற்றவரென்றும் தெரிகிறது.

இந்த இரட்டைமணி மாலை எழுதிய ஏட்டுச்சுவடி யொன்று இன்றைக்கு 53 வருஷங்களுக்கு முன்பு கும்பகோணம் காலே ஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்து விளங்கிய அன்பர், திரிசிரபு ரம் சி. தியாகராச செட்டியாரவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்தது. அதன் பழமை, சற்றேறக்குறைய 200 வருடங்க ளுக்கு முன்பு அஃது எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பதைப் புலப்படுத்தியது.

அன்பர்கள் பாராயணஞ் செய்வதற்கு அனுகூலமாக இருக்கு மென்பதையும் நூல் இறவாது உலாவுதலையும் நினைந்து இதனை இங்கே பதிப்பிக்கலானேன்.

காப்பு

ஞான விரகறியா நானுஞ் சிலதமிழால்
வானவரேத் தும்பழனி வந்தானைத்-தானவரை
வென்றானை வாழ்த்த விரைப்பா திரிவனஞ்சேர்
கன்றானை மாமுகத்தோன் காப்பு.

நூல்

வெண்பா

1. பூமாது கேள்வன் புகழ்மருகன் பொய்யாத
பாமாது வாழ்த்தும் பழனியான்-நாமத்
தனிவேலை யுந்தோகை தன்னையுமே பாட
இனிவேலை கண்டீ ரெமக்கு.

கட்டளைக்கலித்துறை

2. எம்மைப் புரக்குஞ் சிவகிரி யானெம் மிரவொழிக்கும்
செம்மைத் தனிச்சுடர் தேவசிந் தூரந்தெய் வானைவள்ளி
யம்மைக் கிறைபொன் னடிகளல் லாம லடியவர்கள்
வெம்மைப் பிறவிப் பிணிக்கொரு மூலிகை வேறில்லையே.

வெண்பா

3. வேறோ விளக்கும் விளக்கொளியும் வேறிரண்டு
கூறோ நவரசமுங் கூத்தாட்டும் - நாறுமலர்க்
கள்ளுயிர்க்குந் தென்பழனிக் கந்தன் குருபரனென்
உள்ளுயிர்க்கு வேற்றுமையா மோ.

கட்டளைக்கலித்துறை

4. ஆமோ திருவெழுத் தாற்றி யாததென் றஞ்சலிலா
நாமோவை காபுரி நாட்டிருப் போம்வினை நம்மைவிட்டுப்

காப்பு. விரகு - உபாயம். தமிழ் - செய்யுள். பாதிரி வனம் - ஸ்தல விநாயகர் எழுந்தருளியிருக்கும் இடம். கன்று ஆனை - ஆனைக் கன்று.

1. பாமாது - கலைமகள். நாமம் - அச்சம். வேலை - தொழில்; "அடித்தொழும்பு செய்தொழுகும், இவ்வேலை வீந்த ரெமக்கு" காசிக்.

2. இரவு - யாசகம், ராத்திரி. சுடர் - சூரியன். சிந்தூரம் - யானை; தேவசிற் சிறந்தவரென்றபடி. மூலிகை - பச்சிலை.

3. விளக்கும் விளக்கொளியும் வேறோ. நவரசம் - நகை முதல் சாந்தம் ஈறாக உள்ள ஒன்பது சுவைகள். கூத்தாட்டு - நாடகம். கள் - தேன். வேற்றுமையாமோ - வேற்றுமையாவனோ?

4. திருவெழுத்தாறு - சடாக்ஷரம். வைகாபுரிநாடு - பழனியுள்ள நாடு; வைகாபுரி, வையாபுரியெனவும் பழனியையுடைய நாடு வைகாவூர் நாடென

போமோ கொடுவினை போய்விட வேண்டிற் புனக்குறத்தி
மாமோக வேலன் பழனியை வாழ்த்தென் மடநெஞ்சமே.

வெண்பா

5. நெஞ்ச முருகா நிதிப்பெருக்க ரோவெனக்கோர்
தஞ்ச முருகா தனிமுதல்வா-செஞ்சதங்கைத்
தாளுடையாய் தென்பழனிச் சண்முகா பன்னிரண்டு
தோளுடையாய் நீயே துணை.

கட்டளைக்கலித்துறை

6. துணைக்குங் குமக்கொங்கை மங்கையுந் தானுந்த்ரி சூலனெடுத்
தணைக்குங் குழந்தை பழனிப் பிரான்விளை யாட்டென் சொல்கேன்
கணைக்குங் கடுங்கதிர்ச் செவ்வேல்விட் டேழு கடல்கலக்கும்
பணைக்குந் திசைக்களி றோரெட்டு மேவிடும் பாய்ச்சலுக்கே.

வெண்பா

7. பாயிருள்போற் சூர்மாப் பயந்தோடப் பானுவெனத்
தீயுமிழுங் கூரிலைவேற் செவ்வேளே-கோயிலுனக்
கேரகமோ வெங்கனுமோ வென்னெஞ்ச மோதிருச்செந்
தூரகமோ தென்பழனி யோ.

கட்டளைக்கலித்துறை

8. ஓங்கார மான முருகோன் மருங்கி லொருகைவைத்து
நீங்கா தொருகை பிடித்ததண் டாயுத நெஞ்சைவிட்டு
வாங்கா திவனைப் பழனிவெற் பேறி வணங்கினர்க்குத்
தீங்கா னதுவரு மோபொரு மோநமன் சேனைகளே.

வும் வழங்கும்; "சேரர் கொங்குவை காவூர் நனாடதி லாவினன்குடி" "வைகாவூர் நாடதனிற் பழனிப்பதி" (திருப்புகழ்) பழனியில் வையாபுரிக்குள மென்று ஒரு தீர்த்தமுள்ளது.

5. நெஞ்சம் உருகா. நிதிப்பெருக்கரோ - திரவியத்தின் மிகுதியையுடைய செல்வர்களோ. தஞ்சம் - பற்றுக்கோடு.

6. மங்கை யென்றது உமாதேவியாரை. த்ரிசூலன் - சிவபெருமான். கணைக்கும் - திரண்ட. கலக்கும் - கலக்கச் செய்வார். பணைக்கும் - பருத்த. பாய்ச்சலுக்கு ஏவிடும்; மேவிடுமென்று பிரித்துப் பொருள் கொள்ளினும் பொருந்தும்.

7. சூர்மா - சூரனாகிய மாமரம். ஓட உமிழுமெனக. ஏரகம் - மலை நாட்டகத்ததொரு திருப்பதி யென்பர்; திருமுருகு.189. ந. உரையைப் பார்க்க, சோழநாட்டுள்ள சுவாமி மலையும் இத்திருப்பெயரால் வழங்கும்.

8. மருங்கில் - இடையில்.

வெண்பா

9. சேனைத் திரளுநெடுஞ் செங்கோலு மங்கையரும்
ஏனைத் திருவு மெளிதன்றோ-நானிலத்து
நம்பிடுவார்க் கும்பழனி நாட்டுக் குருபரனைக்
கும்பிடுவார் தம்மடியார்க் கும்.

கட்டளைக்கலித்துறை

10. அடியார்க் கெளிய பழனிப் பிரானுல கன்றளந்த
நெடியார்க்கு மார்க்கு நினைப்பரி யான்பக்க நின்றதெய்வப்
பிடியார்க் கிறைவன் பெயர்சொன்ன பேரைப் பிடிக்கிலன்னக்
கொடியார்க்குப் பூட்டுந் தளைபூட்டு வன்கொடுங் கூற்றிற்குமே.

வெண்பா

11. கூற்றையோ திங்கட் கொழுந்தென்றீர் கூற்றுயிர்த்த
காற்றையோ தென்றலிளங் கன்றென்றீர்-தேற்றக்
கடவீ ரெனிற்பழனிக் கந்தவேண் முன்போய்
மடவீர் மொழிவீரென் மால்.

கட்டளைக்கலித்துறை

12. மாலையுஞ் சாந்தும் புழுகோ டளைந்தபொன் மார்பையுமுந்
நூலையுந் தென்பழ னிப்பெரு மானன்பர் நோய்தணிக்கும்
வேலையும் பச்சை மயில்வாக னத்தையும் வெற்றித்தண்டைக்
காலையுஞ் சென்று தொழவேண்டு மாலையுங் காலையுமே.

---

9. எளிதென்பதனைத் திரள் முதலியவற்றோடு தனித்தனியே கூட்டுக. நம்பிடுவார்க்கும் - விரும்புபவர்க்கும்.

10. நெடியார்க்கும் ஆர்க்கும். தெய்வப் பிடியார்க்கு - தெய்வயானையார்க்கு. அன்னக்கொடியார்க்குப் பூட்டும் தளை - பிரமதேவர்க்கு இட்ட விலங்கை; பிரமதேவர்க்குப் குகப்பெருமான் விலங்கிட்டதை, கந்தரலங்காரத்துள்ள, ''பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை, தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப், பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும், எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே'' (89) என்னுஞ் செய்யுள் தெரிவிக்கின்றது.

11. திங்கட் கொழுந்து - பிறை. தென்றல் இளங்கன்று - இளந்தென்றல்; ''தென்றற், கன்றுவந் துலவுமரமிய மாடக் கலைசைவாழ் சிதம்பரேச்சுரனே'' மீ.பிரபந்தத்.

இது தலைவிக் கூற்று.

12. சாந்து - சந்தனக்குழம்பு. முந்நூல் - பூணூல். மாலையும் காலையும் - மாலைப் பொழுதிலும் காலைப் பொழுதிலும்.

வெண்பா

13. காலைக் கமலமுகங் காட்டநெய்தல் கண்காட்ட
மாலைக் குமுதமெலாம் வாய்மலர—நூலிடையார்
கூந்திலெனப் பாசிவளர் கோட்டஞ்சூழ் தென்பழனிச்
சேந்தனிடத் தன்றோ செகம்.

கட்டளைக்கலித்துறை

14. செகத்தா ரொருவர் திருவாவி னன்குடிச் செல்வன்றன்னை
அகத்தா மரைவைத்துப் பூசைசெய் தாரகத் தாமரைக்கே
நகத்தா மரையிரண் டுள்ளே நடிக்கு நடம்புரிவான்
முகத்தா மரைகளிற் பன்னிரு தாமரை முன்னிற்குமே.

வெண்பா

15. முன்னிற்குந் தென்பழனி முத்துக் குமாரநீ
மன்னிக்கு மன்னருட்கோர் மட்டுண்டோ-உன்னமகிழ்
பார்ப்பானை லோகம் படையென்றாய் மூவடிமண்
ஏற்பானைக் காவென்றா யே.

கட்டளைக்கலித்துறை

16. எட்டுக் கணக்கு மெழுத்தாணி தேய்ந்தது மியாங்கள்விற்ற
பாட்டுக் கணக்கும் பலன்பெற லாமென்று பாடிச்சென்ற
வீட்டுக் கணக்குந் தொகைபார்க்கிற் கார்க்கடல் வெண்மணலைக்
கூட்டிக் கணக்கிட லாமே பழனிக் குருபரனே.

வெண்பா

17. குருமூர்த்தி யாய்க்குடிலை கூறியிட்ட வுன்னை
ஒருமூர்த்தி யென்னா துலகம்—இருமூர்த்தி

---

13. கோட்டம் - நீர் நிலை. செகம் சேந்தனிடத்து - உலகம் முருகனிடத்தே தோன்றியது.

14. நகத் தாமரை இரண்டென்றது நகங்களையுடைய திருவடித் தாமரைகளிரண்டையும்; கையை "நகவனசம்" என்றார் ஒரு பெரியார். நடம் புரிவான் - முருகக் கடவுள். முகத்தாமரையிலுள்ள பன்னிரண்டு தாமரையென்றது பன்னிரண்டு திருவிழிகளை.

15. பார்ப்பானை - பிரமனை; "பார்ப்பான், குண்டிகை யிருந்த நீருங் குளுகுளு கொதித்த தன்றே" என்றார் கம்பரும். மூவடி மண் ஏற்பான் - திருமால். கா - உலகத்தைப் பாதுகாத்திடுக; யாசகம் செய்பவனை உலகத்தைக் காப்பாயென்று சொன்னாயென்பது ஒரு நயம்.

16. ஏடு - பனையேடு. கணக்கு - அளவு. வீடு - செல்வர்களுடைய வீடு.

17. குடிலை — பிரணவம்.

மும்மூர்த்தி யாய்ப்பழனி மூர்த்தியே கீர்த்திபுனை
எம்மூர்த் தியுமான தென்.

கட்டளைக்கலித்துறை

18. என்னையும் பார்க்கச் சிறியோர் பிறப்பு மிறப்புமிலா
உன்னையுந் தெய்வமென் றோதிய நாவி னுலப்பவரைப்
பின்னையுந் தெய்வங்க ளென்பார் பழனிப் பிரான்குமரா
பொன்னையும் பொன்னென் றுரைப்பா ரிரும்பையும் பொன்னென்பரே.

வெண்பா

19. பொற்கன்னி காரவனம் பூங்கற் பகவனமாச்
சொற்க நிகர்பழனித் தூயோனே-நற்கனியைத்
தந்தா வளமுகத்தான் றந்தருள வந்தருள்வாய்
நந்தா வளமெனக்கு நல்கு.

கட்டளைக்கலித்துறை

20. நல்லார்முன் னெங்ஙன முய்யவல் லேன்பழ நான்மறையும்
வல்லாய் பழனி மலைவள்ள லேயிரு மங்கையர்க்கும்
சல்லாப லீலைத் தலைவாவென் னோயைத் தணிக்கும்வண்ணம்
பொல்லா வினைவற்சி யென்றர்ச்சி யேனொரு பூவெடுத்தே.

---

18. என்னையும் பார்க்க - என்னைக் காட்டிலும். உலப்பவரை - இறப்பவரை. பழனிப்பிரான்: அன்மை விளி. பொன்னையும்.... பொன்னென்பரே: "மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு மோரினமாய்ப், பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே", "மூரியரம், பொருகா ரிரும்புங் கனகமும் பொன்" என்பவற்றிலும் இக்கருத்து அமைந்துள்ளது.

19. கன்னிகார வனம் - கோங்க வனம். தந்தாவளம் - யானை. நந்தாவளம் குறையாத செல்வத்தை.

20. வற்சி - தீக்கு; வடமொழிச் சிதைவு.

உ

கணபதி துணை

நாராயண தீக்ஷிதர் இயற்றிய

தென்திருப்பேரை

மகரநெடுங் குழைக்காதர் பாமாலை

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய திராவிடவித்யாபூஷணம்

தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-90.

முகவுரை

திருமாலுக்குரிய திருப்பதிகள் நூற்றெட்டு; அவற்றுள் ஒன்றாகிய தென்றிருப்பேரை யென்பது தென்பாண்டி நாட்டிலுள்ள நவதிருப்பதிகளுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. அங்கே எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருநாமம் மகரபூஷணப் பெருமாளென்பது; தமிழில் மகரநெடுங்குழைக்காதரென வழங்கும். அப்பெருமான் விஷயமாக நாராயண தீக்ஷிதரென்னும் ஸ்ரீவைஷ்ணவப்பெரியாரால் இயற்றப்பெற்றது இப்பாமாலை.

இது நம்மாழ்வார் காப்புச்செய்யுள் ஒன்றும், பெரிய திருவடிகளின் வணக்கச் செய்யுள் ஒன்றும், வாழ்த்து ஒன்றும் சேர்ந்து நூற்றுமூன்று கட்டளைக்கலித்துறைகளால் ஆகியது. இப்பாமாலை பாடப்பெற்ற வரலாறு வருமாறு:-

திருச்சிராப்பள்ளியில் சொக்கநாத நாயக்கருடைய அரசாட்சியில் அவருடைய பிரதிநிதியாகத் திருநெல்வேலிச் சீமையை வடமலையப்பப் பிள்ளையென்பவர் ஆண்டு வந்தார். அவரைப் பிள்ளையென்றே பெரும்பாலும் வழங்குவர். அவர் கார்காத்த வேளார் வகுப்பில் உதித்தவர்; நல்ல கல்வியறிவும், தெய்வ பக்தியும், ஒரு செயலை முற்பட ஆராய்ந்து முடிக்க வல்ல திறனும் வாய்ந்தவர். அவருடைய ஆட்சியில் குடிகள் யாவரும் நன்மை அடைந்தனர். அவர் தமிழறிவும் நிரம்பியவர்; மச்சபுராணம், நீடூர்த்தல புராணம் என்பவற்றை இயற்றி இருக்கிறார். இவற்றையன்றி ஒரு கோவையும் வண்ணமும் கலம்பகமும் அவர் இயற்றியுள்ளாரென்று தெரியவருகின்றது. அவர் இயற்றிய அறச்செயல்களும், தேவாலயத் திருப்பணிகளும் பல. அவரைப் பாராட்டிப் புலவர்கள் பாடிய தனிப் பாடல்கள் பல இப்பொழுதும் தமிழ்நாட்டில் வழங்குகின்றன.

தமிழ்ப்புலவர்களிடத்தில் வடமலையப்பப் பிள்ளையனுக்கு அதிக அன்பு உண்டு. அவருடைய ஆதரவில் பல வித்துவான்கள் தம் தமிழறிவை வளர்த்து இன்புற்று வாழ்ந்தார்கள். அவரிடம் பணிபுரிந்து வந்த அதிகாரிகளும் அவருடைய தண்டமிழறிவையும் தமிழ் வித்துவான்கள்பாலுள்ள பேரன்பையும் அறிந்து தாமும் தமிழபிமானமும் தமிழ்ப்புலவர்பாலன்பும் உடையவராக முற்பட்டனர்.

அக்காலத்தில் தென்திருப்பேரையில் நாராயண தீக்ஷிதர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் தலவகார சாமவேதிகளாகிய ஸ்ரீ வைஷ்ணவர் குடியில் பிள்ளைமங்கலத்தாரென்ற குடும்பத்திலே பிறந்தவர். பல வருஷங்களுக்குமுன் சுந்தர பாண்டியரென்னும் அரசர் பல ஊர்களில் வசித்த நூற்றெட்டுத் தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் குடும்பத்தைத் தென்திருப்பேரையில் அமைத்து அக்குடும்பத்தினருக்கு வீடுகளும் நிலங்களும் வழங்கினாரென்பர்; அந்நூற்றெட்டுக் குடும்பத்தின் வழி வந்தவர்கள் இன்னும் அவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். தலவகாரமென்றது சாம வேதத்தின் சாகைகளுள் ஒன்று.

நாராயண தீக்ஷிதர் தமிழ்நூற்பயிற்சியும் மகரநெடுங்குழைக்காதரிடத்தில் பக்தியும் உடையவர். நம்மாழ்வாரிடத்தில் அளவற்ற அன்பினர். தென்திருப்பேரைக்கு அருகிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குத் தினந்தோறும் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாரைத் தரிசித்து வருவார். அவருக்கு நம்மாழ்வார் தாசரென்றும் ஒரு பெயர் வழங்கும். தீக்ஷிதருக்கு நிலம் வீடு முதலியன இருந்தன. அவற்றை வைத்துக்கொண்டு மகரநெடுங்குழைக்காதரைத் தரிசிப்பதும், தமிழ் நூல்களைப் படித்து இன்புறுவதுமாகிய நற்காரியங்களில் பொழுதுபோக்கி வாழ்ந்து வந்தார்.

பயிர் செவ்வையாகப் பயன்தராமையின் ஒரு வருஷம் நாராயண தீக்ஷிதராலும் அவர் இனத்தவர்கள் சிலராலும் அரசிறையைச் செலுத்த முடியவில்லை. அக்காலத்தில் அவ்வரியை வசூல் செய்வதற்கென்று ஓர் அதிகாரியை வடமலையப்பப் பிள்ளையன் நியமித்திருந்தார். அவர் ஒரு வன்னெஞ்சர்; அதிகாரத்துக்கு அழகு பிறர்பால் அதனைச் செலுத்தி அவர்களை நடுங்கவைப்பதேயென்னும் கொள்கையையுடையவர்; தெய்வபக்தி, தமிழ்ப்பற்று என்பவற்றைச் சிறிதும் அறியாதவர். தமிழ்ப்புலவர்கள், தெய்வபக்தர்கள் என்பவர்களுடைய பெருமை இன்னதென்பதை அவர்களோடு பழகித் தானே அறியவேண்டும்? தமது அதிகாரமிடுக்கில் பிறரை மதியாமல் வாழ்பவருக்கு இந்த நல்லோர்களின் உறவு எங்ஙனம் கிடைக்கும்?

நாராயண தீக்ஷிதரும் பிறரும் தாம் வரி செலுத்த இயலாத நிலையில் இருப்பதைப் பணிவாக அவரிடம் தெரிவித்து, இயலுங்காலத்திற் செலுத்தி விடுவதாக நயந்து கேட்டுக்

கொண்டனர். ஆனால் அவ்வதிகாரி அதற்கு இணங்காமற் சிறிதேனும் இரக்கமின்றி அவர்களைத் திருநெல்வேலி நகரத் திற்குக் கொணர்ந்து சிறையில் இடுவித்தார். அச்சிறைக்கூடம் இருந்த தெரு இப்போதும் காவற்புரைத்தெரு என்னும் பெய ரால் வழங்கி வருகிறதென்று சொல்லுகிறார்கள்.

சிறைப்பட்ட தீக்ஷிதரும் பிறரும் தம்முடைய வினையை நினைந்து நொந்து வருந்தினர். அவர்கள் சிறைப்பட்டதனால் தமக்கு இழிவு உண்டாயிற்றென்று வருந்தவில்லை; குழைக்கா தரைப் பிரியும் காலம் நேர்ந்ததே என்பதை நினைந்தே மிகவும் இரங்கி நைந்தனர்.

ஒவ்வொரு நாளும் நாராயண தீக்ஷிதர் குழைக்காதரையும், நம்மாழ்வாரையும் சேவிக்கும் இயல்பினர். ஊணும் உறக்கமும் ஒழிந்தாலும் இந்தச் சேவையைத் தவறாமற் புரிந்து வந்தார். அத்தகையவருக்குச் சிறைவாசம் பெருந்துன்பத்தை அளித்தது. 'நாம் செய்த பழவினைப்பயனே இங்ஙனம் வந்து சேர்ந்தது. குழைக்காதர் நமக்கு விதித்த தண்டனை இது போலும். மனிதர்களுடைய மனத்தைக் குழைக்கும் வகை நாம் அறி யோம். அதை அப்பெருமான் அறிவார். அதனால் அவரை நோக்கிக் கதறி முறையிடுதலே தகுதியான செயல். எங்கும் செவியுடைய அவர் நம் முறையீட்டைக் கேட்பார். சூரியன் வானத்திலிருந்தாலும் பூமியிலுள்ள தாமரையை மலர்த்துகின் றான். வானிலுள்ள சந்திரன் பூவுலகிலுள்ள குமுதமலரை மலர்த்துகின்றான். அவ்வாறே நாம் எங்கே இருந்தாலும் மகரநெடுங்குழைக்காதர் நம்மை இரட்சிப்பார்.* இனிப் பாமாலை சூட்டி அவரை நோக்கி உருகி வழிபடுதல்தான் வழி' எனத் துணிந்தார்.

இங்ஙனம் துணிந்து குழைக்காதர் விஷயமாக ஒரு நூல் செய்யத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் சில செய்யுட்க ளைப் பாடித் திருப்பித் திருப்பி அவற்றைச் சொல்லி உருகிப் பிரார்த்திக்க ஆரம்பித்தார். அந்த நூலே இப்பாமாலை ஆகும். அவருடன் இருந்தவர்களும் சில செய்யுட்களை இயற்றத் தொடங்கினார்கள்.

---

* செய்யுள், 34.

தீக்ஷிதர், நூலைத் தொடங்கும்போது வழக்கம்போல நம் மாழ்வாருக்குக் காப்புக் கூறினார். அக்காப்பிலேயே, ''அடி யேங்க டுன்பமகல்வதற்கா வந்த நான்மறையின், முடியே பரவுங் குழைக்காதர் மீது முதுதமிழாற், படியேழு மோங்கிய பாமாலை யீரைம்பது'' என்று ஸங்கற்பம் செய்து கொண்டார். அடுத்தபடி கருடனைத் துதிக்கையில், ''என் சிறை நீக்குவீத்தா யில்லையே'' என்று இரங்கினார்.

''நாங்கள் பசுவைப் பிரிந்த கன்றைப்போல வருந்துகிறோம். எங்கள் குழைக்காதருக்கு எப்போது கருணை உண்டாகுமோ! வாயில்லாத பசுக்களைக் காப்பாற்றுவதற்காகக் கோவர்த்தனகி ரியைக் குடையாகப் பிடித்த கருணையாளரல்லவோ அவர்? அவரைப் பிரிந்திருக்கும் நாங்கள் மீட்டும் அவரை எப்பொ ழுது சென்று தொழுவோம்! எங்களை அவரிடமிருந்து பிரித்து வைத்திருக்கும் பாவம் எப்போது தீரும்!'' என்று முதற்பாட்டி லேயே அவர் மனம் நைந்து பாடினார்.

''எந்தக் காலத்திலும் உம்மை நினைந்து நாங்கள் வாழ்கின் றோம். எங்கள் உடல் சிறையில் இருந்தாலும் உள்ளம் உம் திருவடியிலல்லவோ இருக்கும்? நூற்றெண்மருக்கு இடர் வந்தால் அதைப் போக்கி அருள்பவர் தேவரீரல்லவா? எந்தச் சமயத்தில் நாங்கள் துயருற்றாலும் அந்தச் சமயத்தில் எங்கள் துன்பத்தை நீக்கியருளும் தயாநிதியாகிய தேவரீர் இப்போது இவ்வளவு தாமதம் செய்வதற்குக் காரணம் என்ன?'' என்று அவர் செய்யுளால் முறையிட்டார்.

தினந்தோறும் தென்றிருப்பேரைத் திருக்கோயிலில் மறை முழக்கும், தமிழ் முழக்கும் செவியாரப் பருகிய அவருக்குச் சிறைக்கூடத்திலுள்ள கொசுவின் ஒலியும், அதிகாரிகளின் அதட்டற்குரலும், காவற் பட்டார் வருந்தி அழுங்குரலும் மிக்க மனவருத்தத்தை உண்டாக்கின. ''இசை நான்மறையின் சங்க முங் கீதத்தமிழ்ப் பாடலுஞ் சத்த சாகரம்போற், பொங்குதென் பேரைப் புனிதா'' என்று அவற்றை நினைந்து உருகினார்.

அவருக்கு ஒரு குழந்தை இருந்தது. தாம் குழைக்காதர் தரிசனத்துக்குப் போகும்போது சிலமுறை அக்குழந்தையையும் உடன் அழைத்துச் செல்வது வழக்கம். அவருக்கு அப்போது அக்குழந்தையின் ஞாபகம் வந்து துன்புறுத்தியது. ''தேவரீரைக்

குழந்தையோடு வந்து மீண்டும் தொழுவது எந்நாள்!''* என்று புலம்பினார்.

ஒவ்வொருநாளும் இங்ஙனம் கதறிய அவருடைய நெஞ்சம் கலங்கியது. ''பித்தனைப் போன்மன மேங்காம லிந்தப் பிணியகல, எத்தனை நாட்செல்லு மோவறியேன்'', ''எண் ணாத வெண்ணி யிடைந்திடைந் தேங்கி யிருந்துமனம், புண் ணாய் மெலிந்து புலம்பாம னீயிப் புலைதவிர்ப்பாய்'' என அழுங்கினார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகத்தைப்போலப் போய்க் கொண்டிருந்தது. ஒருமாத காலம் ஆயிற்று. ''இந்த ஒரு மாதமாக நாங்கள் கதறுகிறோமே. எங்களுடைய சிறையை அகற்றுவிக்கவில்லையே!'' என்று ஏங்கித் துடித்தார்:

> ''திங்களொான் றாகச் சிறையிருந் தோமிச் சிறையகற்றி
> எங்கடம் பாவிரங் காததென் னோ'' (21)

'திருப்பேரை மாதவன் நாமஞ் சொன்னால் கவலையுட துன்பமும் தீரும்' (17) என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்தது. ''இன்றைக்கு நமக்கு அனுகூலம் உண்டாகும்; நாளைக்குள் எப்படியேனும் குழைக்காதர் திருவருள் புரிவார்'' என்று அவருடைய ஏங்கிப்போன நெஞ்சம் நினைந்து ஆவ லுற்று நின்றது. ஒன்றும் எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை.

> ''இன்றாகும் நாளைக்கு மன்றாகு மென்றிங் கிருப்பதல்லால்
> ஒன்றா கிலும்வழி காண்கில மேயுன் னுதவியுண்டேல்
> பொன்றாம லாங்கள் பிழைப்போங் கருணை புரிந்தளிப்பாய்
> அன்றா ரணந்தொழ நின்றாய்தென் பேரைக் கதிபதியே''

என்று பாடினார்.

இங்ஙனம் தம்முடைய குலதெய்வத்தை நினைந்து நினைந்து நைந்து உருகி அழுது புலம்பிய புலவர் ''இனி என் செய்வது!'' என்ற ஏக்கத்தை அடைந்தார். பிறகு தம்மை இந்த நிலைக்குக் கொணர்வதற்குக் காரணமான அதிகாரிக்குத் தம்மை விடுவிக் கும்படி யார் கூறுவார்களென்று ஆலோசித்தார். அவருக்கு மேல் அதிகாரியும் திருநெல்வேலிச் சீமைக்குத் தலைவருமா கிய வடமலையப்பப் பிள்ளையன் தமிழ் வாணர்களிடத்தில் பேரபிமானம் உடையவரென்பதை அவர் அறிந்திருந்தார்.

* ''தின்னை யெந்நாள், கொஞ்சுங் குழந்தையுங் கூடத் தொழுவது'' (9.)

அவருடைய சிறந்த இயல்புகளையும் தமிழன்பையும் பற்றிப் பலர் கூறிப் புகழ்வதையும் கேட்டிருந்தார். ''நாமும் தமிழ்ப்புலமையுடையோமென்பதை அவர் அறிந்தால் ஏதாவது அநுகூலமுண்டாகுமே. ஆனால் நம்முடைய தகுதியைப் பிள்ளையனுக்கு யார் அறிவிப்பார்கள்!'' என்று நினைந்தார்.

> ''வள்வார் முரசதிர் கோமான் வடமலை யப்பன்முன்னே
> விள்வாரு மில்லை யினியெங்கள் காரியம் வெண்டயிர்பாற்
> கள்வா வருட்கடைக் கண்பார் கருணைக் களிறழைத்த
> புள்வாக னாவன்பர் வாழ்வேதென் பேரைப் புராதனனே''

என்னும் செய்யுளுருவத்தில் அவருடைய கருத்து வெளிப்பட்டது.

நாள்தோறும் குழைக்காதரைப் பாடிப் புலம்புவதும் முன் பாடிய செய்யுட்களை மீட்டும் மீட்டும் பாடுவதும் சிறைப்பட்ட அன்பர்களின் வழக்கமாக இருந்தது. ஒருநாள் தீக்ஷிதர், ''வள்வார் முரசதிர்'' என்னும் செய்யுளைக் கூறி அரற்றிய போது அந்தச் சிறைக்காவலாளியின் காதில் பட்டது. அச்செய்யுளில் தன்னுடைய தலைவர் பெயர் வருவதை அவன் கவனித்தான். அவன் சிறிது தமிழறிவு உடையவன்; ''நம்முடைய எசமான் பெயர் இந்தப் பாட்டில் அமைந்திருக்கிறதே; உள்ளே இருப்பவர்கள் தமிழ் வித்துவான்களென்று தோற்றுகின்றது'' என்று அவன் எண்ணினான். பிள்ளையன் தமிழ்ப் புலவர்களைப் பாதுகாக்கும் செயலை முதற் கடமையாகக் கொண்டவரென்பதை அவன் அறிவான். ஆதலின் இத்தகைய புலவர் சிறையில் வாடிக் கிடப்பதை நேரே அவருக்கு அறிவிப்பதே நலம் என்று துணிந்தான். அன்றியும் சிறையில் அவர்களை இட்ட அதிகாரியின் கொடுமை எல்லோரிடத்திலும் வியாபித்திருந்தது. அவர்பால் யாவருக்குமே வெறுப்பு இருந்தது. நாள்தோறும் நாராயண தீக்ஷிதரும் பிறரும் பெருமாளைத் துதித்து உருகுவதை அக்காவலாளி கவனித்து வந்தவன். அவனுடைய நெஞ்சம் இளகிற்று. 'இவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் நமக்கில்லையே' என்ற கவலையும் அவனுக்கு உண்டாயிற்று.

இங்ஙனம் இருக்குங்கால் தன்னுடைய தலைவருடைய பெயர் பாட்டில் வரவே, ''இந்தச் செய்தியை முன்னிட்டுக் கொண்டு பிள்ளையனிடம் இவர்களுடைய நிலையைச்

சொல்லுவோம்'' என்று அவன் எண்ணினான். உடனே வடமலையப்பப் பிள்ளையனிடம் சென்று சிறையிலுள்ளவர்கள் நாள்தோறும் தமிழ்ச் செய்யுட்கள் பாடுவதையும், அத்தலைவருடைய விஷயமாகச் செய்யுள் கூறுவதையும் எடுத்துரைத்தான்.

தண்டமிழ்வாணர் துயரத்தைக் கேட்கப்பொறாத வடமலையப்பப் பிள்ளையன் இதனைக் கேட்டவுடன் எல்லாக்காரியங்களையும் விட்டுக் குதிரையின்மீ தேறிக்கொண்டார்; சிறைக்கூடத்தை நோக்கி விரைந்து வரலானார்.

சிறிது நேரத்திற்குள் குதிரை சிறை வாயிலில் வந்துநின்றது. சிறைக் கூடத்தைத் திறக்கும்படி பிள்ளையன் உத்தரவிட்டு உட்புகுந்தார். அப்பொழுதும் நாராயண தீக்ஷிதரும் அவருடன் இருந்தவர்களும் குழைக்காதரை நினைந்து கண்ணுங் கண்ணீருமாய் இருந்தனர். தீக்ஷிதர், ''முன்பெல்லாம் எந்த வேளையிலும் எங்கள் துயரத்தை உடனுக்குடன் தீர்த்து நாங்கள் அஞ்சாமற் பாதுகாத்தீரே; இப்போது இதுகாறும் படாத துன்பத்தை நாங்கள் படுகின்றோம். தேவரீர் இரக்கம் கொள்ளாத காரணம் யாதோ!'' என்று கூறி அக்கருத்தை யமைத்து,

> ''அக்கணஞ் சாதெந்த வேளையென் றாலு மளித்தனைநீ
> இக்கணஞ் சால வருந்துமெம் பாலிரங் காததென்னோ
> மைக்கணஞ் சாயன் மடமாதுக் காக வளர்மிதிலை
> முக்கணன் சாப மிறுத்தாய்தென் பேரை முகில்வண்ணனே''

என்று பாடினார்.

அவருடைய நிலையும் அவர்பாடிய செய்யுளும் பிள்ளையனுடைய உள்ளத்தை உருக்கின; 'இவர் தமிழ்ப்புலமையோடு எம்பெருமானிடத்தில் இணையற்ற பக்தியும் உடையவரென்று தோற்றுகின்றது. இத்தகைய பெரியாரும் இவரைச் சேர்ந்த அன்பர்களும் படும் துயரத்தை இதுகாறும் நாம் அறிந்திலமே! இவர்கள் எவ்வளவு நாட்களாக இவ்வாறு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ! நம்முடைய ஆட்சியில் இத்தகைய கொடுமை நடைபெறும்படி நாம் இடங்கொடுத்தது பெரும் பிழையல்லவோ?'' என்று நெஞ்சந் துணுக்குற்றார். தீக்ஷிதரது வாய்மொழியால் அவர்களுடைய வரலாற்றையும் அதிகாரியின் கொடுமையையும் உணர்ந்தார்.

பிள்ளையன் கட்டளையினால் பல வண்டிகள் சிறைவாயி லில் வந்து நின்றன. நாராயண தீக்ஷிதரும் அவருடன் இருந்த வர்களும் அவற்றில் ஏறிக் கொண்டனர். பிள்ளையன் அவர்க ளைத் தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். தக்க உபசாரங்கள் செய்தார்; அவர்கள் கொடுக்கவேண்டிய வரியை நீக்கினார்; தீக்ஷிதருடைய நிலங்களை என்றும் வரியில்லாத இனாம் நிலங்களாகச் செய்துவிட்டார்.

அப்பால், 'இத்தகைய சாதுக்களைச் சிறையிலிட்டு வருத்திய அதிகாரியை நம்முடைய ஆட்சியின்கீழ் வைத்திருந்தால் தேளுக்கு மணியம் கொடுத்தது போலாகும். இன்னும் பல கொடுமைகளைப் புரிந்து நம் தலையிற் பாவ மூட்டையை ஏற்றிவிடுவான்' என்று எண்ணி அவனை வேலையினின்றும் நீக்கிவிட்டார்.

தீக்ஷிதரிடம் அவர் பாடிய செய்யுட்களைப் பிள்ளையன் கேட்டார். அவை தீக்ஷிதருடைய உள்ளக்கருத்தைத் தெளிவாகக் காட்டின. ஒவ்வொரு செய்யுளும் அவர் சிறையிலிருந்தபோது பட்ட வேதனையைக் குறிப்பித்தது. அவற்றைக் கேட்கக் கேட்கப் பிள்ளையனுடைய உள்ளம் மறுகியது. அதுகாறும் 65 பாடல்களைத் தீக்ஷிதர் பாடியிருந்தார். அவர் மனம் வருந்திப் பாடிய பாடல்களைக் கேட்ட பிள்ளையன் அவர் மனமகிழ்ந்து பாடும் செய்யுட்களையும் கேட்டால்தான் தம் மனம் ஆறுதலடையு மென்று உணர்ந்தார். ஆதலின் அவர் தீக்ஷிதரை நோக்கி, "நீங்கள் முதலில் நூறு செய்யுட்கள் பாடுவதாக ஸங்கற்பம் செய்திருக்கிறீர்கள். அந்த ஸங்கற் பத்தை நிறைவேற்ற வேண்டும். குழைக்காதர் அருள் செய்ய வில்லையே யென்று வருந்திப் பாடிய இந்த 65 செய்யுட்களும் கேட்போர் மனத்தை உருக்குகின்றன. அவை உங்களுடைய தமிழ் அறிவையும், குழைக்காதர்பால் உள்ள பேரன்பையும் விளக்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய அபராதத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கின்றன. அப்படியே விட்டுவிட்டால் உங்கள் ஸங்கற்பமும் அரைகுறை யாகவே இருக்கும்; எனக்கு வந்த பழியும் மாறாது. அவற்றை நீக்க மேலே 35 செய்யுட்களையும் பாடி நிறைவேற்ற வேண் டும்" என்று வேண்டிக் கொண்டார்.

அப்படியே தீக்ஷிதர் பாடத் தொடங்கும்போது, பிள்ளையன், "மற்றொரு விண்ணப்பம்: உங்களுடைய நிலையை இதுகா றும் அறிந்துகொள்ளாமல் இருந்த பெரும் பிழையைச் செய்த வன் நான். குழைக்காதரே உங்கள் நிலை எனக்குத் தெரியும் வண்ணம் செய்தார். நான் அதற்குக் காரணமாக நிற்கவில்லை.

இந்த அபசாரத்தைச் செய்ய வொட்டாமல் தடுக்கும் கடமையை மறந்த குற்றந்தான் நான் செய்தேன். அக்குற்றம் நீட்டிக்காமல் செய்தவர் குழைக்காதர். ஆதலால் இனிப் பாடும் பாடல்களில் என்னைப் பற்றிக் கூறுதல் வேண்டாம்'' என்று இரந்தனர். நன்றியறிவு மிக்க தீக்ஷிதருடைய மனத்துக்கு அவ்வேண்டுகோள் துன்பத்தை அளித்தது. ஆயினும் பிள்ளையன் தம் கருத்தை வற்புறுத்தவே, அங்ஙனமே செய்ய உடம்பட்டு மேலே முப்பத்தைந்து செய்யுட்களையும் ஒரு வாழ்த்துப் பாடலையும் பாடிப் பிரபந்தத்தை முடித்தார்.

இங்ஙனம், விடுதலை பெற்ற பின்னர் பாடிய பகுதியில் குழைக்காதரருளால் தாம் துன்பம் நீங்கியதையும், தம்மைத் துன்புறுத்திய கொடியவர் உத்தியோகத்தினின்று விலக்கப்பட்டு ஓடியதையும் பலவிடங்களிற் குறிப்பித்துள்ளார். முதற் பாட்டிலேயே,

> ***"ஆடகச் சேவடி யாலெம தாவி யளித்தனைகார்க்***
> ***கோடகப் பாவிகள்* வாராமற் காத்தனை"*** ***(66)***

என்று பாடினார்.

> ***"இடைந்தோ ரிருப்பிட மில்லாத வஞ்சக னேங்கிமனம்***
> ***உடைந்தோட நோக்கி யெமைக்காத்தனை"***

என்றும்,

> ***"அருங்கொடிக் கோர்கொழு கொம்பென வெம்மை***
> ***யளிப்பதுஞ்செய்***
> ***திருங்கொடி யோனையு மாற்றிவிட்டாய்"***

என்றும் தம்மைத் துன்புறுத்திய அதிகாரி பட்ட தண்டனையைக் குறிக்கின்றார்.

இறுதிப் பாட்டில், ''சொற்சுவை பொருட்சுவை அமையப் பாடும் பயிற்சியில்லே னெனினும் தேவரீர் வியந்து அருள் செய்தீர்'' என்று துதி செய்தார்.

பாமாலை முழுவதையும் ஆராய்ந்தால் நாராயண தீக்ஷிதர் குழைக்காதர்பாற்கொண்ட அன்பும், தென்றிருப்பேரைத் தலத்தில் வைத்த அபிமானமும், நம்மாழ்வார்பாற் கொண்ட பக்தியும், தம்மைச் சிறையிட்ட அதிகாரியின்பால் அடைந்த வெறுப்பும் புலப்படும்.

★ பாவிகளென்றது அதிகாரியையும் அவரைச் சார்ந்தவர்களையும்.

'குழைக்காத, மகரக்குழைக் கொண்டலே, மகரக்குழையாய்' என்று எம்பெருமானை விளித்துப் பாடுகின்றார். கிருஷ்ணாவதாரத்திலும், இராமாவதாரத்திலும் அவருக்கு ஈடுபாடு அதிகமென்று தெரிகின்றது.

''வழுதி வளநாட'' *(96)*

என்று பாண்டி நாட்டையும்,

''எந்தாய் பொருநைத் துறைவா'' *(30)*
''தெண்டிரைநீர், எறியும் பொருநைத் துறைவா'' *(39)*
''எறிநீர்ப் பொருநைத் துறையவன்'' *(64)*
''வேரிமடற், பொதிபாளை மீற நெடுவாளை யானைப் பொருது வரால்
குதிபாய் பொருநைக் கதிபா'' *(71)*

என்று தாம்பிரபர்ணி நதியையும் பாராட்டுகின்றார்.

''நன்னயஞ் சேரும் தமிழ்ப்பேரை'' *(7)*
''பண்ணார் மதுரத் தமிழ்ப்பா வலரும் பழமறையும்
விண்ணாடருந்தொழு மெந்தாய்தென் பேரையில் வித்தகனே'' *(19)*
''நான் மறையின், சங்கமுங் கீதத் தமிழ்ப்
பாடலுஞ் சத்த சாகரம்போற்
பொங்கு தென் பேரை'' *(21)*
''தடங்காத் திகழுந் தமிழ்ப் பேரை'' *(33)*
''தமிழ்ப் பேரை'' *(60, 88)*
''தண்டமிழ்ப் பேரை'' *(76, 83)*

என்று தென்றிருப்பேரையில் வடமொழியும் தென்மொழியும் சிறப்பான நிலையிலிருந்ததைக் குறிப்பிக்கின்றார். தம் இனத்தாராகிய தலவகார சாமவேதிகள் நூற்றெண்மரை,

''நூற்றெண் மருக்கிடர் வந்தாலு மவ்விடர் நோயகற்றி
மாற்றும் பரஞ்சுடர் நீயல்லவோ'' *(3)*

என்றும்,

''நூற்றெண்மர் போற்றும் பிரான்'' *(91)*

என்றும்,

''மறை, பாராய ணம்பயி னூற்றெண்மர் நாளும் பரிந்துதொழும்
நாராயணன்'' *(99)*

என்றும்,

''நூற்றெண்மர் நீடூழி வாழி'' *(வாழ்த்து)*

என்றும் பாராட்டுகின்றார்.

''கடியே றிலஞ்சித் தொடைஞான முத்திரைக் கைத்தலனே''
''நிறைந்ததமிழ்ப் பாயிரமாறன் கவிகேட் டுருகும் பரம'' *(13)*
''குருகூரன் விரித்ததமிழ்ப் பண்ணுக் கிரங்கும் பரமா'' *(46)*
''மாறன் பனுவலியற் சீர்வாழி''

என்பவற்றில் நம்மாழ்வாரையும் அவருடைய அருளிச்செயல்க ளையும் புகழ்கின்றார்.

தம்மைச் சிறையில் வைத்த அதிகாரியை,

''கண்டோ மிலைமுனங் கேட்டோ மிலையவன் கைப்பொருளால்
உண்டோ மிலையிவ் வினைவரக் காரணம் ஒன்றுளதோ'' *(26)*
''உரகதங் கொண்ட கொடியோன்'' *(29)*
''விடஙட வாது கருமஞ்செய் தான்'' *(36)*
''சத்துரு'' *(47)*
''இரும்பான கன்னெஞ்ச வஞ்சகனார்க்கு மிடர்விளைப்போன்'' *(48)*
''ஆலமென் னோருருக் கொண்டான்'' *(51)*
''திம்ப வளக்கனி போற்கசப் பாகிய நீசன்'' *(53)*
''முன்னம் பழகி யறியோ மவனை முகமறியோம்'' *(56)*
''ஆக நகைக்கும் படிதிரிவோன்'' *(57)*
''பொய்யா னிறைந்த கொடியவெம் பாதகன்'' *(58)*
''இகலிட மான புலையன்'' *(59)*
''கலகக் கொடிய புலையன்'' *(61)*
''கைச்ச கடைத்தொழில் கொண்டே திரியுங் கபடன்'' *(62)*
''மரியாதை யறியாத வஞ்சன்'' *(69)*
''வஞ்சகன்'' *(74)*
''இருங் கொடியோன்'' *(92)*
''கழகா ரணத்தின் பயனறி யாத கபடனெம்மைப்
பழகாத வஞ்சன்'' *(96)*

என்று குறிக்கும் பகுதிகளிலிருந்து அவனை அவர் எங்ஙனம் வெறுத்தாரென்பது புலப்படுகின்றது.

தாம் குழைக்காதர் அருளால் விடுதலை பெற்ற செய்தியை ஒரு செய்யுளில்,

"வஞ்ச னதட்டவெமைப்
பொராமர ஊாதிகள் வாராமற் காத்தனை" *(69)*

என்று கூறுகின்றார். இதனால் தமக்கு ஏதேனும் உய்தி கிடையாவிடின் உயிர் விடவும் அவர் துணிந்திருந்தாரென்று தெரிகின்றது.

நாராயண தீக்ஷிதர் சிறையில் இருந்த காலத்தில் உடன் இருந்தவர்கள் பாடிய செய்யுட்களிற் சில வருமாறு:

(வெண்பா)

1. கன்றும் பசுவுங் கதறாமற் காத்துநெடுங்
குன்றைக் கவித்த குழைக்காதா-இன்றுமுதல்
நாளைக்கு ளெங்களுக்கு நன்மையுறக் காத்தருளிவ்
வேளைக் கிரங்குவதே மெய்.

2. இந்தவினை நீக்கி [1]யிரங்கிக் கடைக்கண்பார்
கொந்தவிழுந் தாமக் குழைக்காதா-[2]இந்துமுக
மண்டலத்தாய் நூற்றெண்மர் வாழ்வே மணிமகர
[3]குண்டலத்தா யெங்களையாட் கொண்டு.

3. தென்றிருப்பே ரைப்பதிக்குத் தீங்கொன்றும் வாராமல்
உன்றிருப்பே ரைப்பலகா லோதினேன்-மன்றிருப்பேர்
ஆயிரம் பெற்ற வழகா குழைக்காதா
நீயிரங்கிக் காப்பாய் நிதம்.

4. நெல்லைதனில் வந்த நெடும்பா தகன்விளைத்த
அல்ல றவிர்த்தெம்மை யாண்டருள்வாய்-நல்லோர்கள்
போற்றுந் திருப்பேரைப் புங்கவா வெவ்வினையும்
மாற்றும் படிக்கருள்செய் வாய்.

5. உற்றசம யத்தி லுதவுந் திருப்பேரைக்
கொற்றவா செம்பொற் குழைக்காதா-முற்றுமெமைக்
காத்திரட் சிப்பாய் கலங்காம லெவ்வினையும்
தீர்த்திரட் சிப்பாய் தினம்.

6. நம்பினோந் தென்பேரை நாதகுழைக் காதநின்பொற்
செம்பதுமம் போலுந் திருப்புதத்தை-எம்பெருமான்
எங்கள்பா லோர்தீங்கு மெய்திடா வண்ணமளித்
தங்கணுல கிற்காத் தருள்.

(பிரதி பேதம்.) 1. யிரங்கிக்கண் பாரையா. 2. சந்தரமுக. 3. குண்டலத்தா யாயர்கோவே.

(கட்டளைக்கலித்துறை)

7. தென்பேரை வாழுங் குழைக்காத நின்பொற் றிருவடிக்கீழ்ப்
புன்பே யனைய தமியன்விண் ணப்பமெய்ப் போதந்தந்து
வன்பே யிடர்தவிர்த் தெஞ்ஞான்று மிக்கநல் வாழ்வருளி
உன்பே ரருட்குரித் தாகவைத் தாண்டரு ளுத்தமனே.

நாராயண தீக்ஷிதர் குழைக்காதர் பாமாலையைப் பாடிய செய்தியை ஸ்ரீராமபாவல ரென்பவர் தாம் பாடிய சந்தானப்பத்தில்,

''பாகார்ந்த செந்தமிழ்ப் பாமாலை பாடிய பாவலர்க்கு
போகாத வல்வினை போக்குவித் தாயிந்தப் பூதலத்தில்
வாகார் மகரக் குழையா யடியன் மனமகிழச்
சாகாத சந்ததி தந்தருள் பேரைத் தயாநிதியே''

என்னும் செய்யுளிற் குறித்திருக்கின்றார்.

பாமாலை பாடியபின் நாராயண தீக்ஷிதரும் பிறரும் வடமலையப்பப் பிள்ளையனிடம் விடை பெற்றுக்கொண்டு தென்றிருப்பேரைக்குப் போய் மகரநெடுங்குழைக்காதரைச் சேவித்து இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

நாராயண தீக்ஷிதருடைய இறுதிக்கால நிகழ்ச்சியென்று பின்வரும் செய்தி கர்ணபரம்பரையாக வழங்கி வருகின்றது:

தீக்ஷிதர் நாள்தோறும் காலையில் குழைக்காதரைத் தரிசனம் செய்துவிட்டு அப்படியே ஆழ்வார் திருநகரி சென்று நம்மாழ்வாரையும் தரிசித்து வருவார். அங்குள்ள பட்டாசாரியாருக்குத் தக்க பொருளுதவி செய்து தாம் வருதற்குச் சிறிது நேரமானாலும் காத்திருக்கும்படி சொல்லியிருந்தார். அங்ஙனமே பட்டாசாரியார் செய்துவந்தார். ஒருநாள் பூஜை முதலியன ஆனபிறகு பட்டாசாரியார் தீக்ஷிதர் வரவுக்காகக் காத்திருந்தார். வழக்கம் போல வரும் நேரத்தில் அவர் வரவில்லை. அப்போது அங்கே வந்த ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது தீக்ஷிதர் உள்ளே சென்றதாகத் தெரிந்தது. உடனே பட்டாசாரியர் தம்முடன் பேசிக்கொண்டிருந்தவரிடம், ''உள்ளே தீக்ஷிதர் போயிருக்கிறார். பிரஸாதம் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லி உள்ளே சென்றார். தீக்ஷிதரை அங்கே காணவில்லை. அப்பால்

விசாரித்ததில் அன்றுதான் தீக்ஷிதர் பரமபதமடைந்தா ரென் பதை அறிந்து வியப்படைந்தார். அவர் நம்மாழ்வாரோடு ஐக்கியமாயினர் என்றே கருதி இவ்வற்புதத்தை யாவருக்கும் தெரிவித்தனர்.

பாமாலை எளிய நடையில் பக்திச்சுவை செறிந்ததாகி விளங்குகின்றது. தென்றிருப்பேரை முதலிய இடங்களிலுள் ளோர் இதனைப் பக்தியுடன் பாராயணம் செய்து வருகின்றனர். அங்ஙனம் செய்வதனாற் சில துன்பங்கள் நீங்கி இன்பம் உண்டாவதாகக் கூறுவர். திருப்பதி யாத்திரை, சேதுயாத்திரைக ளில் இதனை நாள்தோறும் பாராயணம் செய்வார்களாம்.

நான் கும்பகோணம் காலேஜில் இருந்தபோது தென்றிருப்பே ரைக் கிராம முன்ஸீப்பின் குமாரராகிய ஸ்ரீநிவாஸையங்கா ரென்பவர் படித்துவந்தார். அவர் மிக்க செல்வர். அவருடைய பரிசாரகராகிய நாராயணையங்கா ரென்பவர் ஒருநாள் வழக்கம் போல் இரண்டாம் வேளை உணவு கொண்டுவந்து அவருக்கா கக் காத்திருந்தார். அப்போது அவர் தம் கையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு மிகவும் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தார். அவ்வளவு கவனத்தோடு அவர் படிப்பதைப் பார்த்து ஏதாவது கதைப்புத்தகமாக இருக்கலாமென்று எண்ணி னேன்; ''என்ன புத்தகம்?'' என்று கேட்டேன். அவர் ''குழைக் காதர் பாமாலை; மிகவும் சிறந்த புத்தகம்; தெய்வீக சக்தியுடை யது'' என்றார். அதிலிருந்து சில பாடல்களைச் சொல்லச் செய்து கேட்டேன். அவர் சொல்லிவிட்டு இந்நூல் உண்டான வரலாற்றையும் கூறினார். அந்த வரலாற்றைக் கேட்கும்போது என் உள்ளம் உருகியது. அக்காலத்திலேயே இப் பாமாலையை ஒருவர் அச்சிட்டிருந்தார். அவ்வச்சுப் பிரதியொன்றை அவர் எனக்கு அளித்தார். அது திருத்தமாக இல்லாமையால் நான் விரும்பியபடியே பிறகு இப்புத்தகத்தின் ஏட்டுப்பிரதிகள் சிலவற்றையும் வருவித்தளித்தார். அவற்றைக்கொண்டு என்னி டம் உள்ள அச்சுப்பிரதியிலே திருத்தம் செய்து கொண்டேன்.

சில வருஷங்களுக்குமுன் இப்பாமாலை சம்பந்தமாக, என் னுடைய அன்பரும் பல தமிழ்ப் பிரபந்தங்களை இயற்றியவ ரும் ஆசுகவியும் வானமாமலைமடம் ஆஸ்தான வித்துவானு

மாகிய தென்திருப்பேரை அபிநவகாளமேகம் ஸ்ரீமத் அனந்தகிருஷ்ணையங்காரவர்களுக்குக் கடிதம் எழுதி விசாரித்தேன். அவர்கள் பல செய்திகளைத் தெரிவித்ததோடு பாமாலையைக் காகிதத்திற் பிரதி பண்ணுவித்தும் அனுப்பினார்கள். நான் முன்பு கேள்வியுற்றிருந்த செய்திகளையும், அவர்கள் அன்பு கூர்ந்து அறிவித்த செய்திகளையும், இந்தப் பிரபந்தத்திற் காணப்படும் குறிப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டு இவ் வரலாறு முதலிய எழுதப் பெற்றன.

இதை ஆராயுங்காலத்தும் பதிப்பிக்கும் காலத்தும் உதவி செய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி.மு. சுப்ரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி.வா. ஜகந்நாதையரும் ஆவர்.

இதனைத் தம் ''கலைமகள்'' பத்திரிகையில் வெளியிடுவித்த ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்களுக்கு என் நன்றியறிவைச் செலுத்துகின்றேன்.

'தியாகராஜ விலாஸம்'
13.5.39

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

உ

பரமபதி துணை

தென் திருப்பேரை

மகரநெடுங் குழைக்காதர் பாமாலை

காப்பு

நம்மாழ்வார்

(கட்டளைக்கலித்துறை)

1. அடியேங்க டுன்ப மகல்வதற் காவந்த நான்மறையின்
முடியே பரவுங் குழைக்காதர் மீது முதுதமிழாற்
படியேழு மோங்கிய பாமாலை யீரைம் பதுமளிப்பான்
கடியே றிலஞ்சித் தொடைஞான முத்திரைக் கைத்தலனே.

பெரிய திருவடிகள்

2. பொன்சிறை நீக்கி விரித்தே பறக்கின்ற புள்ளரசே
என்சிறை நீக்குவித் தாயில்லை யேயிக லாடரவ
வன்சிறை நீக்கினை வானவர்க் காக மகிழ்விநதை
தன்சிறை நீக்கினை யாரா வமுதமுந் தந்தனையே.

நூல்

1. கன்றுக் கிரங்கிய கற்றாவைப் போலக் கருணையுடன்
என்றைக் கிரங்குவ ரோவறி யேனெழு பாருமுய்யக்
குன்றைக் கவிகை யெனத்தரித் தோர்குழைக் காதரைநாம்
சென்றெப் பொழுது தொழுவதும் பாவங்க டீர்வதுமே.

காப்பு. 1. நான்மறையின் முடி - உபநிடதம். குழைக்காதர் - தென் திருப்பேரையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானாகிய மகரநெடுங் குழைக்காதர். (பி-ம்.) 'குழைக்காதர் பேரில்'. படி - பூமி. கடி - நறுமணம். இலஞ்சித் தொடை - மகிழம்பூ மாலை. ஞானமுத்திரைக் கைத்தலன் - நம்மாழ்வார். 2. பொன்சிறை - பொன்னிறமுள்ள சிறை. விநதை - கருடனுக்குத் தாய்.

நூல். 1. கற்றா - கன்றையுடைய பசு. குன்றை - கோவர்த்தன கிரியை. கவிகையென - குடையைப் போல. தரித்தோர் - தாங்கினோர்.

2. எப்போது நின்னை நினைப்போமங் கேவந் தெதிர்முகமாய்
அப்போது நீயும்வந் தஞ்சலென் பாயடி யாருளத்தில்
மெய்ப்போத ஞான விளக்கே கராங்கௌவ வீரிட்டந்தக்
கைப்போத கஞ்சொன்ன மாலேதென் பேரையிற் காகுத்தனே.

3. நூற்றெண் மருக்கிடர் வந்தாலு மவ்விடர் நோயகற்றி
மாற்றும் பரஞ்சுடர் நீயல்ல வோதமிழ் வாணர்தினம்
போற்றுஞ் சுருதிப் பொருளே மதுரம் பொழிந்துநறை
ஊற்றுந் துளவப் புயத்தாய்தென் பேரையி லுத்தமனே.

4. உத்தம னைத்தமிழ்ப் பேரையம் மானையன் புற்றவர்க்கு
நித்த மனத்தந் தவிர்க்குஞ்செஞ் சோதியை நீண்டசுடர்
அத்த மனம்பட வாழிதொட் டானை யனுதினமும்
தத்த மனத்து னினைப்பார்க் கொருதுயர் தானிலையே.

5. எந்தெந்த வேளை யினுமலங் காம லிருசரணம்
தந்தந்த கார வினைதவிர்ப் பாயிந்தத் தாமதமென்
உன்றன் றிருவடிக் காளான வெங்கட் குவகைநல்காய்
கொந்துந்து தாமப் புயனே மகரக் குழைக்கொண்டலே.

6. பூரண சந்த்ர முகமுங்கத் தூரியும் பொற்புயமும்
ஆரணந் தேடுநின் பாதாம் புயமு மபயமென்றே
வாரணங் காத்த கரபுண்ட ரீகமும் வந்துதொழாக்
காரண மேதென் றறியேன்றென் பேரரையிற் காகுத்தனே.

---

2. மெய்ப்போதம் - உண்மையறிவு. கராம் - முதலை. கைப்போதகம் - கஜேந்திரன்.

3. நூற்றெண்மர் - தென்றிருப்பேரையிலுள்ள தலவகார சாமவேதிகளாகிய ஸ்ரீவைஷ்ணவர்கள் நூற்றெண்மர். நறை - தேன். (பி-ம்) 'மதுரம் புகட்டி நறவூற்றுந்.'

4. அனத்தம் - துன்பம். சுடர் - சூரியனை. கண்ணபிரான் பாரத யுத்தத்தில் சக்கரப்படையாற் சூரியனை மறைத்த வரலாற்றை இங்கே குறிப்பித்தார். அனுதினமும் - தினந்தோறும்.

5. மலங்காமல் - மயங்காமல். கொந்து - பூங்கொத்து.

6. கத்தூரி - கத்தூரி திலகம். ஆரணம் - வேதம். வாரணம் - கஜேந்திரன்.

7. அன்னையல் லாமன் மகவுக்கு வேறில்லை யாதுலர்க்குப்
பொன்னையல் லாமற் புகல்வே றிலையிப் புலைதவிர்க்க
நின்னையல் லாமன்மற் றாரையுங் காண்கில னீதியுடன்
நன்னயஞ் சேருந் தமிழ்ப்பேரை வாழ்கின்ற நாரணனே.

8. பொல்லாத வஞ்சனை வாராமற் போக்கினை போக்கினதும்
அல்லாம லெங்கட் கபயமென் றாயடி யேங்கள்வினை
எல்லா மகற்றிநின் சந்நிதிக் கேவர ரட்சிகண்டாய்
நல்லார் தொழுந்தென் றிருப்பேரை வாழ்கின்ற நாரணனே.

9. வஞ்சம் புணர்ந்த கொடுவினை யாவையு மாற்றியெங்கள்
நெஞ்சங் கலங்கி யழியாமற் காத்தரு ணின்னையெந்நாள்
கொஞ்சுங் குழந்தையுங் கூடத் தொழுவது கோவியர்பால்
துஞ்சுந் தயிருண்ட மாலேதென் பேரையிற் றூயவனே.

10. காவா யெனப்பல தேவரை வாழ்த்திக் கவலையுடன்
நாவா யுலர்ந்ததல் லாற்பய னேதெம்மை நாடிவந்த
தாவா வினையைத் தவிர்ப்பா யினியுன் சரணங்கண்டாய்
தேவா தியர்தொழுந் தேவேதென் பேரையிற் சீதரனே.

11. பித்தனைப் போன்மன மேங்காம லிந்தப் பிணியகல
எத்தனை நாட்செல்லு மோவறி யேனிசை தேர்குருகை
முத்தனைப் போற்று மகிழ்மாறன் கூறு முகுந்தமலர்க்
கொத்தலர் பேரைக் கதிபா மகரக் குழைக்கொண்டலே.

12. அடியா ரிடத்தில் வினைகள்வந் தாலு மவையகற்றி
நொடியாகத் தீர்ப்பது நீயல வோமின் னுடங்குவஞ்சிக்
கொடியா ரிடைச்சியர் மத்தா லடிக்கக் குழைந்துநின்ற
வடிவா கருணைக் கடலேதென் பேரையின் மாதவனே.

---

7. மகவுக்குப் புகல் வேறில்லை யென்க. ஆதுலர் - வறிஞர். புலை - இழிந்த சிறை; "நீயிப் புலைதவிர்ப்பாய்" (19) என்பர் பின்னும்.

9. தொழுவது எந்நாளென்க. துஞ்சும் - உறியிலே தொங்கும்.

10. நாவும் வாயும் உலர்ந்ததல்லால். தாவா - கெடாத.

11. குருகை - ஆழ்வார் திருநகரி. முத்தன் - அத்திவ்ய தேசத்தில் எழுந்தருளியுள்ள ஆதிநாதப் பெருமாள். மகிழ்மாறன் - மகிழ்மாலையை அணிந்த நம்மாழ்வார். பேரை - தென்திருப்பேரை.

12. வினைகள் - பாவங்கள்.

13. ஆயிரங் கோடி வினைகள்வந் தாலு மவையகற்றி
நீயிரங் காவிடின் மற்றாரு மில்லை நிறைந்ததமிழ்ப்
பாயிர மாறன் கவிகேட் டுருகும் பரமவிசை
வேயிரங் குங்கனி வாயா தென்பேரையில் வித்தகனே.

14. அவலப் படாப்பழி வாராமற் காத்தடி யேங்கண்மனம்
கவலைப் படாமற் கடாட்சிகண் டாய்கற்ற நாவலரும்
நுவலப் படாவரை மத்தாக நாட்டி நுடங்குதிரைத்
திவலைக் கடலைக் கடைந்தாய்தென் பேரையிற் சீதரனே.

15. உனையா தரிக்கு மடியேங்கண் முன்செய்த வூழ்வினையால்
நினையாமல் வந்த நெடுந்துயர் தீர்த்தரு ணேமிசங்கம்
புனையா ரணப்பொரு ளேபல காலன்பு பூண்டவர்பால்
அனையா கியகுழைக் காதா வினியு னடைக்கலமே.

16. நெஞ்சினு நீயென் னினைவினு நீநெடும் பூதமெனும்
அஞ்சினு நீகலை யாறினு நீயறி வோடிருகண்
துஞ்சினு நீயன்றி வேறறி யேனித் துயர்தவிர்ப்பாய்
மஞ்சினு மேனி யழகா கருணை வரோதயனே.

17. வண்ணங் கரியன் கனிவாய் முகுந்தன் மலர்ப்பதமும்
கண்ணுங் கரமுங் கமலமொப் பான்கஞ்ச மாமயிலை
நண்ணுங் கருணைத் திருப்பேரை மாதவ னாமஞ்சொன்னால்
எண்ணுங் கவலையுந் துன்பமுந் தீரு மெமக்கினியே.

18. நிலையாக் கயத்துட் படிந்தவர் போலெங்க ணெஞ்சழிந்து
மலையாம லித்துயர் மாற்றுகண் டாய்மலர்ச் சேவடியாற்
சிலையா ரணங்கி னுருவாக்குந் தெய்வ சிகாமணியே
அலையாழி சூழுந் தமிழ்ப்பேரை வாழச்சு தானந்தனே.

---

13. ஆரும் இல்லை - இரங்குவார் யாரும் இல்லை. மாறன் கவி - திருவாய்மொழி முதலியன. இசைவேய் இரங்கும் - இசையை வெளியிடும் புல்லாங்குழல் ஒலிப்பதற்கு இடமாகும்.

14. அவலப்படல் - துன்புறல்.

15. ஆதரிக்கும் - அன்பு செய்யும். நேமி - சக்கராயுதம்.

16. கலை ஆறு - ஆறு சாத்திரங்கள். மஞ்சு - மேகம்.

17. கஞ்சமாமயிலை - திருமகளை

18. கயம் - குளம். இத்துயரென்றது சிறையில் வாடுந் துயரத்தை. சிலை கல்லை. அணங்கின் உரு - அகலிகையின் உருவம்.

19. எண்ணாத வெண்ணி யிடைந்திடைந் தேங்கி யிருந்துமனம்
புண்ணாய் மெலிந்து புலம்பாம லீயிப் புலைதவிர்ப்பாய்
பண்ணார் மதுரத் தமிழ்ப்பா வலரும் பழமறையும்
விண்ணாட ருந்தொழு மெந்தாய்தென் பேரையில் வித்தகனே.

20. இழைக்குங் கொடிய வினையா வையுமாற்றி யெங்களுயிர்
பிழைக்கும் படிக்கருள் செய்தனை யேசுவை பெற்றபசுங்
கழைக்கண்டு செஞ்சொல் வசுதேவி கண்டிரு கண்களிக்கும்
மழைக்கொண்ட லேயண்டர் வாழ்வேதென்பேரை மணிவண்ணனே.

21. திங்களொன் றாகச் சிறையிருந் தோமிச் சிறையகற்றி
எங்கடம் பாலிரங் காததென் னோவிசை நான்மறையின்
சங்கமுங் கீதத் தமிழ்ப்பாட லுஞ்சத்த சாகரம்போற்
பொங்குதென் பேரைப் புனிதா கருணைப் புராதனனே.

22. இன்றாகு நாளைக்கு னன்றாகு மென்றிங் கிருப்பதல்லால்
ஒன்றா கிலும்வழி காண்கில மேயுன் னுதவியுண்டேல்
பொன்றாம னாங்கள் பிழைப்போங் கருணை புரிந்தளிப்பாய்
அன்றா ரணந்தொழ நின்றாய்தென் பேரைக் கதிபதியே.

23. வள்வார் முரசதிர் கோமான் வடமலை யப்பன்முன்னே
வின்வாரு மில்லை யினியெங்கள் காரியம் வெண்டயிர்பாற்
கள்வா வருட்கடைக் கண்பார் கருணைக் களிறழைத்த
புள்வாக னாவன்பர் வாழ்வேதென் பேரைப் புராதனனே.

24. பறவைக் கரசனைக் கண்டோடும் பாம்பெனப் பாதகமாம்
உறவைக் கரங்கொண் டொழிப்பதென் றோபவத் தூடமுந்தித்

---

19. இடைந்து - மெலிந்து. இப்புலை யென்றது இழிந்த சிறையை.

20. வசுதேவி - தேவகி.

21. திங்கள் ஒன்றாக - ஒரு மாதமாக. நான்மறையின் சங்கம் - நான்கு வேதங்களின் தொகுதி, சத்தசாகரம் - ஏழு கடல்.

22. இன்று ஆகும் - இன்று நன்மை உண்டாகும். பொன்றாமல் - இறவாமல்.

23. வள் வார் - வலிய தோலையுடைய. வடமலையப்பன் - பதினேழாம் நூற்றாண்டில் நாயக்க அரசரது பிரதிநிதியாகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த வடமலையப்பப்பிள்ளையன். கருணையையு டைய புள்வாகனா, களிறழைத்த புள்வாகனாவென்று கூட்டுக; புள் - கருடன். (பி-ம்) 'கரிணிக் கடாவழைத்த.'

24. பறவைக்கரசன் - கருடன். செம்பொற்றுகில் - பீதாம்பரம்.

துறவைக் கருது மவர்க்கருள் பேரையிற் றூயவமா
சறவைத்த செம்பொற் றுகிலுடை யாயச்சு தானந்தனே.

25. வீயாம ணாங்கண் மெலியாம லிந்த வினையகற்றி
நாயா கியவெங்க ளைக்காத் தருணவ நீதமுண்ட
வாயா வொருபத்து மாதஞ் சுமந்து வருந்திப்பெற்ற
தாயா கியகுழைக் காதாதென் பேரைத் தயாநிதியே.

26. கண்டோ மிலைமுனங் கேட்டோ மிலையவன் கைப்பொருளால்
உண்டோ மிலையிவ் வினைவரக் காரண மொன்றுளதோ
தண்டோடு சக்கரஞ் சங்கேந்து மும்பர் தலைவநெடு
விண்டோய் பொழிற்றடஞ் சூழ்பேரை வந்தருள் வித்தகனே.

27. நாவையண் ணாந்தசைத் துன்றிருநாம நவிலமற்றோர்
தேவையெண் ணோமித் துயர்தீர்த் திடாத திருவுளமென்
கோவைவண் ணாகமுடிமே லொருபதங் குந்திநின்ற
பூவைவண் ணாவிண் ணவர்போற்றும் பேரைப் புராதனனே.

28. ஒருநாளு நின்னை வணங்காதி ரோங்கண் ணுறங்கினுநின்
திருநாம மன்றிமற் றொன்றறி யோமிந்தத் தீங்ககற்றாய்
பொருநா கணையொன்றி வேரோடு மைம்மலை போற்பொலிந்த
கருநாயி றேயன்பர் கண்ணேதென் பேரையிற் காகுத்தனே.

29. உரகதங் கொண்ட கொடியோனை நீக்கி யுறுதுணையாய்ப்
பரகதி யாகவந் தஞ்சலென் பாய்பவ ளக்கதிர்பூங்
குரகத மாமுகம் போற்கவி பேரைக் குழக செம்பொன்
மரகத மேனி யழகா கருணை வரோதயனே.

---

25. வீயாமல் - அழிந்து போகாமல், நவநீதம் - வெண்ணெய்
26. அவனென்றது தம்மைச் சிறையிட்ட அதிகாரியை
27. நவில்வதற்கு உன்னையன்றி மற்றொரு தெய்வத்தை எண்ணோம். கோவை வன் நாகம் முடிமேல் - கண் கூரிய வ்ளவிய நாகமாகிய காளிங்கனது முடிமேல்.
28. நாகணை ஒன்றி - நாகசயனத்திலே பொருந்தி. வேர் ஓடிய நீலமலை போல விளங்கிய. நாகணைக்கு வேர் உவமை.
29. உர கதம் - வலிய கோபம். கொடியோனென்றது அதிகாரியை, பவளக்கதிர் - பவளநிறமுடைய செந்நெற்கதிர், குரகதம் - குதிரை. நெற்கதிர்க்குக் குதிரைமுகம் உவமை. கவி-கவிக்கும்; வளைந்துநிற்கும்.

30. சிந்தா குலந்தவிர்த் தெங்களை யூரிற் றிரும்பவழைத்
துன்றா மரைச்சர ணந்தொழ வேயரு ளும்பர்தொழும்
எந்தாய் பொருநைத் துறைவா வரிவண் டிசைபயிற்றும்
கொந்தார் துளவப் புயத்தாய் மகரக் குழைக்கொண்டலே.

31. உய்வண்ண மெங்கட் குதவியஞ் சேலென்று றுதுணையாய்
எவ்வண்ண மித்துய ரந்தவிர்ப் பாய்கதி ரீன்றுபுனற்
செய்வண்ணப் பண்ணை வளமே செறிந்ததென் பேரைவளர்
மைவண்ண மேனி யழகா கருணை வரோதயனே.

32. பலகா லிருந்து மெலிந்தூச லாடும் பழவினையை
விலகா திருந்த திருவுள மேதுகொல் விண்ணவர்க்கா
உலகா ளிலங்கையர் கோமா னுயிர்க்கும்வண் டோதரிக்கும்
குலகால னாகிய கோவே மகரக் குழைக்கொண்டலே.

33. அடங்காத் தனம்புதைத் தார்போன் மெலிந்தடி யேங்களிந்த
மடங்காத் திருந்து சலியாம லித்துயர் மாற்றுகண்டாய்
தடங்காத் திகழுந் தமிழ்ப்பேரை வாழுந் தயாபரபொற்
குடங்காத்து வெண்டயிருண்டாய் மகரக் குழைக்கொண்டலே.

34. பங்கே ருகத்தை யிரவி புரந்திடும் பான்மையைப்போற்
செங்கேழ்க் குமுதத்தைத் திங்கள் புரக்குஞ் செயலினைப்போற்
கொங்கே கமழு மிருசர ணாம்புயங் கொண்டுதினம்
எங்கே யிருந்துங் குழைக்காத ரெம்மை யிரட்சிப்பரே.

35. எங்களை யுந்தொண்ட ரென்றே யிரங்கி யினியெங்கள்பா
வங்களை யும்படிக் கேயருள் வாய்கனி வாயமுதம்

---

30. சிந்தாகுலம் - மனக்கவலை. சரணம் - திருவடி, பொருநை - தாமிரபர்ணி, வரி - கோடு. கொந்து - கொத்து.

31. கதிரை ஈன்று வளம்செறிந்த என்று கூட்டுக. புனலையுடைய செய்யாகிய பண்ணை; செய் - வயல். மைவண்ணம் - மேகநிறம்.

32. விலகாது - விலக்காமல்; தொகுத்தல் விகாரம். இலங்கையர் கோமான் - இராவணன்.

33. தனம் - செல்வத்தை. இந்த மடமென்றது சிறைக்கூடத்தை, சலியாமல் - நடுங்காமல், தடமும் காவும் திகழும்; உம்மைத்தொகை.

34. பங்கேருகம் - தாமரை. இரவி-சூரியன், செங்கேழ் - செந்நிறத்தையுடைய. (பி-ம்) 'பங்கே ருகத்துக் கிரவியைப் போலவும் பான்மதியாற், செங்கேழ்க் குமுத மலர்வது போலவுந் தீங்கற்றி.' கொங்கு - நறுமணம்.

35. எங்களையும் : உம்மை, இழிவுசிறப்பு. பாவம் களையும்.

பொங்களை யுண்டு தெவிட்டியன் பாற்பரி பூரணமாம்
திங்களை வென்ற முகத்தாய்தென் பேரையிற் சீதரனே.

36. விடனட வாது கருமஞ்செய் தானை விலக்கினியெம்
முடலடு மாதுயர் தீர்த்தெமை யாண்டரு ளுண்மையிது
திடனட மாத ருடனே பதாம்புயஞ் சேப்பநின்று
குடநட மாடு முகுந்தா மகரக் குழைக்கொண்டலே.

37. இரவும் பகலு மெலியாம வெங்கட் கிரங்கியுனைப்
பரவும் படிக்கிவ் வினைதீர்த் தருணொடும் பாரதப்போர்
விரவுங் கொடுந்துயர் நூற்றுவர் மாள விசயனுக்கா
அரவுந்து தேர்முன மூர்ந்தாய்தென் பேரையி லச்சுதனே.

38. பாற்கொண்ட நீரன்னம் வேறாக்கு முன்னைப் பரவுமெங்கள்
மேற்கொண்ட வல்வினை வேறாக்க நீயன்றி வேறுமுண்டோ
சூற்கொண்ட செந்நெல் வயற்பேரை யந்தணர் சூழ்ந்துதொழும்
கார்க்கொண்ட லேகுழைக்காதா கருணைக் கருங்கடலே.

39. அறிவு மறமுந் தரும்பல பூதமு மாரணத்தின்
பிறிவும் பிறிதொரு தெய்வமு நீயிப் பெருவினையாற்
செறியுந் தமியர் துயர்தீர்த் திடாததென் றெண்டிரைநீர்
எறியும் பொருநைத் துறைவாதென் பேரைக் கிறையவனே.

40. நெருங்கடர் தீவினை நீக்கியுன்னாம நினைப்பதற்குத்
தருங்கட னெங்களைக் காப்பதன் றோதளர்ந் தேமெலிந்த
மருங்கட வீங்கும் படாமுலைப் பூமட மான்றமுவும்
கருங்கட லேகுழைக் காதாதென் பேரையிற் காகுத்தனே.

---

36. விடல் நடவாது - எம்மை விட்டுவிடுதல் நிகழாமல். விலக்கு - விலக்குவாயாக. (பி.ம்) 'விடநடமாது' 'எம்முடனடமா.' திடன் நடமா தர் - வலிமையுடைய நடம்புரியும் கோவியர், சேப்ப - சிவப்பு. குடநடம் - கண்ணன் ஆடிய குடக்கூத்து.

37. விசயன் - அருச்சுனன், அரவு உந்து தேர்முனம் - பாம்புக் கொடியைப் பொருந்துகின்ற துரியோதனன் தேருக்கு முன். ஊர்ந்தாய் - அருச்சுனன் தேரை ஊர்ந்தவனே.

38. பாற்கொண்ட நீர் - பாலிலே கொண்ட நீரை, கார்க்கொண்டல் நீருண்ட கரிய மேகம்.

39. (பி-ம்) 'அறிவு மறிவுந் தரும்'. ஆரணம் - வேதம். தமியர் துணையின்றித் தனியே இருப்போர்.

40. நெருங்கு தீவினை, அடர் தீவினையென்க. மருங்கு அட-இடையை மெலிவிக்கும் பொருட்டு, பூமட மான் - திருமகள்.

41. செழுந்தா மரையிலைத் தண்ணீ ரெனநின்று தீவினையால்
அழுந்தாம னாங்கண் மலங்காமற் காத்தரு ளாரணத்தின்
கொழுந்தாதி மூலமென் றேதெளிந் தோதிய கொண்டல்வண்ணா
கழுந்தார் சிலைக்கை யரசேதென் பேரையிற் காகுத்தனே.

42. பெய்யுங் கனமழை கண்டபைங் கூழெனப் பேருதவி
செய்யுங் கடவுளர் வேறிலை காணிந்தத் தீங்ககற்றி
உய்யும் படிக்கெங் களைக்காத் தருணற வூற்றிருந்து
கொய்யுந் துளவப் புயத்தாய் மகரக் குழைக்கொண்டலே.

43. பஞ்சின்மென் சீறடிப் பாண்டவர் பாவை பதைபதையா
தஞ்சலென் றேயன் றவண்மானங் காத்தனை யப்படியிவ்
வஞ்சகந் தன்னையும் தீர்த்தருள் வாய்கர வால்வருந்தும்
குஞ்சரங் காத்த முகிலே மகரக் குழைக்கொண்டலே.

44. மறுகாம னாங்கண் மனஞ்சலி யாமலிவ் வஞ்சகர்வந்
திறுகாம லெங்களைக் காத்தருள் வாய்துண ரீன்றமணம்
பெறுகாவில் வாசச் செழுந்தேற லுண்டிளம் பேட்டுவரி
அறுகால் வரிவண் டிசைபாடும் பேரையி லச்சுதனே.

45. காக்குந் தொழிலுனக் கல்லாது வேறு கடவுளரை
நாக்கொண்டு சொல்லத் தகுவதன் றேநணு காதுவினை
நீக்கும் படிக்கருட் கண்பார்த் திரட்சி நிறைந்தபுனல்
தேக்கும் பொழிற்றென் றிருப்பேரை வாழும் செழுஞ்சுடரே.

46. கண்ணுக் கிடுக்கண் வரும்போ திமைவந்து காப்பதுபோல்
எண்ணுக்கு ணீங்கு துயர்தவிர்த் தேயெங்க ளுக்கருள்வாய்
விண்ணுக்கு ளோங்கும் பொழிற்குரு கூரன் விரித்ததமிழ்ப்
பண்ணுக் கிரங்கும் பரமாதென் பேரைப் பழம்பொருளே.

---

41. மலங்காமல் - மயங்காமல், கழுந்து - வில்லின் நுனி.
42. கனமழை - மிக்க மழை. பைங்கூழ் - பயிர், நறவு - தேன்.
43. பாண்டவர் பாவை - திரௌபதி. சீறடிப்பாவை. கரவு - முதலை
குஞ்சரம் - கஜேந்திரன்.
44. மறுகாமல் - வருந்தாமல். துணர் பூங்கொத்து, கா-சோலை தேறல்
- தேன். வரி - கோடு, பாட்டு.
45. (பி-ம்.) 'தகுவதன்றோ'. நணுகாது - நெருங்காமல்.
46. குருகூரன் - நம்மாழ்வார்.

47. சத்துரு வைத்தள்ளி யெங்களைக் காத்துத் தயவுபுரிந்
தித்துரு வத்தையு மாற்றுகண்டா யிலங் காபுரியோன்
பத்துரு வங்கொண்ட சென்னிக டோறும் பதித்தமுடிக்
கொத்துரு வக்கணை தொட்டாய் மகரக் குழைக்கொண்டலே.

48. இரும்பான கன்னெஞ்ச வஞ்சக னார்க்கு மிடர்விளைப்போன்
திரும்பாம னீக்கி யெமைக்காத் தருணறை தேங்குமுகை
அரும்பாரு மென்மல ராராமந் தோறு மமுதம்பொழி
கரும்பாருஞ் செந்நெல் வயற்பேரை வாழ்கரு ணாநிதியே.

49. முன்னிற் புரிந்த பெருவினை யான்முற்று மேமலங்கி
இன்னற் படாம லெமைக்காத் தருளிறை தீர்த்தருள்பூங்
கன்னற் றடமுங் கமுகா டவியுங் கதிர்ப்பவளச்
செந்நெற் பழனமுஞ் சூழ்பேரைத் தெய்வ சிகாமணியே.

50. தீதாம் பரத்தர்செய் தீவினை யாவையுந் தீர்த்தளிக்கும்
மாதாம் பரத்துவ னீயல்ல வோமறை யோர்பரவும்
வேதாம் பரத்தி னடுவே யரவின் விழிதுயின்ற
பீதாம் பரத்தெம் பெருமான்றென் பேரையிற் பேரொளியே.

51. ஆலமென் னோருருக் கொண்டானை நீக்கி யகற்றவிது
காலமன் றோவெங் களைக்காத் தருளக் கடனிலையோ
ஞாலமென் றோகையும் பூமாது மேவிய நாததும்பி
மூலமென் றோதிய மாலே நிகரின் முகில்வண்ணனே.

52. மெய்கொண்ட பொய்யென வித்துயர் மாற்றி விலக்கமுற்றும்
கைகண்ட தெய்வ முனையன்றி வேறிலை 'கான்றவிடப்
பைகொண்ட நாக முடிமேற் சரணம் பதித்துநடம்
செய்கண் டகர்குல காலாதென் பேரையிற் சீதரனே.

---

47. துருவம் - கொடுமை. இலங்காபுரியோன் - இராவணன்.
48. ஆரமம் - சோலை.
49. இறை - வரி. கன்னல் - கரும்பு.
50. பரத்தர் - தூர்த்தர். (சிலப்) மாது ஆம் பரத்துவன் - தாயாகிய மேலானவன், வேதாம்பரம் - வேதமாகிய கடல். (பி-ம்.) 'யறிவின்'.
51. ஆலம் - விடம். ஞாலமென்றோகை - பூமிதேவி. தும்பி - யானை.
52. கான்ற - உமிழ்ந்த. நாகம் - காளிங்கன்.

53. முத்தித் தபோதனர்க் குங்கலை வேத முதல்வருக்கும்
சித்தித்த நின்பதஞ் சேவிப்ப தென்றுகொ றேவகிமுன்
தத்தித்த தித்தி யெனநடித் தேயிடைத் தாயர்முனம்
மத்தித்த வெண்ணெய்க் குகந்தாய்தென் பேரை மணிவண்ணனே.

54. நிம்ப வளக்கனி போறகசப் பாகிய நீசனுளம்
வெம்ப வளத்த வினையணு காமல் விலக்கிவிடாய்
கும்ப வளத்தயி ருங்குடப் பாலும் குனித்தருந்தும்
செம்ப வளத்தெம் பெருமான்றென் பேரையிற் சீதரனே.

55. ஊழ்வே தனைசெய்ய வாராதுன் னாம முரைத்தவர்க்குத்
தாழ்வேது மில்லை மிகுநன்மை யேவரும் சஞ்சரிகம்
சூழ்வேரி தங்கும் துழாய்ப்புய லேயெங்கள் துன்பகற்றும்
வாழ்வே மரகத வண்ணாதென் பேரையின் மாதவனே.

56. முன்னம் பழகி யறியோ மவனை முகமறியோம்
இன்னம் பழவினை வாராமற் காத்தரு ளேற்றசெங்கால்
அன்னம் பழன வயறோறுந் துஞ்சு மடர்ந்தபசும்
தென்னம் பழஞ்சொரி யுந்திருப் பேரையிற் சீதரனே.

57. ஆக நகைக்கும் படிதிரி வோன்கடந் தப்புறமாய்ப்
போக நகத்திற் புகுந்தோட வேயருள் போர்க்களத்தில்
மாக நகப்பெயர் கொண்டானை மார்வம் வகிர்ந்தசெழும்
கோக நகச்செங்கை யானே மகரக் குழைக்கொண்டலே.

58. பொய்யா னிறைந்த கொடியவெம் பாதகன் பொய்யும்வம்பும்
செய்யாம லெங்களைக் காத்தருள் வாய்செழுந் தாரரசர்
மொய்யாக வந்தனிற் பாண்டவர்க் காக முழங்குசங்கக்
கையா கருமுகில் மொய்யாதென் பேரையிற் காகுத்தனே.

---

53. சித்தித்த - கிடைத்த. தேவகி - கண்ணனைப் பெற்ற தாய். இடைத்தாயர் - யசோதை.

54. நிம்ப வளக்கனி - வேப்பம்பழம், வெம்ப - வெம்பும்படி, வளத்த வினை - மிக்கவினை, கும்ப வளத்தயிர் - குடத்திலுள்ள வளப்பத்தையு டைய தயிர், செம்பவளமென்றது திருவாயை.

55. சஞ்சரிகம் - வண்டு. வேரி - தேன்.

56. துஞ்சும் - தூங்கும். தென்னம்பழம் - தேங்காய்.

57. திரிவோனென்றது அதிகாரியை, நகம் - மலை. (பி-ம்) 'அடு போர்க் களத்தில்'. கநகப் பெயர்கொண்டோன் - இரணியன், கோகநகம் - தாமரை.

58. பி-ம்.) 'பொய்யாய்.' ஆகவம் - போர்க்களம். (பி-ம்.) 'மெய்யாக', 'விளங்குசங்கக்'.

59. இகலிட மான புலையனை மாற்றினி யெங்களுக்கோர்
புகலிட நீயன்றி வேறுமுண் டோபுகல் கற்பமெலாம்
பகலிடமான சதுமுகத் தேவொடு பண்டொருநாள்
அகலிட முண்ட பிரானேதென் பேரைக் கதிபதியே.

60. கையக நெல்லிக் கனிபோ லெமைத்தினங் காத்தளிக்கும்
துய்யகண் ணன்செழுங் காயா மலர்வண்ணன் சுக்கிரனார்
செய்யகண் ணைத்துரும் பாலே கிளறிச் சிறுகுறளாய்
வையக மன்றளந் தான்றமிழ்ப் பேரையின் மாதவனே.

61. கலகக் கொடிய புலையனெம் பாற்செய்த காரியத்தை
விலகக் கடனுனக் கல்லாது வேறிலை வேலைசுற்றும்
உலகத் தனிமுத லென்றறி யாம லுபாயம் செய்த
அலகைத் துணைமுலை யுண்டாய்தென் பேரையி லச்சுதனே.

62. கைச்சக டைத்தொழில் கொண்டே திரியுங் கபடன் செய்த
இச்சக டத்தையு மாற்றி விடாயிடை மாதருறி
வைச்ச கடத்தயி ருண்டே தவழ்ந்தன்று வஞ்சன்விட்ட
பொய்ச்சக டத்தை யுதைத்தாய்தென் பேரையிற் புண்ணியனே.

63. புண்ணிய நந்தகு மாராமுன் னாட்செய்த புன்மையினார்
பண்ணிய நந்தம் வினைதவிர்ப் பாய்பல காலுமுளம்
கண்ணி யனந்தன் முடிமே னடிக்கும் கருணைமுகில்
எண்ணி யனந்த மறைதேடும் பேரைக் கிறையவனே.

64. இறையவ னெம்பெரு மானெடு மாலெறி நீர்ப்பொருநைத்
துறையவ னேழை யடியார் சகாயன் சுடரிரவி
மறைய வனந்திகழ் நேமிதொட் டானென் மனக்கருத்தில்
உறைய வனஞ்சுடும் தீப்போலப் பாதகக மோடிடுமே.

---

59. இகல் இடமான - பகைக்கு இடமான. புகலிடம் - அடைக்கலத் தானம், சதுமுகத் தே - பிரமதேவன். தேவொடு அகலிடத்தை உண்ட.
60. குறள் - வாமனாவதாரம். சிறுகுறளாய்க் கிளறி.
61. (பி-ம்) 'காரணத்தை'. விலக - விலக்க. வேலை - கடல். அலகை யென்றது பூதனையை.
62. கைச்ச - யாவரும் வெறுத்த. சகடம் - சண்டை; திசைச் சொல். உம்: எச்சவும்மை, உறி வைச்ச கடத்தயிர் - உறியிலே வைத்த குடத்திலே உள்ள தயிரை. சகடம் - சகடாசுரன்.
63. கண்ணி - நினைந்து.
64. வனம் திகழ் நேமி - அழகு விளங்கிய சக்கராயுதம். வனம் சுடும் - காட்டை யெரிக்கும்.

65. அக்கணஞ் சாதெந்த வேளையென் றாலு மளித்தனைநீ
இக்கணஞ் சால வருந்துமெம் பாலிரங் காததென்னோ
மைக்கணஞ் சாயன் மடமாதுக் காக வளர்மிதிலை
முக்கணன் சாப மிறுத்தாய்தென் பேரை முகில்வண்ணனே.

66. ஆடகச் சேவடி யாலிலம தாவி யளித்தனைகார்க்
கோடகப் பாவிகள் வாராமற் காத்தனை கோசலநன்
னாடகத் தோர்சிலை தாங்கிவெங் கூற்றை நகைக்குமந்தத்
தாடகைக் கோர்கணை தொட்டாய்தென் பேரைத் தயாநிதியே.

67. பரனே பராபர னேபதி யேபதி கொண்டசரா
சரனே நெடும்பர தத்துவ னேசமர் வேட்டெழுந்த
கரனே முதற்பதி னாலாயி ரங்கண் டகரைவெல்லும்
உரனே நிகர் முகில் வண்ணாவிந் நாள்வந் துதவினையே.

68. காலிக் கொருவரை யேந்தினை நெஞ்சங் கலங்குமெங்கள்
மேலிக் கொடுவினை வாராமற் காத்தனை மேன்மைதரும்
பாலுக் கினிய மொழியாளைத் தேடிப் பகையையெண்ணா
வாலிக் கொருகணை தொட்டாய்தென் பேரை மணிவண்ணனே.

69. அராமரி யாதை யறியாத வஞ்ச னதட்டவெமைப்
பொராமர னாதிகள் வாராமற் காத்தனை பூதலத்தில்

---

65. அக்கண் - அந்தக்கணத்தில், மைக்கண்ணையும் அழகிய சாயலையும் உடைய மடமாது; சீதை. முக்கணன் சாபம் - சிவபிரானது வில்; 77-ஆம் செய்யுளைப் பார்க்க.

66. ஆடகம் - பொன். கார்க்கோடகப் பாவிகள் - கார்க்கோடக னென்னும் தீய பாம்பைப் போலக் கொடியவர்கள். கோசல நன்னாடு அகத்து - கோசல நாட்டில். ஓர் சிலை தாங்கிக் கணைதொட்டாய்.

67. பதியே - தலைவனே. சராசரன் - சராசரங்களையுடையவன். சமர்போரை கண்டகர் - அரக்கர்கள். உரனே - வலிமையையுடையவனே. நிகர்-ஒளி.

68. காலிக்கு - பசுக்களைப் பாதுகாக்கும் பொருட்டு. ஒரு வரை - கோவர்த்தனமலை. பாலுக்கு இனிய - பாலைக்காட்டிலும் இனிமையை யுடைய. மொழியாள்: சீதை.

69. அரா - பாம்பு போன்றவன். (பி-ம்.) 'மரியாதி' அதட்டி யெமைப்' பொரா - பொருது.

இராமா வெனும்படிக் கேநீ யொருகணை யேவிநெடு
மராமர மேழுந் துளைத்தாய்தென் பேரையின் மாதவனே.

70. மாதவ னேகரு ணாகர னேயென் மனவிருட்கோர்
ஆதவ னேகரு மாணிக்க மேமல ராசனத்திற்
போதவனேக மெனவே பரவிப் புகழ்ந் தகுழைக்
காத வநேகம் பிழைசெய்த வெங்களைக் காத்தருளே.

71. அதிபாவஞ் செய்து பிறந்தாலு மப்பொழு தஞ்சலென்னல்
விதிபார மன்றுனக் கெங்களைக் காப்பது வேரிமடற்
பொதிபாளை மீறி நெடுவாளை யாளைப் பொருதுவரால்
குதிபாய் பொருநைக் கதிபா மகரக் குழைக்கொண்டலே.

72. மகரக் குழையு முககாந்தி யும்மணி மார்பமும் பொற்
சிகரக் குழையும் புயபூ தரமுநற் சேவடியும்
பகரக் குழையுந் திருநாம முந்நெடும் பாதகநோய்
தகரக் குழையும் படியுரை யீருயிர் தாங்குதற்கே.

73. ஒருரு வாயிரண் டாய்மூவ ராகி யுபநிடதப்
பேருரு நான்கைம் புலனா யறுசுவைப் பேதமதாய்ப்
பாருரு வேழெட் டெழுத்தாய்ப் பகரும் பிரணவமாய்க்
காருரு வாங்குழைக் காதருண் டேயெமைக் காப்பதற்கே.

74. இடைந்தோ ரிருப்பிட மில்லாத வஞ்சக னேங்கிமனம்
உடைந்தோட நோக்கி யெமைக்காத் தனையுயர் வீடணனொந்

---

70. கருணாகரனென்பது இராமபிரான் பெயர்களுள் ஒன்று. ஆதவன் - சூரியன். போதவன்; பிரமதேவன்; இடுகுறிப் பெயர் மாத்திரையாய் நின்றது.

71. அதிபாவம் - மிக்க பாவம். விதி உனக்குக் கடமை, எங்களைக் காப்பது உனக்குப் பாரமன்று. வேரி-தேன். வாளை மீற, பொருநை - தாமிரபரணி.

72. பொற்சிகரக் குழையும் - பொன் முடியிலுள்ள தளிராகிய திருத்துழாயும், குழையும் - மனம் உருகும். குழையும்படி - அவர் மனம் இளகும்படி.

73. ஒருருவாய் - ஒரே கடவுளாகி. இரண்டாய் - திருமால், திருமகள் என்னும் இருவேறு வடிவினராகி. மூவராகி - மும்மூர்த்தியாகி; உபநிஷதப் பேருரு நான்கு - நான்கு வேத அந்தத்திலும் உரைக்கப் படும் பொருள்; பேருரு நான்கென்றது நால்வகை வியூகவடிவத்தை யெனலுமாம். பார் உருஏழ் - ஏழுலகத்தின் உருவம். எட்டெழுத்து - அஷ்டாட்சரம்.

74. இடைந்து - மெலிந்து. சுரும்பர் - வண்டு. ஓகை - உவகை.

தடைந்தே னெனவன் றரசளித் தாயறு காற்சுரும்பர்
குடைந்தோகை கூரு மலர்ப்பொழிற் பேரையிற் கோவிந்தனே.

75. கோவிந்த னாயர் குலத்துதித் தோன்செழுங் கொவ்வைச் செவ்வாய்
மாவிந்தை நாயகன் பூமாது கேள்வன் பொன் வானவர்தம்
காவிந்த நானிலத் தாக்கிய பின்னை கணவன் பொற்றாள்
மேவிந்த நாளெண்ணு நெஞ்சேதென் பேரை விமலனையே.

76. விண்டலத் தாபத ரும்மிமை யோருநல் வேதியரும்
பண்டலத் தால்வருந் தாதவர்க் காகப் பகைதவிர்த்தாய்
மண்டலத் தாதவன் போற்கதிர் வீசு மணிமகர
குண்டலத் தாய்தண் டமிழ்ப்பேரை யெங்கள் குலதெய்வமே.

77. புராதனன் மாயன் புருடோத் தமன்பரி பூரணன்வெவ்
விராதனை மாய வதை செய்த காரணன் விண்ணவர்கோன்
சராதன மாய மெனவே யிறுத்தவன் றன்றுணையாம்.
கிராதனை மாலுமி கொண்டான்றென் பேரையிற் கேசவனே.

78. வலையுற் றினம்பிரி யுங்கலை போல மறுகிமனம்
அலைவுற்று நைந்து மெலியாமற் காத்தனை யம்புவிக்கே
நிலையுற்ற தெண்டிரை முந்நீரைச் சீறு நெடும்பகழிச்
சிலையுற்ற செங்கை முகிலேதென் பேரையிற் சீதரனே.

79. சீதர னேமது சூதன னேசிலை யேந்துபுய
பூதர னேபுல வோரமு தேபுவி தாங்கியகா

---

75. மாவிந்தை - சயலட்சுமி. வானவர்தம்கா - பாரிசாதவிருட்சம். பின்னை - நப்பின்னைப் பிராட்டியார். மேவு - அடைவாயாக. (பி-ம்.) 'நாயெனு நெஞ்சே'.

76. தாபதர் - முனிவர்கள், இமையோர் - தேவர். அலத்தால் - துன்பத்தால், வருந்தாது அவர்க்காக, பகையென்றது அசுரர்களுடைய பகையை, மண்டலத்து - உலகத்தில்; மண்டலத்தையுடையவெனலுமாம்; மண்டலம் - வட்டம் (பி-ம்) 'குண்டலத் தாய்தமிழ்ப் பேரையி லெங்கள் குலதெய்வமே.'

77. புராதனன் - பழையவன். சராதனம் - வில்லை. இறுத்தவன் - ஒடித்தவன்; ஒடித்தது, சீதையை மணம் புரிவதற்கு முன். கிராதனை - குகனாகிய வேடனை. மாலுமி - படகோட்டியாக.

78. கலை - கலைமான். மறுகி - வருந்தி, பகழி - அம்பு. (பி-ம்) 'சீறிநெடும்பகழிச்'.

79. புயபூதரன் - தோள்களாகிய மலைகளையுடையவன்; மலைகளைப் போன்ற தோள்களையுடையவனென்பது கருத்து. காகோதரம் - பாம்பு;

கோதர னேயன்றொ ராலிலை மேற்பள்ளி கொண்டருள்தா
மோதர னேகுல நாதா நிகரின் முகில்வண்ணனே.

80. சேரீர் செனன மெடுத்தவந் நாண்முதற் றீங்கு செய்வ
தோரீர் சடைப்பட் டுழலுந்தொண் டீர்நற வூற்றிதழித்
தூரீச னார்க்கு மிரவொழித் தேயொரு சாயகத்தால்
மாரீச னைவென்ற மால்குழைக் காதர் மலரடிக்கே.

81. புங்கவ னெம்பெரு மானெடி யோன்புடை தோள்புனையும்
சங்கவ னம்பெரு மாநிலம் போற்றுந் தயா பரன்மா
துங்க வனந்திரி யுஞ்சூர்ப் பணகை துணைமுலைகள்
வெங்க வனத்தி லறுத்தான்றென் பேரையில் வித்தகனே.

82. வித்தக னேமிப் பிரான்றிரு மாறிரி விக்கிரமன்
பத்தர்க ணெஞ்சுறை யும்பர மானந்தன் பண்டொருநாள்
மத்தக மாமலைக் கோடொடித் தான்முகில் வண்ணனென்றே
கத்தக மேயிக மேபெற லாநற் கதியென்பதே.

83. கூகங்கண் டீர்முன் வரக்கொடுங் கூற்றுங் குளிர்ந்தமணம்
வீசுங்கண் டீர்நறுந் தண்ணந் துழாய்விதி யால்விளைந்த
மாகங்கண் டீர்வினை யும்மருண் டோடு மகிழ்ந்தொருகாற்
பேசுங்கண் டீர்தண் டமிழ்ப்பேரை வானப் பிரானெனவே.

84. அன்பர்க் கருள்வ துனக்கே தொழிலடி யேங்களிந்தத்
துன்பப் படாமற் றுணைசெய்வ தென்றுகொல் சூட்டுமணி
இன்பப் பஃறலைப் பாம்பணை யிற்கண் ணிணை துயிலும்
என்பற்ப நாப முகுந்தாதென் பேரைக் கிறையவனே.

புவிதாங்கிய காகோதரமென்றது, ஆதிசேடனை.

80. சடைப்பட்டு - இணைப்புற்று. சாயகம் - அம்பு. மலரடிக்கே சேரீர்.

81. புடை - பக்கத்தில். தோள் புனையும் சங்கவன் - திருப்புயத்தில் தரித்திருக்கும் சங்கத்தையுடையவன். வெங்க வனத்தில் - கொடிய ஆயுதத்தால். இலக்குமணன் செய்த செயலை இராமன் மேல் ஏற்றிக் கூறினார்.

82. நேமி - சக்கராயுதம். மத்தகமாமலை - குவலயாபீடமென்னும் யானை. அகமே கத்து. இகமே - இவ்வாழ்விலேயே. நற்கதியென்பதை இகத்திலேயே பெறலாம்.

83. கொடுங்கூற்றும் முன்வரக் கூசும். மாகம் வினையும் ஓடும்; கண்டீர் நான்கும் அசைநிலை. எனவே பேசுவீர்களாக.

84. சூட்டுமணி - உச்சிமணிகளையுடைய. (பி-ம்) 'பாம்பணையின் கண் விழிதுயிலும்,'

85. முராரி கராவை முனிந்தான் றயாபர மூர்த்திமுக்கட்
புராரி கபால மொழித்தான் சதுமறை போற்றநின்றான்
பராரித யத்தி லிரானன்ப ரேத்தும் படியிருப்பான்
சுராரி களைப்பட வென்றாறென் பேரையிற் றூயவனே.

86. வேலிக்கு ணின்று விளைபயிர் போல விரும்புமெங்கள்
பாலிக் கொடுந்துயர் தீர்த்தளித் தாய்பகை வென்றபுய
வாலிக்கும் வேலைக்கு மானுக்கு மாய மயன்மகடன்
தாலிக்குங் கூற்றுவ னானாய்தென் பேரைத் தயாநிதியே.

87. பாரதி நாவி லுறைவோனுந் தேவர் பலருமன்பு
கூரதி காந்தி மலர்ச்சே வடியினை கூறுமைவர்
சாரதி பேரை வளர்சக்ர பாணி சரணமென்றே
மாருதிக் கீந்த திருநாம நாளும் வழுத்துவனே.

88. பேராழி வையக மெல்லா மனுமுறை பேதலியா
தோராழி யோச்சி யரசளித் தேபின் னுறுவர்பதம்
கூராழி யேந்துந் தமிழ்ப்பேரை வாழ்குல நாதனெழிற்
காராழி நீர்வண்ணனன் பேரா யிரத்தொன்று கற்றவரே.

89. சிகரந் திகழுநின் கோபுர வாசலிற் சேவிக்கநாம்
பகருந் தவமுனம் பெற்றில மோமடப் பாவையர்தம்

---

85. கராவை - முதலையை. சதுமறை - நான்குவேதங்கள். பரார் - அயலார்; பாரென்றது நீண்டது. அன்பர் ஏத்தும்படி அவர்கள் இதயத்தில் இருப்பான். சுராரிகளை - அசுரர்களை.

86. வேலை - சமுத்திரம். மான் - மாரீசன். மயன் மகள் - மண்டோதரி. வாலி முதலியவர்களுக்குக் கூற்றுவனானது இராமாவதாரத்தில். தாலி யென்றது இங்கே கணவனென்னும் பொருளையுடையது.

87. பாரதி நாவில் உறைவோன் - கலைமகள் தன் நாவிலே தங்கப் பெற்ற பிரமதேவன். அதிகாந்தி - மிக்க ஒளியையுடைய. (பி-ம்.) 'அதிகாந்த'. அர்ச்சுனனுக்குச் சாரதியென்னாது, ஐவர் சாரதியென்றது அந்தச் சாரத்தி யம் ஐவருக்கும் பயன்பட்டமை குறித்து.

88. பேராழி - பெரிய கடல். பேதலியாது - மாறாமல். ஆழியோச்சி - ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்தி. பின்பதம் உறுவர். (பி-ம்.) 'உறும்பதவி' கூர் ஆழி - கூரிய சக்கராயுதம். கற்றவர் அரசளித்துப் பின் பதம் உறுவர்; பதம் - நற்பதவி.

89. சிகரமென்றது கோபுரத்தின் உச்சியை. நகரம் - மயிர்ச்சாந்து.

தகரந் தடவு மளகா டவியிற் றவழ்ந்திளங்கால்
மகரந்த மொண்டிறைக் குந்திருப் பேரையின் மாதவனே.

90. மந்தர மாமலை மத்தாக வேலை மதித்தனைகா
மந்தர மீது புரியாம னூற்றுவர் மாயவைவர்
மந்தர ஞால மரசாள வைத்தனை வான்பகைமுன்
மந்தர சூழ்ச்சியின் வென்றாய்தென் பேரையின் மாதவனே.

91. வாமன னூற்றெண்மர் போற்றும் பிரான்மல ராள்கணவன்
பூமனை நாபியிற் பூத்தோ னடங்கப் புவியிடந்தோன்
காமனைத் தந்த திருப்பேரை வாழ்கரு ணாநிதிதன்
நாமனைச் சிந்தையில் வைத்திலர் வீழ்வர் நரகத்திலே.

92. அருங்கொடிக் கோர்கொழு கொம்பென வெம்மை யளிப்பதுஞ்செய்
திருங்கொடி யோனையு மாற்றிவிட் டாயிறு மாந்துவிம்மி
மருங்கொடித் தோங்கு முலைச்சா னகியை வருத்தஞ்செய்த
கருங்கொடிக் கோர்கணை தொட்டாய்தென் பேரையிற் காகுத்தனே.

93. அரந்தரும் வேல்விழி யாரனு ராக மகற்றியுயர்
வரந்தர வல்லவன் வானப் பிரானெங்கள் வல்வினையைத்
துரந்தர னாகவந் தஞ்சலென் றோன்றன் றுணைமலர்த்தாள்
நிரந்தரம் போற்று மவரே புரந்தரர் நிச்சயமே.

94. காண்டா வனமெரித் தான்றரித் தானென் கருத்திலன்பு
பூண்டா னெழின்மணிப் பூணா னறிவற்ற புன்மையரை

அளகாடவி - கூந்தற்காடு. இளங்கால் - தென்றல், மொண்டு - அள்ளி.

90. வேலை மதித்தனை - பாற்கடலைக் கடைந்தாய், காமம் தர மீது புரியாமல் - ஆசை தம்மைச் செலுத்த மிகுதியான காரியங்களைச் செய்யாமல், நூற்றுவர்- துரியோதனாதியர். (பி-ம்) 'நூற்றுவர்மாய்த் தனைக்கா.' ஞாலம் அரசாள மந்தரம் வைத்தனை - உலகை ஆளும் பொருட்டு அரண்மனையிலே நிலைபெற வைத்தாய். மந்தர சூழ்ச்சி - ஆலோசித்துச் செய்யும் காரியங்கள்.

91. நூற்றெண்மர் - இத்தலத்திலுள்ள தலவகார சாம வேதிகள் நூற்றெண் மர். பூமனை - பிரம தேவனை. நாபி - திருவுந்தி. இடந்தோன் - வராகாவதாரத்திலே பெயர்த்தவன். நாமனை - நாமத்தை; பெயரை.

92. (பி-ம்) 'கொம்பது போலெமைக் காப்பதுஞ்செய்'. மருங்கு - இடை. கருங்கொடிக்கு - காகாசுரனுக்கு; கொடி - காக்கை. தொட்டாய் - தொடுத்தாய்.

93. அனுராகம் - ஆசை. நிரந்தரம் - இடைவிடாமல், புரந்தரர் - இந்திர பதவிக்குரியவர்.

94. அருச்சுனன் செயலைக் கண்ணன் செயலாகக் கூறினார். அப்பிரா

வேண்டா னடியவர் வேண்டநின் றான்விரி நீர்ப்புடவி
கீண்டான் றமியனை யாண்டான்றென் பேரையிற் கேசவனே.

95. கேசவன் பேரை வளர்வாசு தேவன்கை கேசிசொல்லால்
நேச வனம்புகுந் தோர்மானை வீட்டி நிசாசரரை
வாசவன் செய்த தவத்தாற் றொலைத் தருண் மாதவன் பேர்
பேச வனந்த லிலும்வரு மோபெரும் பேதைமையே.

96. கழகா ரணத்தின் பயனறி யாத கபடனெம்மைப்
பழகாத வஞ்சனை நீக்குவித் தாயிடைப் பாவையர் தம்
குழகா வழுதி வளநாட கோவர்த் தனமெடுத்த
அழகா மகரக் குழையாய்தென் பேரையி லச்சுதனே.

97. அச்சுதன் பேரை யபிராமன் செஞ்சொ லசோதைக்கன்பாம்
மெய்ச்சுத னெங்களை யாட்கொண்ட மாயன் விசயனுக்கா
அச்சுத நந்தைக் குறித்தா னரவிந்த லோசனன்முன்
நச்சு தனஞ்சுவைத் துண்டானென் பார்க்கு நரகில்லையே.

98. இல்லைப் பதியென் றிருந்துழல் வீரெளி யேங்கள் சற்றும்
தொல்லைப் படாதருள் பேரையெம் மான்பதத் தூளிகொடு
கல்லைப்பெண் ணாக்குங் கருணா கரன்முன்பு கஞ்சன்விட்ட
மல்லைப் பொருதவ னென்றோதத் துன்பம் வராதுமக்கே.

99. வாரா யணுவெனு நெஞ்சேயஞ் சேல்வஞ் சகமகலும்
கூரா யணிந்தவன் சேவடிக் கேயன்பு கூர்ந்துமறை
பாரா யணம்பயி லூற்றெண்மர் நாளும் பரிந்துதொழும்
நாரா யணன்றிருப் பேரையெம் மான்றனை நண்ணுதற்கே.

னருளாலே அவன் வலிபெற்றமையின், என் கருத்தில் தரித்தான் - என் உள்ளத்தில் தங்கினான்.

95. புகுந்து ஓர் மானை; மான் - மாரீசன். நிசாசரர் - அரக்கர். அனந்தல் - தூக்கமயக்கம்.

96. கழகாரணம் = கழக ஆரணம் - கழகங்களிலே பயிலப்பெறும் வேதம். இடைப்பாவையர் - கோவியர். வழுதி வளநாடு - பாண்டிநாடு.

97. சுதநந்து - வெள்ளிய சங்கத்தை. குறித்தான் - முழங்கினான். அரவிந்த லோசனன் - தாமரையைப் போன்ற திருவிழிகளை யுடையவன். தனம் சுவைத்து நஞ்சை உண்டான்; தனமென்றது பூதனையின் நகிலை.

98. தொல்லைப்படாது - துன்புறாமல். மல்லை - மற்போரில் வல்லவர்களை.

99. மனத்தை அணுவென்பது தார்க்கிகர் மதம். அவன் சேவடிக்கே அன்பு கூராயென்க. கூர்ந்து - நுணுகியோராய்ந்து. மறை பாராயணம் பயில் - வேத பாராயணம் செய்யும். நண்ணுதற்கு வாராய்.

100. பதமும் பதச்சுவை யுங்கவிப் பாகமும் பாகச்செஞ்சொல்
விதமும் விதிவிலக் கில்லா விடினும் வியந்தருளற்
புதமென் றளிரிளந் தேமாவும் பூகப் பொழிலுமழைக்
கிதமென் பசுந்தென்றல் வீசுந்தென் பேரைக் கிறையவனே.

வாழ்த்து

பார்வாழி நூற்றெண்ப பதிவாழி மாறன் பனுவலியற்
சீர்வாழி நூற்றெண்மர் நீடூழி வாழியிச் செந்தமிழ்நூல்
ஏர்வாழி மன்ன ரினிதூழி வாழியெந் நாளுமழைக்
கார்வாழி பேரைக் குழைக்காதர் வாழியிக் காசினிக்கே.

---

100. பதம் - செய்யுளமைதி. சுவை - சொற்சுவை பொருட்சுவைகள். கவிப்பாகம் - நாளிகேர பாகம் முதலிய செய்யுட் பாகங்கள், விதிவிலக்கு இல்லாவிடினும் - 'விதி இது விலக்கு இது' என்ற வரையறை என்பாக்களில் இல்லாவிடினும். வியந்து அருளுகின்ற அற்புதனே. பூகப்பொழில் - கமுகஞ்சோலை.

வாழ்த்து: நூற்றெண்பதி - நூற்றெட்டுத் திருப்பதிகள், மாறன் பனுவல் - நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி முதலியன, நூற்றெண்மர் - இத்தலத்திலுள்ள தலவகார சாமவேதிகள் நூற்றெண்மர். ஏர் - அழகு.



நூல் நிலையம்